**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு : 6-6-2016* Issued : 6-6-2016

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, பிப்ரவரி 18, 2016—தொகுதி 92—எண் 3**

**Thursday, the 18th February, 2016—Volume 92—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 18–2–2016

### உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கல் தீர்மானம்—** | |
| ஜம்மு—காஷ்மீர் மாநிலம், சியாச்சின் பகுதியில் ஏற்பட்ட பனிச் சரிவில் இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழப்பு | 659-660 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 658-716 |
| **3. விதி 110—ன்கீழ் அறிக்கை—** | |
| மூத்த குடிமக்கள் சென்னை மாநகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கும் வசதி குறித்த முதலமைச்சரின் அறிக்கை | 716-718 |
| **4. மூத்த குடிமக்கள் சென்னை மாநகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கும் வசதி—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—** | 718-732 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 718-719 |
| திரு. உ. தனியரசு | 720-723 |
| *திரு. பி.வி. கதிரவன் | 723-724 |
| திரு. ஆ. நாராயணன் | 724-725 |
| திரு. ஆ. ராமசாமி | 725-726 |
| முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 726 |
| *திரு. க. பாண்டியராஜன் | 727-728 |
| *டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் | 728 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 728-731 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 732-734 |
| **6. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பொது நிறுவனங்கள் குழு | 734-735 |
| **7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016 | 735-736 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 735-736 |
| **8. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்**—தொடர்ச்சி | 736-850 |
| *திரு. வி.சி. சந்திரகுமார் | 736, 737 743-751 |
| மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் | 737-738, 742, 743, 748 |
| *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 738 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 738, 739, 740, 746-748, 778-781, 785,786,788, 789, 809, 813, 814, 826, 838, 839, 843 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 740-742, 769, 770, 833 |
| *மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | 744, 745, 794, 795, 807 |
| மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 744, 747, 800-804, 810-812, 817, 818, 840, 841 |





| | பக்கங்கள் |
|---|---|
| *திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி | 752-766 |
| செல்வி கே. பாலபாரதி | 766-768,771, 774, 775, 777, 778,781-790, 796-800, 803-807, 843 |
| *மாண்புமிகு திருமதி பா. வளர்மதி | 768-770, 772, 777, 782, 805, 806 |
| மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா | 770-772, 775 |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர் | 772,773, 824, |
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 775, 776, 839, 842 |
| மாண்புமிகு திரு. ப. மோகன் | 787 |
| மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 790-792, 795, 797-799, 831 834, 835 |
| *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | 792-794,796, 799-800 |
| திரு. சு. குணசேகரன் | 808-810 814-819 821-844 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 818-822, 829, 830 |
| மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 844 |
| *திருமதி சீ. வளர்மதி | 844-850 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 850-853 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மன்மத, மாசி 6, திருவள்ளுவர் ஆண்டு–2047

## 2016 பிப்ரவரி 18, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு."

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

## 1. இரங்கல் தீர்மானம்

### ஜம்மு–காஷ்மீர் மாநிலம், சியாச்சின் பகுதியில் ஏற்பட்ட பனிச் சரிவில் இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானம். ஜம்மு–காஷ்மீர் மாநிலம், சியாச்சின் பகுதியில் இந்திய நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்களான ஹவில்தார் திரு. எம். ஏழுமலை, ஹவில்தார் திரு. எஸ். குமார், சிப்பாய் திரு. ஜி. கணேசன் மற்றும் சிப்பாய் திரு. என். ராமமூர்த்தி ஆகியோர் உட்பட 10 இந்திய இராணுவ வீரர்கள் 3–2–2016 அன்று ஏற்பட்ட பனிச் சரிவில் சிக்கி உயிரிழந்தனர் என்ற துயரச் செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. இந்தச் துயரச் சம்பவத்தால் தங்களது இன்னுயிரை இழந்திட்ட

[பேரவைத் தலைவர்] [2016 பிப்ரவரி 18

இராணுவ வீரர்களின் குடும்பத்தினர்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த நான்கு இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு தலா பத்து இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இத்துயரச் சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**61—**

### புதை மின்வடம்

***35630—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சியிலுள்ள மின் கம்பிகளை புதை மின்வடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2016 பிப்ரவரி 18]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சியில் உயர் அழுத்த மின் பாதைகள் சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரமும் மற்றும் தாழ்வு அழுத்த மின் பாதைகள் 40 கிலோ மீட்டர் தூரமும் உள்ளன. இந்த மின் பாதைகளின் வழியாக தேவகோட்டை நகராட்சிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சிகளில் மேல்நிலை மின் கம்பிகளை பூமிக்கு அடியில் புதை மின்வடங்களாக மாற்றியமைக்க, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

தேவகோட்டை நகராட்சியில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கு அடியில் புதை மின்வடங்களாக மாற்ற, வைப்பு பங்களிப்பு வேலைத் திட்டத்தின்கீழ் (Deposit Contribution Works) பணம் செலுத்தினால், மேல்நடவடிக்கை எடுக்க இயலும். மேலும், தற்போது இது தொடர்பாக தேவகோட்டை நகராட்சியிலிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகக் கோயிலாகத் திகழக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 68–வது பிறந்த நாளில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்லாண்டு, பல நூறு ஆண்டு எல்லாம் வல்ல இறைவன் அருளால் உடல் நலத்தோடு வாழ இறைவனை வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் கொடுத்து நல்லன செய்யும் வல்லமை மிக்கவர் நம் அம்மா! இல்லா மக்கள் செல்வம் செழிக்க, சொல்லும் செயலும் நம் அம்மா! தாயின் இதயம் கோயில் வடிவம், தமிழகம் காக்கும் பெருமை வரமே, ஓயா நன்மை மேன்மை செய்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி நிரந்தரமே என்று சொல்ல விழைகிறேன்.

[2016 பிப்ரவரி 18

எனது, காரைக்குடி தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை நகராட்சியில், மக்கள் நெருக்கமாக இருக்கக்கூடிய, வாகனங்கள் அதிகமாகச் செல்லக்கூடிய மெயின் கடை வீதிப் பகுதியின் இருபுறமும் உள்ள மின் கம்பங்கள் மக்களுக்கு இடையூறாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, தேவகோட்டை நகராட்சியில் மின் கம்பிகளை அகற்றி, புதை மின்வடங்களாக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நகராட்சி நிருவாகத்திலிருந்து அதற்கு நிதியொதுக்கி, deposit செய்கின்றபட்சத்தில், அந்தப் பணியைச் செய்து தருவதாக அறிவித்திருக்கின்றார்கள்.

வருங்காலங்களிலாவது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பழமைவாய்ந்த தேவகோட்டை நகராட்சியிலும், காரைக்குடி நகராட்சிப் பகுதியிலும், இதுபோன்ற புதை மின்வடங்களை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நமது மாநிலத்தைப் பொறுத்தளவிலே, மின் பாதைகளில், மேல்நிலை மின் பாதைகளை பூமிக்கடியில் புதை மின் வழித்தடங்களாக மாற்றுவதற்காக, சென்னையிலே மட்டும்தான் இந்தத் திட்டம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற நகராட்சிப் பகுதிகளில் இன்னும் அது விரிவுபடுத்தப்படவில்லை. சென்னையிலே மட்டும் RAPDRP திட்டத்தின் மூலமாக இன்றைக்கு 710 கிலோ மீட்டர் தூரம் புதை மின்வடங்களாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டு, அதிலே 305 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, LT line–ஐப் பொறுத்த அளவிலே, 266 கிலோ மீட்டர் தூரம் புதை மின்வடங்களாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டு, அதிலே 46 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பணிகள் முடிவடைந்து, மற்ற பணிகள் இப்பொழுது தொடர்ந்து



2016 பிப்ரவரி 18]

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளையெல்லாம் விரைவுபடுத்தி, செய்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகள் விரைவாக முடிக்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைப் பெருநகரத்தைத் தவிர, இந்தப் புதை மின்வடங்களாக மாற்றுகின்ற திட்டத்தை, புயலால் அடிக்கடி பாதிக்கப்படும் கடலூர் மாவட்டத்திலும், வேளாங்கண்ணியிலும் நடைமுறைப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, 360 கோடி ரூபாய் செலவிலே கடலூர் மாவட்டத்திலும், வேளாங்கண்ணியிலும் அவற்றை புதை மின்வடங்களாக மாற்றுவதற்கு வேண்டிய திட்ட மதிப்பீடுகள் உருவாக்கப்பட்டு, உலக வங்கியினுடைய நிதி உதவி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. உலக வங்கியின் நிதி கிடைக்கப்பெற்றவுடன், அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, புதை மின்வடங்களாக மாற்றுகின்ற திட்டம், சென்னைப் பெருநகரம், கடலூர் மற்றும் வேளாங்கண்ணியைத் தவிர, மற்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படுமேயானால், அப்போது தேவகோட்டைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற காலங்களிலே, தேர்தலுக்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே மீண்டும் அமையவிருக்கும் புதிய ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, அப்பொழுது தேவகோட்டை நகரத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிதான் தொடர்ந்து தமிழகத்திலே இருக்கும். அப்பொழுது, எங்களுடைய காரைக்குடி, தேவகோட்டை நகராட்சிப் பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் அதைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதற்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

[2016 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகரிலிருந்து தஞ்சை செல்லக்கூடிய சாலையில், பாளையம் என்ற பகுதியில் நெடுஞ்சாலைத் துறையினுடைய சாலைகளை அகலப்படுத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக அங்கே இருக்கக்கூடிய மின்சாரக் கம்பங்களை அகற்றி, வேறு இடத்தில் வைக்க வேண்டுமென்று நெடுஞ்சாலைத் துறைக்குப் பணமும் செலுத்தியிருக்கிறார்கள். இன்னும் அந்தப் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கக்கூடிய காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அந்த மின் கம்பங்களையெல்லாம் அகற்றி, ஓரமாக வைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே சாலைகள் அகலப்படுத்தப்பட வேண்டுமோ, சாலைகளைச் சீரமைக்க வேண்டுமோ, அங்கெல்லாம் அந்தப் பணிகளை மேற்கொள்ளும்போது, இடையூறாக இருக்கின்ற மின் கம்பங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, அதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்தப் பணிகள் செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே அந்தப் பணியை மேற்கொள்ள உரிய பணத்தையும் கட்டிவிட்டார்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, அதற்குரிய பணத்தையும் கட்டிவிட்டபடியால், அந்தப் பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.



2016 பிப்ரவரி 18]

*முற்பகல் 10–10*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக மாற்றிக் காட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள் கேட்டதைப்போன்று, அனைத்து நகராட்சிகளிலும் புதைவட மின்தடங்கள்மூலம் மின் இணைப்பு கொடுத்து, மின்சாரம் விநியோகம் செய்தால் நன்றாக இருக்கும். அது நமது அடுத்த ஆட்சியில் செய்து தரப்படும் என்று மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 2016 ஆம் ஆண்டிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சி அமைப்பது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து, நகராட்சிகளைத் தொடர்ந்து, அனைத்துக் கிராமங்களிலும் புதைவட மின்தடங்கள் அமைத்து, மின்சாரம் விநியோகம் செய்தால், தமிழகம், சிங்கப்பூருக்கு இணையாக விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேனி மாவட்டம், கொட்டக்குடி ஆறு, வைகை ஆறு, முல்லைப் பெரியாறு ஆறு, வராக நதி போன்ற அதிகமாக ஆறுகள் ஓடும் நீர்நிலைகள் நிரம்பிய மாவட்டமாக விளங்குகிறது. அந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை அடிப்படையில், கூடுதல் மின் இணைப்புகள் வழங்கி, இலவச மின்சார விநியோகமோ அல்லது ரூ.50,000/-, ரூ.20,000/- கட்டுபவர்களுக்கு கூடுதல் மின் இணைப்புகள் கொடுத்தால், விவசாயப் பெருக்கு அதிகமாக இருக்கும்; விவசாயிகளும் நன்றாக இருப்பார்கள். அதை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, தேனி மாவட்டத்திற்குக் கூடுதலாக இலவச மின்சாரம் விநியோகம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குப் பதிவு மூப்பு

[2016 பிப்ரவரி 18

அடிப்படையில் இலவச மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அந்த விதிமுறையின்படி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு, இலவச மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "இன்னும் சற்று கூடுதலாக மின் இணைப்புகள் வழங்கி, மின்சாரம் விநியோகம் செய்ய வேண்டும்" என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, விவசாயிகளுக்குக் கூடுதலாக மின் இணைப்புகள் வழங்கி, மின்சாரம் விநியோகம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியிலுள்ள வாலாந்தூர், எரவார்பட்டி, பாப்பாபட்டி, தொட்டப்பநாயக்கனூர் மற்றும் வண்டாரி ஆகிய ஐந்து இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆணையிட்ட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு முதற்கண் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட ஐந்து பகுதிகளுள், வாலாந்தூரில் பணிகள் நடைபெற்று வருகின்றன; அவை முடியும் தருவாயில் உள்ளன. மீதமுள்ள எரவார்பட்டி, பாப்பாபட்டி, தொட்டப்பநாயக்கனூர் மற்றும் வண்டாரி ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையம் அமைப்பதற்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு எப்பொழுது பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியிலுள்ள வாலாந்தூர், பாப்பாபட்டி உள்ளிட்ட பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



2016 பிப்ரவரி 18]

கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அந்தப் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதிகளில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளை விரைவுபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் தீவுப் பகுதியில் புயல் காலங்களில் மட்டுமல்லாமல், சாதாரண நாட்களிலும் காற்று வேகமாக வீசுவதன் காரணமாக, மின்வடங்களில் பாதிப்புகள் ஏற்படக்கூடிய ஒரு சூழல் இருக்கின்றது. எனவே, மண்டபம் முதல் இராமேஸ்வரம் வரையுள்ள பகுதிகளில் புதைவட மின்தடங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் அடிக்கடி இயற்கைச் சீற்றங்களினால் பாதிப்புக்குள்ளாகும் ஒரு மாவட்டமாகும். நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் மீண்டும் புதிய ஆட்சி அமையும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அந்தப் புதிய ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று கனிவுடன் பரிசீலிக்கப்படும். கடலூர், வேளாங்கண்ணி போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து புதைவட மின்தடங்கள் அமைப்பது போன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கும் புதைவட மின்தடங்கள்மூலம் மின்சாரம் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, கோட்டூரில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தரப்படும் என்று அறிவித்தார்கள். அதற்கான இடம் கருப்புகிளார் ஊராட்சியில் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் பணிகள் தொடங்கவில்லை. அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, அப்பணிகளை எவ்வளவு விரைவாகத் தொடங்க முடியுமோ, அவ்வளவு விரைவாகத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**62—**

## மையத் தடுப்புச் சுவர்

***48036—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை உபகோட்டம், ஆரல்வாய்மொழி–நெடுமங்காடு சாலையில் கி.மீ. 31/2–32/10 வரை மையத் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை உபகோட்டம், ஆரல்வாய்மொழி–நெடுமங்காடு சாலையில் கி.மீ. 31/2–லிருந்து கி.மீ. 32/10 வரை மையத் தடுப்புச் சுவர் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**63—**

## தொழிலாளர் மேம்பாட்டுக் குழு

***51689—திரு. ஜேஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிலாளர் மேம்பாட்டுக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிலாளர் அலுவலர் அலுவலகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இதனைக் கண்காணிக்கும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்

[2016 பிப்ரவரி 18

தலைமையில் மாவட்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, மாதந்தோறும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிலாளர் அரசு மேம்பாட்டுக் குழுவினை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கணக்கான தொழிலாளர் வர்க்கம் தங்கள் பணிகளைச் செய்துகொண்டு இருக்கின்றது; அதற்குரிய சங்கங்களும் இருக்கின்றன. ஆனால், தொழிலாளர்கள் தங்கள் பணிக்கேற்ப சரியான P.F., மருத்துவப் படிகள், இதர பலன்களை பெற முடிவதில்லை. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவற்றிற்கான கண்காணிப்புக் குழுக்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தக் குழுக்கள் சரியாக பணிகளை மேற்கொண்டால், தொழிலாளர் பிரச்சினைகள், போராட்டங்கள் ஆகியவை வரும்பொழுது, உடனடியாக அக்குழுக்களின் கூட்டங்களைக் கூட்டி, அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவேதான், இந்தக் கேள்வியை நான் தொடுத்தேன். அத்தகைய குழுக்கள் இருந்தாலும்கூட, பிரச்சினைகள் வருகின்றபொழுது, மக்கள் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தினுடைய தலைவர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவினை அமைத்தால் மிகவும் நன்றாக இருக்கும். அதற்காக நடவடிக்கை எடுப்பார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாவட்டக் குழுக்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைச் சேர்த்து ஒரு குழு அமைக்கப்படுமா? அப்படிச் செய்தால், நிச்சயமாக தொழிலாளர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்ற வகையிலே இந்தக் கேள்வியை முன்வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2016 பிப்ரவரி 18]

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். என்றாலும்கூட, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் ஓர் அலுவல் ஆய்வுக் கண்காணிப்புக் குழுவைச் சிறப்போடு அமைத்திருக்கிறது. அந்தக் கண்காணிப்புக் குழுவிலே அரசுப் பிரதிநிதிகளாக 7 நபர்களும், நிருவாகத் தரப்புப் பிரதிநிதிகளாக 7 நபர்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளாக 7 பேர்களும் உள்ளனர். அதில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பிற்காலங்களில் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, தொழிலாளர்களுடைய நலனிலே நாட்டம் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் தொழிலாளர்கள், வேலையளிப்போர் போன்றோரையெல்லாம் சேர்த்து அந்தக் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அக்கண்காணிப்புக் குழுவில் அவர்கள் சென்று சேர வேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கண்காணிப்புக் குழுவிற்கென்று சில பணிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அக்குழு பதிவு பெற்ற தொழிலாளர்களின் கேட்பு மனுக்களில் உள்ள விவரங்களை சரிபார்க்க வேண்டும். ஒரு வேளை தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய நலன்கள் கிடைக்காமல் இருக்குமேயானால், அவற்றையும் கண்காணிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கிற கண்காணிப்புக் குழுக்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மட்டும் இந்தக் குழு 17 முறை கூட்டப்பட்டு, அதனுடைய பணிகள் சிறப்போடு நடைபெற்று கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்திலே மட்டும் 59,679 தொழிலாளர்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மாவட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மூலமாக 47,34,65,000 ரூபாய் மதிப்பிலான தொழிலாளர் நலத் திட்ட உதவிகள் 1,38,078 பயனாளிகளுக்குச் சென்று சேர்ந்திருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பது இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஆகும். அங்கே உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனை சரியாக செயல்படவில்லை. மேலும், 2012 ஆம் ஆண்டு மத்தியில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசு, கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 கோடி ரூபாய் செலவில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைக்க அனுமதி அளித்தது. ஆனால், மாநில அரசு அம்மருத்துவமனை கட்டடம் கட்டுவதற்குரிய நிலத்தினை, உரிமத்தைக் கொடுக்கவில்லை. ஆகவே, தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே, இனிமேலாவது மத்திய அரசு ஒதுக்கிய 100 கோடி ரூபாய் நிதியை வைத்து, புதிய இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்டுவதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தலையிட்டதன் காரணத்தினாலேதான், இன்றைக்குத் தமிழ்நாட்டின் பல இடங்களிலே இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, கோயம்புத்தூரிலே பல ஆண்டுக் காலமாக பல்வேறு பிரச்சினைகள் இருந்தபொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதிலே தலையிட்டதன் காரணமாக, அன்றைக்கு மத்திய அரசு, 'நாங்கள் கட்டிக் கொடுக்கிறோம்; மாநில அரசு பாதி செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று சொன்னது. ஆனால்,





மாண்புமிகு அம்மா அவர்கள், 'முழுமையாக இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளை மத்திய அரசாங்கம் கட்டித் தந்து, அதை மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்குமேயானால், அதை ஏற்றுக்கொள்வதற்கு தயார்' என்று தமிழ்நாடு அரசின் சார்பாக தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான், இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோன்று, காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சிக் காலத்திலே இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்தியில் பல்வேறு கட்சிகளை உள்ளடக்கி காங்கிரஸ் தலைமையில், கூட்டணி ஆட்சி நடைபெற்றபோது, மத்திய அமைச்சர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்தார்களே தவிர, அந்த அறிவிப்புக்குண்டான எந்தவிதமான செயல்பாட்டையும், நிலைப்பாட்டையும் அவர்கள் எடுக்கவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, கன்னியாகுமரி மாவட்டத்திலே இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைக்க இடம் தரப்பட்டால், அது நடைமுறைக்கு வரும் என்று சொன்னார்கள். அதற்கான கள ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**64—**

## அங்கன்வாடி மையக் கட்டடம்

***55374—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், கண்ணாமூச்சி, தார்காடு பகுதிகளிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2016 பிப்ரவரி 18

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், கண்ணாமூச்சி, தார்காடு பகுதிகளில் மூன்று அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் கண்ணாமூச்சி மற்றும் தார்காடு மையங்கள் அனைத்து வசதிகளுடன் அரசுக் கட்டடத்தில் நல்ல நிலையில் இயங்கி வருவதால், இந்த மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவை எழவில்லை. கண்ணாமூச்சி பகுதியிலுள்ள உப்புக்கல்லூர் மையத்திற்கு புல எண் 277/2—ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, ஊரக வளர்ச்சி முகமைமூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

*முற்பகல் 10—25*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்களுடைய கேள்விக்கு, அங்கே வேலை நடந்து கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆரணி தொகுதி, தேவிகாபுரம், நாவல்பாக்கம், கொங்கராம்பட்டு, ஆதனூர் காலனி, மாமண்டூர், மட்டதாரி காலனி போன்ற பகுதிகளிலே அங்கன்வாடி கட்டடங்கள் புதிதாகத் தேவைப்படுகின்றன. அங்கே இருக்கக்கூடிய குழந்தைகள் வாடகைக் கட்டடத்திலே தங்கிப் படிக்கின்றார்கள். 2014—2015 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து கட்டிக்கொள்ளலாம்' என்று கூறினார். என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 5 ஆண்டுகளிலே முழுவதுமாக அங்கன்வாடிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. கூடுதலாக இந்த இடங்களுக்கு அங்கன்வாடிக்



2016 பிப்ரவரி 18]

கட்டடங்கள் தேவைப்படுவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இருக்கின்ற காலங்களிலே அதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதற்கு வழிவகை இருக்கின்றதா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இருக்கிற காலங்களிலே' கிடையாது; 'இருந்த காலத்திலேயே' மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 15,313 அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு 601 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 'இருக்கும் காலத்தில்' அல்ல; மாண்புமிகு அம்மா அவர்கள்தான் எந்தக் காலத்திலேயும் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்து திட்டங்கள் தீட்டுவார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**65—**

### பல்கலைக்கழக இருக்கை

***56277—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் பல்கலைக்கழகத்தில் தந்தை பெரியார் பெயரில் "இருக்கை" உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தந்தை பெரியார் அவர்களுடைய நினைவாக, பெரியார் பல்கலைக்கழகம் சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய நான்கு

[2016 பிப்ரவரி 18

மாவட்டங்களின் உயர் கல்வியினுடைய வளர்ச்சிக்காக பெரியார் பல்கலைக்கழகம் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'பெரியார் பல்கலைக்கழகத்தில், பெரியார் பெயரில் இருக்கை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா' என்ற ஒரு கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். இருக்கை என்பது, சமூகத்திற்குப் பங்களிப்பு செய்த அறிஞர்கள், தலைவர்கள், புலவர்கள் பெயர்களில் பல்கலைக்கழகத்தில் இருக்கை (Chair) நிறுவி, அவர்களைப்பற்றியும், அவர்களின் சமூகத் தொண்டினைப்பற்றியும், அவர்களது வாழ்க்கைக் குறிப்புகளையும், ஆராய்ச்சிகளைப்பற்றியும், நூல்களைப்பற்றியும் மாணவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது; மற்றும் இதுகுறித்து படிப்புகளும் வழங்கப்படுகின்றன. வெளி மாநிலங்களில் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் மொழி, பண்பாடு தொடர்பான இருக்கைகளும் தொடங்கப்பட்டுள்ளன. இந்த இருக்கைகள்மூலம் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், ஆய்வுகள், சிறப்புப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. இந்த இருக்கைகள் தனியாரின் நிதியுதவியுடனோ, மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடனோ தொடங்கப்படுகின்றன. நன்கொடையாகப் பெறப்பட்ட தொகை மற்றும் அரசின்மூலம் ஒதுக்கப்பட்ட, பெறப்பட்ட நிதியை வைப்புத் தொகையாக-fixed deposit ஆக வங்கியில் வைத்து, அதன்மூலம் கிடைக்கும் வருவாய் இப்பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. தமிழகப் பல்கலைக்கழகங்களில் திருவள்ளுவர், பெரியார், அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், டாக்டர் அம்பேத்கர், குருநானக், பாரதியார், பாரதிதாசன் போன்ற பெயர்களில் இருக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இருக்கைகளில் பேராசிரியர்களாகப் பணிபுரிபவர்கள், நிரந்தரப் பணியிலோ, தற்காலிக பணியிலோ, தொகுப்பூதிய அடிப்படையிலோ பல்கலைக்கழகங்கள் உருவாக்கிய விதிகளுக்கு ஏற்ப பணிபுரிந்து வருகிறார்கள். ஆகவே, பெரியார் பல்கலைக்கழகத்தில் தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் பெயரில் இருக்கை ஒன்று ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ளது. மேற்படி இருக்கைக்கு பெரியார் பல்கலைக்கழகம் சார்பில் வைப்பு நிதியாக ரூ.50,000/– வங்கியில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த இருப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையானது, தந்தை பெரியார் குறித்த வரலாறு, சிந்தனைகள், சிறப்பு சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள், அவரது கொள்கைகள் மற்றும் அவரைப் பற்றிய ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கிற கேள்விக்கு—பெரியார் பல்கலைக்கழகத்தில் ஏற்கெனவே பெரியார் பெயரில் இருக்கை உருவாக்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருவதால், மீண்டும் பெரியார் பெயரில் இருக்கை ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2016 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடும் மக்கள் மூடம் ஒழித்து நாடு காத்த மாமேதை, ஏடும் வெற்றி நாட வைத்த ஈடில்லாத சுடர் பாதை, ஞானத்தால் இருட்டைக் கிழித்து வெளிச்சம் படைத்தவர் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மானம் காக்க புரட்சி படைத்து புதுமைகள் படைப்பவர் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணும் எழுத்தும் பெண்ணிற்குத் தந்து பெண்ணியம் காக்கும் நம் அம்மா அவர்கள். நாடு போற்றும் நல்லறம் வாழ்த்தும் சமூக நீதிப் பெரியார் நம் அம்மா அவர்கள்.

*முற்பகல் 10–30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெரியார் பல்கலைக்கழகத்தில் தந்தை பெரியார் பெயரில் இருக்கை இருக்கின்றது என்று இங்கு எடுத்துக் கூறினார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் தாய் பல்கலைக்கழகமாகத் திகழும் சென்னைப் பல்கலைக்கழகத்தில், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களால், அண்ணா ஆய்வு மையம் என்று ஒரு துறை உருவாக்கப்பட்டு, அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்பாக அது செயல்பட்டு வருவதைப்போல், இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகச்

[2016 பிப்ரவரி 18

சிறப்பாகச் செயல்பட்டுவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், பெண் உரிமைக்காகவும், தீண்டாமை ஒழிப்பிற்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், சமூக நீதிக்காகவும் போராடிய தந்தை பெரியார் அவர்களுக்கு, சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில், பெரியார் ஆய்வு மையம் ஒன்றை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘சென்னைப் பல்கலைக்கழகத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரில் ஓர் ஆய்வு மையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போல, பெரியார் பல்கலைக்கழகத்திலும் ஓர் ஆய்வு மையம் அமைக்க வேண்டும்’ என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ‘இருக்கை’ என்பதே ஆய்வு செய்வதைப் பற்றித்தான். ஆய்வு இருக்கை என்பது, நம்முடைய சமூகத்திற்குத் தொண்டாற்றிய பெரியவர்களைப் பற்றிய கருத்துகள், கட்டுரைகள், பேச்சுப் போட்டிகள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை நடத்தி, அவர்களுடைய பங்களிப்பை மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் ஏற்பாடு செய்யப்படுகின்றது. அந்த வகையில், பெரியார் பல்கலைக்கழகத்திலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கோரிக்கையின் அடிப்படையில், மீண்டும் அதை மிகைப்படுத்தி, நல்ல முறையில் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உதவி செய்யும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம்



2016 பிப்ரவரி 18]

புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களில், பிற நாடுகளில்கூட, தமிழ்மொழியைப் பரப்ப வேண்டும்; தமிழ் மொழியை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தமிழ்க் கல்வி வளர பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அந்த வகையில், முதல் நடவடிக்கையாக டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட, 2003 ஆம் ஆண்டு, 50 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கிய முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வெளி மாநிலங்களில்கூட தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டுமென்ற நோக்கத்தோடு, சிறப்பு வாய்ந்ததொரு நடவடிக்கையாக, திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைக்கு 3 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு நிதியுதவியாக ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாயை வழங்கிய முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பிற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தொல்காப்பியம் குறித்த பயிலரங்கங்கள், கருத்தரங்குகள் நடத்துதல் போன்ற பல்வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகள் இந்த ஆய்வு இருக்கையின்மூலம் மேற்கொள்ள வேண்டுமென்பதற்காக, இதற்கான உதவித் தொகையாக தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 50 இலட்சம் ரூபாயை வழங்கிய முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

[2016 பிப்ரவரி 18

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் உலகத்தையே புரட்டிப் போட்ட, புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பான Gravitational waves – புவி ஈர்ப்பு அலை சார்ந்த ஆய்வுக் கூடம் ஒன்று இந்தியாவில் உருவாக்கப்படும் என்று பிரதமர் அறிவித்திருக்கிறார். Switzerland–ல் உள்ள Berne ஆய்வுக் கூடத்திற்கு நிகரான ஓர் ஆய்வுக் கூடம் இந்தியாவில் உருவாக்கப்பட வேண்டியிருக்கிற நேரத்தில், தலைசிறந்த பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழகத்தில் இந்த ஆய்வுக் கூடத்தை அமைக்க நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிரதமர் அவர்கள் இப்பொழுதுதான் அதை அறிவித்திருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அண்ணா பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவில் ஒரு தலைசிறந்த பல்கலைக்கழகமாக அதை உருவாக்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு நம்முடைய அண்ணா பல்கலைக்கழகத்தில் EDUSAT என்ற முறையில், புதிய கல்விக் கொள்கையில், புதிய முறையில் கல்வியைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகம் பல சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அண்ணா பல்கலைக்கழகத்தில் தெரிவித்து, எதிர்காலத்தில் அதுபோன்ற ஒரு ஆய்வுக் கூடத்தை ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2016 பிப்ரவரி 18]

**66—**

## நியாய விலைக் கடை கட்டடம்

***54714—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தருமபுரி நகராட்சி, 1 முதல் 5 வரையிலான வார்டுகளிலுள்ள நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி தொகுதி, தருமபுரி நகராட்சியில் 1 முதல் 5 வரையிலான வார்டுகளிலுள்ள நியாய விலைக் கடைகளில், 3 நியாய விலைக் கடைகள் தருமபுரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையாலும், ஒரு நியாய விலைக் கடை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்பட்டுவருகின்றன. தருமபுரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்குச் சொந்தமாக அடிமனை இல்லாத நிலையில், இக்கடைகள் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இக்கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அடிமனை ஒதுக்கீடு செய்து தருமாறு தருமபுரி நகராட்சி ஆணையருக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. அடிமனை கிடைக்கும்பட்சத்தில், சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து விரைவாகப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகராட்சிக்குட்பட்ட அனைத்து கூட்டுறவு சொசைட்டிகளின் மூலமாகவும், நகராட்சியின் மூலமாகவும் நியாய விலைக் கடைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எந்தவொரு கடைக்கும் சொந்தக் கட்டடம் இல்லாததால், இந்த அரசு அந்தக்

[2016 பிப்ரவரி 18

கடைகளுக்குச் சொந்தமாக அடிமனையைத் தேர்வு செய்து, உடனடியாகக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தற்பொழுது வாடகைக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் நியாய விலைக் கடைகளில், போதிய வசதியில்லாத காரணத்தால், மக்கள் பொருட்களை வாங்கிச் செல்ல நிறைய சிரமம் இருக்கின்றது. கோடைக் காலங்களில் மக்கள் வெயிலில் நின்று பொருட்களை வாங்கமுடியாத சூழ்நிலையும் உள்ளது. ஆகையால், தற்போது புதிய கட்டடம் கட்ட இயலவில்லை என்றாலும், மக்கள் வசதியாக நின்று பொருட்களை வாங்கக்கூடிய அளவிற்கு, வசதியான வாடகைக் கட்டடங்களைத் தேர்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தருமபுரி நகராட்சி, சந்தைப்பேட்டையில் நகராட்சி மூலமாக புதியதாகக் கட்டடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் புதிய கட்டடத்தில், அப்பகுதியிலுள்ள 3, 4, 5 மற்றும் 6–வது வார்டுகளுக்கான நியாய விலைக் கடைகள் வைக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, அந்தக் கட்டடத்தில் மேற்கண்ட பகுதிகளுக்கான நியாய விலைக் கடையை வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில், மானிதஹள்ளி ஊராட்சியில், சேஷம்பட்டியான்கொட்டாய், குருமுட்டியான்கொட்டாய் ஆகிய இரண்டு இடங்களில் நியாய விலைக் கடைகள் வனத் துறைக்குத் சொந்தமான கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தற்போது வனத் துறையினர் அந்தக் கட்டடத்தைக் காலி செய்யச் சொல்கிறார்கள். ஆகவே, அந்த 2 கடைகளுக்கும் வேறு இடங்களில் கட்டடம் கட்டி, நியாய விலைக் கடைகளை இயங்கச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதியில், மாண்புமிகு



2016 பிப்ரவரி 18]

உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 9 நியாய விலைக் கடைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல; இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, தமிழ்நாடு முழுவதும் 1,394 நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தருமபுரி மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 36 கடைகள் இன்றைக்குப் புதியதாகக் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நகராட்சியின் சார்பாக புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்ற வளாகத்தில் நியாய விலைக் கடைகள் இயங்கினால், அந்தப் பகுதி மக்களுக்கு ஏதுவாகவும், நல்லதொரு வாய்ப்பாகவும் இருக்கும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இதுகுறித்து உரிய முறையில் ஆய்வு செய்து, துறையின் சார்பாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், நகராட்சி ஆணையாளர் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று, வனத் துறையில் இருக்கின்ற 2 கட்டடங்களைக் காலி செய்யச் சொல்வதாகவும் சொல்லியிருக்கின்றார். அந்தப் பகுதிக்கு அருகில், மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவில் வேறு இடம் இருக்கிறதா என்று ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், மக்கள் சிரமப்படாமல் நியாய விலைப் பொருட்களை வாங்கும் அளவிற்கு, உரிய இடத்தில்தான் நியாய விலைக் கடைகள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், தமிழ்நாடு முழுவதும் குறிப்பிட்ட இடங்களில் நகரும் நியாய விலைக் கடைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10–40

இன்னும் சொல்லப்போனால் உலகத்திலும் சரி, இந்தியாவிலும் சரி, எந்த ஒரு முதலமைச்சரும் நடவடிக்கை எடுக்காத அளவிற்கு 70 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற மலைக் கிராமங்களுக்குக் கொண்டுபோய் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு விலையில்லாப் பொருட்களைக் கொடுக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக இன்றைக்கு மலைக் கிராமங்களில் உள்ள மக்களுக்கு அவை வழங்கப்பட்டு

[2016 பிப்ரவரி 18

வருகிறது. அதேமாதிரி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிற இந்தக் கோரிக்கைகள் விரைவாக துறைரீதியாகப் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மழைக் காலங்கள், வெயில் காலங்களிலே பொருட்களை வாங்குவதற்கு மக்கள் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு அந்தக் கடைகளின் முன்பாக கூரை அமைத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று கூறியிருக்கிறீர்கள். எனவே, இதுகுறித்து உரிய முறையிலே மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, உரிய துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**67—**

### வீட்டுமனைப் பட்டா

***55249—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, பிடாரித் தெரு, பேரரசி தெருக்களில் அருள்மிகு வீரநாராயணபெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் வசித்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில், அருள்மிகு வீரநாராயணபெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான



2016 பிப்ரவரி 18]

இடத்தினைப் பட்டா செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயாய், தந்தையாய், ஆசானாய், தலை வணங்காத் தலைவராய், பன்முகத் தோற்றமாய், யாதுமாகி நிற்கும் நாங்கள் வணங்கும் தெய்வமாகிய முதற்கடவுள், 24–2–2016 அன்று 68–வது பிறந்த நாள் விழா காணும் மாட்சிமை நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) பொன் மலர் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதிரத்தின் ஒவ்வொரு துளியும், உயிர் துடிப்பின் ஒவ்வொரு நொடியும் உச்சரிக்கும் வார்த்தை அம்மா! அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் வறுமையின் பிடிக்குள் இருந்த தமிழகத்தை, செழுமையின் மடிக்குள் கிடத்தினீர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அம்மா, நீங்கள் ஊழலின் பிடிக்குள் மிளிர்ந்த நிருவாகத்தை, நேர்மையின் ரதத்தில் ஏற்றினீர்கள். அம்மா, வாழ வழி தேடியோருக்கு, தாலிக் கொடியே தந்தீர்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) 2016–ல் நடைபெறும் பொதுத் தேர்தலிலே 234–க்கு 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க் கட்சிகளே இல்லை என்ற நிலையை உருவாக்கி மகத்தான ஆட்சியினை அமைப்பீர்கள் எனச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் பிடாரித் தெரு, பேரரசி தெருக்களில் அருள்மிகு வீரநாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில், 40 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் வசித்து வருகின்றார்கள். இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட இந்து சமய மற்றும்

[2016 பிப்ரவரி 18

அறநிலையங்கள் துறையில் விதி இல்லாத நிலையில், இவர்களுக்கு அதனை வரன்முறைப்படுத்திட அரசு முன்வருமா அல்லது எதிர்காலத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய சீரிய கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருவாய்த் துறையின்மூலம் மாற்று இடம் வழங்கிட துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில், அருள்மிகு வீரநாராயணபெருமாள் திருக்கோயில் அமைந்துள்ள பிடாரித் தெரு மற்றும் பேரரசி தெருக்களில் 42 நபர்கள் திருக்கோயில் நிலங்களில் வாடகைதாரர்களாக உள்ளார்கள். இவர்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக வசித்ததன் காரணமாக வரன்முறை செய்யப்பட்டு, தற்பொழுது வாடகையையும் செலுத்தி வருகிறார்கள். ஏற்கெனவே இவர்கள் வரன்முறை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 42 நபர்களும் வருடத்திற்கு 42,900 ரூபாயை மனைப் பகுதிக்கு வாடகையாகவும் செலுத்தி வருகிறார்கள். எனவே, இவர்கள் வாடகைதாரர்களாக ஏற்கெனவே வரன்முறை செய்யப்பட்டவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள், மனைப் பகுதிகள் பண்டைய கால மன்னர்களாலும், பக்தர்களாலும் குறிப்பிட்ட இந்து சமயம் சார்ந்த திருக்கோயில்களுக்கு தானமாக வழங்கப்பட்டதாகும். இந்த தானப் பத்திரத்தில் "சூரிய, சந்திரர் காலம் உள்ளவரை இந்த தான நிலங்கள் திருக்கோயில் சொத்துகளாகப் பராமரிக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சொத்துகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து திருக்கோயில் திருப்பணிகள், பராமரிப்புப் பணிகள், அன்றாட பூஜை வழிபாடுகள், திருவிழாக்கள் மற்றும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் ஆகிய பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு அந்த இடத்தை பட்டா செய்து



2016 பிப்ரவரி 18]

கொடுப்பதற்கு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959-ன்படி வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் தொகுதியில் ஸ்ரீமுஷ்ணத்தில் அமைந்திருக்கிற அருள்மிகு பூவராகப் பெருமாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்திட உத்தரவிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும், ஏழையெளிய மக்களுக்காக அல்லும், பகலும் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பரங்கிப்பேட்டை பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு முத்துகுமாரசாமி கோயிலுக்குச் சொந்தமான இடம் சந்தைத் தோப்பாக இயங்கி வருகின்றது. அப்பகுதியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அடிமனைக்குண்டான வாடகையையும் செலுத்தி வருகின்றார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 பிப்ரவரி 18

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரங்கிப்பேட்டை பகுதியில் அருள்மிகு முத்துகுமாரசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் வசித்து வருகின்ற அந்தப் பொது மக்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் கேட்பது மின் இணைப்பா? (குறுக்கீடு) எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள் என்று தெரியுமா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்த இடத்திலே முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றவர்கள் வரன்முறைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான No Objection Certificate–ஐ உடனடியாக வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட கூடலழகர் பெருமாள் கோயிலின் முன்புறம் உள்ள மண்டபத்தில், வசந்த விழாக் காலங்களில் பெருமாள், அம்பாள் உற்சவச் சிலைகளை வைத்து வணங்கி வந்தனர். தற்போது மேற்படி மண்டபத்தை தனியாருக்கு குடோனுக்கு வாடகைக்கு விட்டுள்ளனர். இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது; கோயிலின் அழகும் கெடுகின்றது. மேற்படி கோயிலின் முன்புறம் உள்ள மண்டபத்தைக் காலி செய்து, மீண்டும் அம்பாள், சுவாமி சிலைகளை வைத்து வழிபட ஏற்பாடு செய்திட வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மீனாட்சியம்மன் கோயிலுக்குச் சொந்தமான திருத்தேரினைப் புனரமைத்து, சீர் செய்து, கண்ணாடிக் கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல், கூடலழகர் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான திருத்தேரையும் சுத்தம் செய்து, புனரமைத்து, சீர் செய்து கண்ணாடிக் கூண்டுகள் அமைக்க நீங்கள் முன்வரவேண்டும்.



2016 பிப்ரவரி 18]

அதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மகத்தான நல்லாட்சியில் தீட்டப்படும் திட்டங்கள், செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் மிகவும் உன்னதமானவை; அனைவராலும் பாராட்டப்படுபவை. இதன் காரணமாக தமிழக மக்கள் அனைவரும் மாண்புமிகு அம்மா அவர்களை வியந்து பாராட்டுவதோடு, 2016–க்குப் பிறகும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்றும் முதல்வர் என்று முடிவு எடுத்துவிட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூடலழகர் வந்து செல்கின்ற மண்டபத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதனை துறைரீதியாக ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கைகளை உடனே இந்து சமய அறநிலையத் துறை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், திருத்தேரினை சரி செய்து கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்தார்கள். நூறு ஆண்டுகளாக ஓடாத தேர்களையும் சேர்த்து, 143 தேர்களை ஓட்டிய பெருமைக்குரியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் 135 தேர்களை சரி செய்வதற்கான, செப்பனிடுவதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் தேர் பணி குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, உடனடியாக சரி செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 பிப்ரவரி 18

**68—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

*__34759—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:__

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, அந்தியூரில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அந்தியூரில் போதிய வாகனங்கள் இல்லாததனால், புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Courage, generosity, wisdom and zeal are the four essential elements of a successful Leader என்ற கூற்றிற்கிணங்க, எதற்கும் அஞ்சாமை, பிறருக்குக் கொடுக்கும் ஈகைக் குணம், அறிவாற்றல், ஊக்கம் என்கிற பண்புகளைப் பெற்று, நாட்டு மக்களுக்கு அறிவித்த அத்தனைத் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுத்த ஒரே முதலமைச்சரான மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 2 சக்கர வாகனங்கள் மற்றும் 4 சக்கர வாகனங்கள் அதிகமாக உள்ளன. மேலும், தனியார் பள்ளி வாகனங்கள், பேருந்துகள், லாரிகள் என ஆயிரக்கணக்கான



2016 பிப்ரவரி 18]

வாகனங்கள் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தியூரைத் தனி வட்டமாக அமைத்துக் கொடுத்ததன் பயனாக, புதிய தொழிற்சாலைகள் தொழில்முனைவோர்களால் ஆரம்பிக்கப்பட்டு, அவர்களுடைய தொழிற்சாலைகளுக்குச் செல்லும் வாகனங்களும் அதிகமாகி உள்ளன. மேலும், பர்கூர் மலையோர கிராமங்களில் மலைவாழ் மக்கள் 15,000 பேர்கள் வசிக்கின்றனர். அவர்கள் தங்கள் வாகனங்களைப் பதிவு செய்யவும், சாலை வரி மற்றும் ஓட்டுநர் உரிமம் பெறவும் 2 நாட்கள் காத்திருந்து 100 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானிக்குத்தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைப்படி, அந்தியூரில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள்தொகை, போக்குவரத்து வாகனங்கள், அதேபோல, போக்குவரத்து அல்லாத வாகனங்கள் மற்றும் ஏற்கெனவே இருக்கிற வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கும் இடையே இருக்கின்ற தூரம்; இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படுகின்றது. ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென்றால், போக்குவரத்து வாகனங்கள் 7,500 இருக்க வேண்டும். பகுதி வட்டார போக்குவரத்து அலுவலகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 2,500 இருக்க வேண்டும். அந்தியூர் பகுதியிலே 1962 வாகனங்கள்தான் இருக்கின்றன. 17 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானிக்கு அருகில் பகுதி அலுவலகம் இருக்கின்றது. வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் 23 கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கின்றது. ஆகையால், எதிர்காலத்திலே வாகனங்களுடைய எண்ணிக்கை அதிகமாகின்றபொழுது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய

[2016 பிப்ரவரி 18

கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–ல் மீண்டும் அமையும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், எங்கள் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைத்துத் தமிழர்களுக்கும் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கின்ற, ஒப்பற்ற தலைவராக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை சிப்காட் வளாகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்தபொழுது, அந்த சிப்காட் வளாகத்தில் ஓர் அரசுப் போக்குவரத்துப் பணிமனையை அமைத்து, அதற்குக் கட்டடம் கட்டப்பட்டு, அங்கே அந்தப் போக்குவரத்துப் பணிமனை இயங்கி வருகிறது. கடந்த கால மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுது, அந்தப் பணிமனையிலே இருந்த Petrol bunk–ஐயும், Mechanic shed–ஐயும் மூடி விட்டார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மானாமதுரை சிப்காட் வளாகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசுப் போக்குவரத்துப் பணிமனையில், மீண்டும் Petrol bunk–ஐயும், Mechanic shed–ஐயும் அமைத்து, கூடுதலாகப் பேருந்துகளை ஒதுக்கி, முறையாக அரசுப் போக்குவரத்துப் பணிமனை செயல்படுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2016 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது பணிமனையைப் பற்றி; மூலக் கேள்வி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் பற்றியது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் பகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்காக 2013–ல் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டது. அந்த இடம் பொதுப் பணித் துறைக்குத் தேவைப்படுகின்ற காரணத்தினால், மாற்று இடம் பாருங்கள் என்று சொல்லப்பட்டது. மாற்று இடம் பார்க்கின்றபோது, மாற்று இடங்கள் குறைவாக இருக்கின்றன. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வாடகை ஒப்பந்தத்தில் போக்குவரத்துப் பணிமனையை அமைப்பதற்கு முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பேசுகின்றபோது, மாற்று இடம் குறைவாக இருக்கின்றது; எனவே, வாடகைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்கின்றார். போக்குவரத்துப் பணிமனை என்பது வாடகைக் கட்டடத்திலே இயங்குவது என்பது இயலாத காரியம். ஏனென்றால், அதற்கு 2 ஏக்கர் நிலம் வேண்டும்; பல்வேறு வசதிகள் வேண்டும் என்ற காரணத்தினால், வேறு

இடத்தினைத் தேர்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**69—**

**சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம்**

***37259—திரு. செ. காமராஜ்:**

*மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரத்திலுள்ள சார்–பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்ட நிருவாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் செய்து ஆணை வழங்கப்பட்டு, தற்போது கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

**திரு. செ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராயபுரம் பேரூராட்சியில் உள்ள சார்—பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட,





கேள்வி வரும் முன்னே அதைக் கட்டிக் கொடுக்க ஆணையிட்ட வாழும் வரலாறு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றிகளைப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். 'மக்களாட்சி, மக்களாட்சி' என்று சொல்லி, தன்னுடைய மக்களுடைய ஆட்சியை நடத்தியதால்தான் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியை மக்கள் நிரந்தரமாக தூக்கி எறிந்தார்கள். கரும்புக் காட்டில் concrete road போட்டு, 'நமக்கு நாமே' என்ற ஒரு பொய்யான பயண நாடகம் நடத்துவது எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் மக்களிடம் எடுபடாது, எடுபடாது. தமிழகத்திலே உள்ள 234 தொகுதிகளையும் வென்றெடுக்கும் மகாசக்தி மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள 7 கோடிக்கும் மேற்பட்ட, அனைத்துத் தரப்பு மக்களின் குறைகளை நீக்கி, அனைவருக்கும் தாயாக, தலைவராக, முதல்வராக இருந்து தரணி போற்றும் ஆட்சியை, இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டும் முன்மாதிரியான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் ஏழை மக்களுடைய கருணைத்தாய், ஏழைகளின் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றி மலர்களைப் பாதம் பணிந்து சமர்ப்பித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**70—**

**சமூகக் கூடம்**

***51427—திரு. அ. சவுந்தரராசன்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–*

*பெரம்பூர் தொகுதி, 37–வது வட்டத்திலுள்ள அசோக் லேலண்டு குடியிருப்பு அருகிலும், சாஸ்திரி நகர் 10–வது தெருவிலும் சமூகக் கூடங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

[2016 பிப்ரவரி 18

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். பெரம்பூர் தொகுதி, 37–வது வட்டம், அசோக் லேலண்டு குடியிருப்பு அருகிலும், சாஸ்திரி நகர் 10–வது தெருவிலும் சமுதாய நலக் கூடங்கள் அமைக்க போதுமான இட வசதி இல்லாத காரணத்தால், அவ்விடங்களில் சமுதாய நலக் கூடங்கள் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

**திரு. க. பீம்ராவ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 37–வது வட்டத்தில் அசோக் லேலண்டு குடியிருப்பிற்கு உள்ளே 1 கிரவுண்டுக்கு மேலே இடம் இருக்கிறது. 2014 பிப்ரவரியில் இந்தக் கேள்வி வரும்போது சாஸ்திரி நகரிலே, இடம் இருந்தது; இப்போது அங்கு இடம் இல்லை. எனவே, இப்போது அசோக் லேலண்டு குடியிருப்பில் இருக்கக்கூடிய அந்த இடத்தில் சமூக நலக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று, அங்கு இருக்கக்கூடிய நலச் சங்கங்களும் அந்தப் பகுதி மக்களும் கோரிக்கை வைத்து வருகிறார்கள். அதேபோல, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் ஏராளமான தனியார் திருமண மண்டபங்கள் இருக்கின்றன. அவற்றின் வாடகை அதிகம் என்பதால், சாதாரண மக்களால் அங்கே சுப நிகழ்ச்சிகள் எதுவும் நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசு இதை உடனடியாக கவனத்தில் கொண்டு, அசோக் லேலண்டு குடியிருப்பில் ஒரு கிரவுண்டுக்கு மேலே இருக்கக்கூடிய அந்த இடத்தில் சமூக நலக் கூடம் கட்டித் தந்தால், 36–வது வட்டத்திலுள்ள மக்களுக்கு மட்டுமல்ல; சாஸ்திரி நகர் 10–வது தெரு மற்றும் அதைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளிலுள்ள மக்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2016 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, தமிழகத்திலே 2,267 சமுதாய நலக் கூடங்கள் 328 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மிகவும் பெருமையோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 161 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கி சமுதாயக் கூடங்கள் அமைக்கப்பட்டன. சென்னையைப் பொறுத்தளவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, 20 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 சமுதாய நலக் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, 5 சமுதாய நலக் கூடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 சமுதாய நலக் கூடங்கள் கட்டுவதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியிலே சென்னையிலே 1 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 சமுதாய நலக் கூடங்கள் மட்டுமே அமைக்கப்பட்டன.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *தற்போது சென்னை மாநகராட்சியிலே 51 சமுதாய நலக் கூடங்கள் உள்ளன. பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியிலே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சமுதாய நலக் கூடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறந்துவைக்கப்பட்டுள்ளது. பெரம்பூர் தொகுதி, 37–வது வட்டம், அசோக் லேலண்டு குடியிருப்பு அருகிலும், சாஸ்திரி நகர் 10–வது தெருவிலும் சமுதாய நலக் கூடம் அமைக்க போதுமான இட வசதி இல்லை என்றுதான் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்த ஒரு ஏக்கர் இடம் அங்கே இருக்கும்பட்சத்தில், அது என்ன இடம்*

என்று ஆய்வு செய்து அப்பகுதியிலே சமுதாய நலக் கூடம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 61—வது வட்டத்தில், வீராசாமி தெருவில், சமூக நலக் கூடம் கட்ட அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான், தமிழகத்தில் 2,267 சமுதாய நலக் கூடங்கள் பேரூராட்சி, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலெல்லாம் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற இடத்தில், போதுமான இடம் இருக்கின்றபட்சத்தில், அங்கு சமுதாய நலக் கூடம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம்மம்பட்டி பேரூராட்சி, ஒன்பதாவது வார்டில், ஆதி திராவிட மக்களும் மற்றும் அருந்ததிய மக்களும் அதிகமாக வசிக்கின்றனர். 2011–2012 நிதியாண்டில், சமுதாய நலக் கூடம் கட்டும் பணியை 15 இலட்சம் ரூபாய் செலவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் கொடுத்திருந்தேன். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்கு பயன்படும் வகையில் அந்தச் சமுதாய நலக் கூடத்தை அங்கே அமைக்க சாத்தியக்கூறு இல்லையென்று சொன்னார். ஆனால், இடம் அதிகமாக இருக்கின்றது; நானும் நேரடியாகச் சென்று, அந்த இடத்தைப் பார்த்தேன்; பொது மக்களும் வந்து பார்த்தார்கள். தம்மம்பட்டி பேரூராட்சி, ஒன்பதாவது வார்டு, ஆதி திராவிட மற்றும் அருந்ததிய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதி என்பதால், அப்பகுதி மக்கள் பயனடைகின்ற வகையில் அங்கே சமுதாய நலக் கூடம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். சில இடங்களில் இடம் இல்லாத காரணம்கூட இருக்கும். அதேபோல, சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்தில் பூங்கா அல்லது வேறு இடம் அமைந்து ஏதாவது கிளாரிபிகேஷன் தேவைப்படக்கூடிய சூழ்நிலை இருக்கும் என்று நினைக்கிறேன். சரியான இடமாக, நல்ல இடமாக அது இருந்தால், சமுதாய நலக் கூடம் அமைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 பிப்ரவரி 18

**71—**

### கால்நடை மருத்துவமனை

***53116—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், கொரக்கோட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்திலே, கொரக்கோட்டை ஊராட்சியிலே கால்நடை மருத்துவமனை அமைக்கக் கேட்டிருக்கிறார்கள். அரசு விதிகளின்படி, கொரக்கோட்டை ஊராட்சியிலே கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், கோட்டபூண்டி ஊராட்சியில், கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமென்ற என்னுடைய மூலக் கேள்விக்கு, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே அமைத்துத் தரப்படும் என்று பதிலளித்திருந்தார்கள். ஆனால், அங்கு எந்தப் பணிகளும் நடைபெறவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதைக் கனிவோடு பரிசீலனை செய்து, அந்த இடத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.



2016 பிப்ரவரி 18]

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைகளை சாதனைகளாக்கி, சாதனைகளை சரித்திரங்களாக மாற்றி, துறைகள்தோறும் திட்டங்களைத் தீட்டி, தமிழக மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட, உப்பிலியாபுரம் ஒன்றியம், பச்சைப்பெருமாள்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைந்துள்ளது. அந்தப் பகுதியைச் சுற்றி 10–க்கும் மேற்பட்ட கிராமங்களில், 10,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்றால், அங்கே ஐந்தாயிரம் கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே அதற்கும் மேலாக இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட இலுப்பநத்தம் ஊராட்சியில், ஏறத்தாழ 20 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் முழுமையாக வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றார்கள். துறையால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கால்நடை அலகிற்கேற்ப, அங்கே மூன்றாயிரத்திற்கும் மேலாக, சுமார் ஐந்தாயிரம் வரையிலே கால்நடைகளை வளர்த்து வருகிறார்கள். எனவே, அந்த ஊராட்சியிலே கால்நடைக் கிளை நிலையத்தை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதியிலே அரசு விதிகளுக்குட்பட்டு, அதிகமான கால்நடை அலகுகள் இருப்பதால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் சங்கரன்கோவில் தொகுதியிலே, சாயமலையில் ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையத்தையும், அதேபோல பெருங்கோட்டூரில் ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையத்தையும், தற்போது மூவிருந்தாளியில் ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையத்தையும் வழங்கியதோடு, சாயமலை கால்நடைக் கிளை நிலையத்தை



2016 பிப்ரவரி 18]

கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திக் கொடுத்திருப்பதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். சாயமலைப் பகுதியில் தரம் உயர்த்தப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற சாயமலை கால்நடை மருந்தகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**72—**

**மீன் விதைப் பண்ணை**

***35613—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பகுதியில் அரசு மீன் விதைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்; இல்லாமை இல்லாத நிலை வேண்டுமென்ற உயர்ந்த

[2016 பிப்ரவரி 18

இலட்சியத்தை உள்ளத்தில் உறுதியாக ஏற்று, தமிழக மக்கள் வாழ்விற்காக தம்மையே அர்ப்பணித்துக்கொண்டு, நாளும் உழைத்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பகுதியில் அரசு மீன் விதைப் பண்ணை அமைக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**73—**

**புதிய கட்டடம்**

*__18093—திரு. கடம்பூர் ராஜு:__

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கடம்பூர் பேரூராட்சியிலுள்ள வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு மற்றும் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

கடம்பூர் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் நீண்ட நாட்களுக்கு முன்னதாகக் கட்டப்பட்டதாலும், கட்டடம் இடிந்து விழும் நிலையில் குடியிருப்புக்கு ஏற்றதாக இல்லாததாலும், அதனை இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு மறு கட்டுமானம் என்ற வகைப்பாட்டின்கீழ், கடம்பூர் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.10.90



2016 பிப்ரவரி 18]

இலட்சத்திற்கான மதிப்பீட்டு அறிக்கை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. கடம்பூர் வருவாய் ஆய்வாளர் கட்டடம் கட்டுவதற்கு பெறப்பட்ட முன்மொழிவுகள்மீது முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து முடிவான அறிக்கை பெறப்பட்டவுடன், அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உலகில் எதையும் சாதிக்கலாம், எவரையும் வெல்லலாம்' என இளைஞர்களுக்குக் கற்றுத் தந்த சுவாமி விவேகானந்தரின் குரு இராமகிருஷ்ண பரமஹம்சர் அவதரித்த தினம் இத்தினம். இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்களின் சிந்தனைகள் தலைமுறைகளையும் தாண்டி நிற்பதைப்போல, சுவாமி விவேகானந்தர் அவர்களின் இலட்சியங்களை வாழ்க்கை நெறிகளாகக் கொண்டு வாழ்ந்துவரும், வாழும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) வர இருக்கின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் பெறப்போகும் வெற்றியும், தலைமுறைகளையும் கடந்து, இனி எவரும், எக்காலமும் பெற முடியாத வெற்றியாக அமையப் போகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

இந்த வினா வருவதற்கு முன்பாகவே, வேண்டிய கருத்துருக்களைப் பெற்று, புதிய கட்டடம் கட்டித் தர சூழ்நிலை இருக்கின்றது என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றி சொல்லி, அமைகிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

[2016 பிப்ரவரி 18

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஏழையெளிய மக்களுக்கெல்லாம் வாழ்வு அளித்து வருகிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வருகின்ற 24–2–2016–ல் 68–வது பிறந்த நாளைக் காணுகின்றார்கள். நடமாடும் தெய்வம், உலகத்தில் எங்கெங்கெல்லாம் தமிழ் மக்கள் இருக்கின்றார்களோ, அவர்களுக்கெல்லாம் குல தெய்வமாக இருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* நீடூழி வாழ வேண்டும்; நெடுங்காலம் வாழ வேண்டும்; இந்த பூமி உள்ளவரை, இந்த வானமும், வையகமும் உள்ளவரை, அம்மா வாழ்வாங்கு வாழ வேண்டும்; வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

“நீங்க நல்லாயிருக்கோணும் நாடு முன்னேற; இந்த
நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற – அம்மா
நீங்க நல்லாயிருக்கோணும் நாடு முன்னேற; இந்த
நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற!
என்றும் நல்லவங்க எல்லாரும் ஒங்க பின்னாலே; நீங்க
நெனச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே!
*(மேசையைத் தட்டும் ஒலி)*
இந்த நாட்டு மக்கள் எல்லாரும் ஒங்க பின்னாலே; நீங்க
நெனச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே!”
*(மேசையைத் தட்டும் ஒலி)*

அம்மா, நீங்கள் எங்களுக்கு மட்டுமல்ல; எங்களுடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல; இந்தத் தமிழகத்திற்கு மட்டுமல்ல; தமிழக மக்கள் எங்கெங்கெல்லாம் இருக்கிறார்களோ, தமிழ் மக்கள் எங்கெங்கெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களோ, *(மேசையைத் தட்டும் ஒலி)* அங்கெல்லாம் நீங்கள் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் அம்மா. உங்கள் மலர்ப் பாதங்களை மீண்டும், மீண்டும் வணங்குகிறேன். 234 தொகுதிகளில் 234–ஐயும் வென்று, இந்தத் தமிழகத்தில் நிரந்தர முதல்வராக, 6–வது முறை மட்டுமல்ல; *(மேசையைத் தட்டும் ஒலி)* 60 முறையும் நீங்கள்தான் அம்மா, இந்த நாட்டின் முதல்வர், முதல்வர், முதல்வர் என்று கூறிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கும்பிட்ட கரம் விலகுவதற்கு முன்பே, எங்களுடைய பாபநாசம் சட்டமன்றத் தொகுதிக்கு அரசு பாலிடெக்னிக் கல்லூரி தந்து, எங்களுக்கு வாழ்வளித்து, பாபநாசம் தொகுதி மக்களுக்குப் பெருமையும், புகழையும் தேடித்தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் மீண்டும் நெஞ்சார்ந்த நன்றியைச் சமர்ப்பித்து, வணங்குகிறேன். அம்மா, உங்களால்தான் நாங்கள்; உங்களுடைய அருளால்தான் தமிழ் மக்கள்; உங்களுடைய ஆசியால்தான் இந்தத் தமிழகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், என்னுடைய பாபநாசம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள பாபநாசம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தந்து, எங்களுக்குப் புதுப் பொலிவும், புதிய வாழ்வும் தர மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை அன்புடன் வணங்கி, வேண்டுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா! நீங்கள் வாழ்கின்ற காலத்தில் நாங்கள் வாழ்கின்றோம் என்ற பெருமையோடு வாழ்ந்து, இன்றைக்கு மட்டுமல்ல; என்றைக்கும் விசுவாசிகளாக, உங்களுடைய பாதம் தொட்டு வணங்கி நாங்கள் வாழ்கின்றோம் என்று கூறிக்கொள்கிறேன்.



2016 பிப்ரவரி 18]

பூமி உள்ளவரை எங்கம்மா புகழே நிலைத்திருக்கும்;
புரட்சித் தலைவி புகழ் மக்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும்;
பூமி உள்ளவரை எங்கம்மா புகழே நிலைத்திருக்கும்;
புரட்சித் தலைவி புகழ் மக்களின் நெஞ்சில்
நிறைந்திருக்கும்!

என்று கூறி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்பாதம் மீண்டும் வணங்கி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர், கடலூர், திருப்பூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களையும், கோயம்புத்தூர், நீலகிரி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்களையும், ஆறு கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களையும், 64 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களையும், 400 வருவாய்த் துறைக்கான இதர கட்டடங்களையும், ஆக 410.99 கோடி ரூபாய் செலவில் புதிய

[2016 பிப்ரவரி 18

கட்டடங்களை உருவாக்கித் தந்து, வருவாய்த் துறைக்குப் புத்துயிர் அளித்த ஒரே முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் புதிய கட்டடத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு மிக விரைவிலே கட்டித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**74—**

### பெண்கள் மேல்நிலைப் பள்ளி

***29794—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகரில் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசால் நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, ஏற்கெனவே செயல்படும் உயர்நிலைப் பள்ளிகளை மட்டுமே மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த இயலும். நேரடியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் துவக்க விதிகளில் இடமில்லை. எனவே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகரில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2016 பிப்ரவரி 18]

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் இதுவரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி இல்லை என்ற குறை நீண்ட வருடங்களாக இருந்து வருகிறது. அதுகுறித்து பல முறை நான் இதே சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கிறேன். உசிலம்பட்டியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி இல்லையென்று சொன்னால், அது பெரிய மன வருத்தத்திற்குரியது. அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அங்கே அரசு உதவிபெறும் இரண்டு கிறிஸ்துவப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே கள்ளர் சீரமைப்புப் பள்ளியும் இல்லை; அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் இல்லை. எனவே, அரசு தனிக் கவனம் செலுத்தி, அதனை அமைத்துத் தர முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உசிலம்பட்டி நகரில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் துவக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள். ஆனால், அரசு உதவி பெறும் பள்ளியான T.E.L.C. பெண்கள் மேல்நிலைப் பள்ளி உசிலம்பட்டிக்கு அருகில் 1 கி.மீ. தொலைவிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, மற்றொரு அரசு உதவி பெறும் பள்ளியான ஆர்.சி. பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுமே அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளாகும். அதுமட்டுமல்லாமல், அந்தப் பள்ளிகளிலிருந்து 4 கி.மீ. சுற்றளவிலே, அரசு கள்ளர் இரு பாலர் பயிலக்கூடிய மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே நேரடியாக அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஆனால், அப்படி பெண்கள் மேல்நிலைப் பள்ளியை நேரடியாகத் துவங்குவதற்கு வாய்ப்பில்லை. விதிகளின்படி, உயர்நிலைப் பள்ளியை முதலிலே துவக்க வேண்டும்;

[2016 பிப்ரவரி 18

அதற்குப்பிறகு, பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பிரித்து, பெண்கள் மேல்நிலைப் பள்ளியை நாம் துவக்க வேண்டும். எனவே, நேரடியாக அதுபோன்று தொடங்குவதற்கு விதியிலே இடமில்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளியிலே ஆண் பிள்ளைகள் மட்டுமே தற்போது படித்துக்கொண்டிருக்கிறார்கள்; பெண் பிள்ளைகள் யாரும் அங்கு படிக்கவில்லை. அருகில் அரசு உதவி பெறக்கூடிய பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்ற காரணத்தினால், அங்குள்ள பெண் பிள்ளைகள் அந்தப் பள்ளிகளிலே சென்று பயின்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வருகின்ற காலங்களிலே அப்பள்ளியினுடைய தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். இதற்குமுன்கூட இரண்டு, மூன்று முறை சட்டமன்றத்திலே இந்த வினாவினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடுத்திருக்கிறார்கள். ஆகவே, எதிர்வரும் காலங்களில் ஆய்வு செய்து, பெண் பிள்ளைகளுடைய சேர்க்கை அங்கு அதிகரிக்கின்றபட்சத்திலே, பெண் பிள்ளைகளை அந்தப் பள்ளியிலே சேர்க்கின்ற வாய்ப்புகள் இருக்கும்பட்சத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று முதலிலே உயர்நிலைப் பள்ளியை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்பு, அங்கு அந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த பள்ளிக்கூடம், வேறு இடத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டு மாற்றப்பட்டு விட்டது. பின்னர், காலியாக இருந்த அந்தக் கட்டடத்தில் புதிய பாலிடெக்னிக் கல்லூரி துவங்கப்பட்டு, ரூ.10 இலட்சம் செலவில் கட்டடங்கள் புனரமைக்கப்பட்ட நிலையில் செயல்பட்டு வந்தது. இந்நிலையில், பாலிடெக்னிக் கல்லூரிக்கென தனியாக கட்டடங்கள் வேறு இடத்தில் கட்டப்பட்டு, அதுவும் மாற்றப்பட்டு விட்டதால், இந்தக் கட்டடங்கள் நல்ல நிலையில் இருந்து வருகின்றன. உடனடியாகவே அந்த உயர்நிலைப் பள்ளியைத் துவங்க வாய்ப்பிருக்கிறது என்று



2016 பிப்ரவரி 18]

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த உயர்நிலைப் பள்ளியையாவது தொடங்கிட வேண்டும். ஏனென்றால், அந்தப் பகுதி ஏற்கெனவே, முற்காலத்தில் அதை ** என்ற ஒரு பெயர் உண்டு. அது மாற்றப்பட வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், அங்கு அரசுப் பெண்கள் பள்ளி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். அதாவது, அந்தப் பகுதியிலே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்நிலைப் பள்ளியைத் துவங்க வாய்ப்பிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகத் துவங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற உசிலம்பட்டியிலே அந்தப் பள்ளியைத் தொடங்குவதற்கு அரசின் விதிமுறைகளையெல்லாம் முதலில் அவர்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அதாவது ஒரு இலட்சம் ரூபாய் மக்கள் பங்களிப்பாக செலுத்தியிருக்க வேண்டும். அதேபோல், அங்கு இட வசதியும் இருக்கிறது; கட்டட வசதியும் இருக்கின்றது. அதேபோன்று, அரசினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு அந்தப் பள்ளியைத் தொடங்க சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்று ஆய்வு செய்து, எதிர்வருகின்ற காலங்களிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக அதை நாங்கள் நிறைவேற்றித் தருவோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2016 பிப்ரவரி 18

அவர்கள், உசிலம்பட்டி பகுதி, ** என்று குறிப்பிட்டார். அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், ** என்கிற வார்த்தையே இப்போது இல்லாமல் செய்திருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது உட்பட, அவைக் குறிப்பிலிருந்து அந்த வார்த்தையை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது உட்பட, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன் குடும்பம் வாழ 'நமக்கு நாமே பயணம்' செல்பவர்கள் மத்தியில், 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்காக பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டி. கல்லுப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியை, மாணவிகளுக்கென தனி மேல்நிலைப் பள்ளியாகப் பிரித்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2016 பிப்ரவரி 18]

கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***52279—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், குண்டலப்பல்லி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், குண்டலப்பல்லி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க துறைரீதியாக ஆய்வு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வருங்காலங்களில் இடைவெளியினுடைய அடிப்படையில், முன்னுரிமை கொடுத்து வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், குண்டலப்பல்லி ஊராட்சி ஒரு வனப் பகுதி கிராமம் ஆகும்.

[2016 பிப்ரவரி 18

*நிறைய மலைகளும், வனங்களும் சுற்றியுள்ள இந்தப் பகுதியில், சுமார் 6, 7 கிராமங்கள் உள்ளன. இங்கு வாழ்கின்ற மக்களுக்கு ஒரு சிறிய உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும், 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பேரணாம்பட்டுக்குச் செல்ல வேண்டும். அதுவும் சரியான போக்குவரத்து வசதி இல்லாத பகுதி அது. தற்போது இங்கு ஒரு தாய்–சேய் நல விடுதி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், செவிலியர்கள் அங்கு தங்குவது கிடையாது. போக்குவரத்து வசதியே இல்லாத இந்தப் பகுதிக்கு, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 5 ஆண்டுகளில் 187 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்கி வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மிக அதிகமான ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்கி, தமிழகத்தை நோயற்ற மாநிலமாக உருவாக்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியிலே, அவர் குறிப்பிடுகின்ற பேரணாம்பட்டு ஒன்றியத்திலேகூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியில், பேரணாம்பட்டு நகர்ப்புற சுகாதார நிலையம்* Urban P.H.C.*–டி.டி. மோட்டூர், அரவட்லா போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வருங்காலங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*



2016 பிப்ரவரி 18]

**திரு. கு. லிங்கமுத்து:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டி.டி. மோட்டூர், நரியம்பட்டு போன்ற பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், போக்குவரத்து வசதியே இல்லாத, ஆந்திர மாநில எல்லையோரம் இருக்கின்ற ஒரு வன கிராமம் இது. யானைகள் மட்டுமல்ல; சிறுத்தைகளும், விஷ ஜந்துக்களும் அதிகமாக இருக்கின்ற வனப் பகுதி இது. எனவே, இந்தப் பகுதியில் ஒரு சிறிய உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும், அவர்கள் 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பேரணாம்பட்டுக்கு செல்ல வேண்டியிருப்பதால், அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தங்கள் வாயிலாகக் கோருகிறேன்.*

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மலைப் பகுதிகளில் உள்ள மக்களுக்காகத்தான் நடமாடும் மருத்துவக் குழுத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சிந்தனையால் இந்த சீர்மிகு திட்டம் "மக்கள் மருத்துவமனையைத் தேடி வர வேண்டாம்; நடமாடும் மருத்துவமனை, மக்களைத் தேடி வருகிறது" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அடிப்படையில், இதுபோன்ற பகுதிகளில் 416 நடமாடும் மருத்துவக் குழுக்கள் தமிழ்நாடு முழுவதும் சிறப்பாகச் சேவை புரிந்து வருகின்றன. உங்கள் ஒன்றியத்திலும் அந்த நடமாடும் மருத்துவக் குழு சேவை புரிந்து வருகின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது 'வனப் பகுதி' என்று குறிப்பிடுகின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கனிவோடு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2016 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு) ஒரு முக்கியமான அறிவிப்பு இருக்கிறது, உட்காருங்கள்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### மூத்த குடிமக்கள் சென்னை மாநகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கும் வசதி குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தபின், தமிழக மக்களின் நலன் காக்கும்வகையில் எவ்வாறெல்லாம் செயல்படும் என்பதுபற்றி அப்போது வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாக நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். 'இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய வழியில் எங்களது புனிதப் பயணம் அமையும்' என்ற வாக்குறுதியை அளித்திருந்தோம். 'தமிழகம் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும், 'கல்வி, மருத்துவம் விவசாயம், நதி நீர், அடிப்படைக் கட்டமைப்பு, வீடு, மின்சாரம் மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்' என்றும், 'தமிழ் இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் தலைநிமிர்ந்து சொந்தக்காலில் நிற்பதற்கான வழிவகுக்கப்படும்' என்றும், எங்களது இலட்சியத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இந்த இலட்சியத்தை எய்துவதற்கு, துறைதோறும் எடுக்க உள்ள நடவடிக்கைகள்பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.



2016 பிப்ரவரி 18] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எங்களது தேர்தல் அறிக்கையில் முதன்மைத் துறை, உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறை ஆகியவை எவ்வாறு மேம்படுத்தப்படும் என்பதுபற்றி தெரிவித்திருந்ததோடு, மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்கள், தாய்மார்கள், முதியோர்கள், ஆதரவற்றோர், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் என ஒவ்வொரு பிரிவினருக்கும் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்பற்றியும் வாக்குறுதி அளித்திருந்தோம்.

மூத்த குடிமக்களுக்கு அரசுப் பேருந்தில் பயணம் செய்ய கட்டணமில்லா பஸ் பாஸ் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை தேர்தல் அறிக்கையில் நாங்கள் அளித்திருந்தோம். இந்த வாக்குறுதியை நிறைவேற்றும்வகையில், முதற்கட்டமாக, சென்னை மாநகரப் பேருந்துகளில் மூத்த குடிமக்கள் கட்டணமின்றி பயணம் செய்யும் வகையிலான ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதன்படி, 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் குளிர்சாதன வசதி இல்லாத, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக அனைத்துப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம். இதற்கென மாதத்திற்கு 10 டோக்கன்கள் வழங்கப்படும். பேருந்து நடத்துனரிடம் இந்த டோக்கன்களைக் கொடுத்து, கட்டணம் ஏதும் இல்லாமல் மூத்த குடிமக்கள் பயணம் செய்யலாம்.

*முற்பகல் 11–30*

இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள விழைவோர், அதற்குரிய படிவத்தில் தங்களது புகைப்படத்தினை இணைத்து, அடையாள அட்டை மற்றும் டோக்கன்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விண்ணப்பப் படிவத்தை போக்குவரத்துத் துறையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இந்த விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பஸ் டெப்போக்களிலும் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பஸ் டெப்போக்களில் கொடுத்து, அடையாள அட்டை மற்றும் டோக்கன்களைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தெந்த பஸ் டெப்போக்களில் இந்த வசதி செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் போக்குவரத்துத் துறையின் இணையதளத்தில் வெளியிடப்படும். விண்ணப்பங்கள் கொடுப்பதற்கென கடைசி தேதி என்று எதுவும் நிர்ணயம்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 பிப்ரவரி 18

செய்யப்படவில்லை. தேவைப்படுவோர் இதற்கான விண்ணப்பத்தை எப்போது வேண்டுமானாலும் அளிக்கலாம். சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மூத்த குடிமக்கள் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யும் இந்தத் திட்டம், 24—2—2016 முதல் நடைமுறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புதிய திட்டத்திற்கு பொது மக்களிடையே உள்ள வரவேற்பைக் கண்டறிந்து, மற்ற இடங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.

என்னுடைய இந்த அறிவிப்பின்மூலம் 2011 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், எங்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளுக்கும் மேலாக, பல்வேறு நலத் திட்டங்களையும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. மூத்த குடிமக்கள் சென்னை மாநகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கும் வசதி—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011—ல் தேர்தலிலே களம் கண்டபோது போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் சுற்றிவந்தபோது, தந்த வாக்குறுதிகளின் கடைசி வாக்குறுதியையும், இந்தக் கடைசிக் கூட்டத் தொடரிலே (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றி வைத்திருக்கிறார் என்கிற தித்திப்பான செய்தியை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுவும் வரும் 24 ஆம் தேதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் அன்று (மேசையைத் தட்டும் ஒலி) அது நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது என்கிறபோது ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒரு சாதனையாளர், சரித்திரம் படைக்கிற ஒருவர், யாராக இருந்தாலும், வரலாற்றிலே எத்தனை வேதனைகளை, எவ்வளவு துயர்களைத் தாங்கிக்கொண்டு அதனை



2016 பிப்ரவரி 18] [முனைவர் செ.கு. தமிழரசன்]

படைப்பார் என்பதற்கு ஓர் இலக்கணமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். ‘2011—ல் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு, இப்போது வந்திருக்கிறதே’ என்று எப்போதும்போல சொல்லலாம். போக்குவரத்துத் துறையிலே எவ்வளவு இழப்பு ஏற்பட்டபோதும், கடந்த 5 ஆண்டுக் காலத்திலே மட்டும் 20-க்கும் மேற்பட்ட முறை டீசல், பெட்ரோல் விலை உயர்ந்தபோதும்கூட, பேருந்துக் கட்டணத்தை இதுவரையிலே உயர்த்தாமல் இந்தியாவிலே ஒரு மாநிலம் இருக்கிறது என்றால், அது தமிழகம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெட்ரோல் பிடிப்பதற்கும், டீசல் பிடிப்பதற்கும் அரசுப் பேருந்துகள் தனியார் பெட்ரோல் நிலையங்களுக்குப் போகிற நிலைமை வந்தாலும்கூட, பேருந்துக் கட்டணத்தை உயர்த்தமாட்டேன் என்று உறுதிபட அதை நடைமுறைப்படுத்தி, அந்தத் துறையினுடைய கடைசி சாதனையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குப் படைத்திருக்கின்றார்கள். இன்றைக்கு 60 வயதிற்கும் மேற்பட்டவர்கள் எங்கு வேண்டுமானாலும், அதாவது, மருத்துவமனைக்குப் போவதற்கோ அல்லது கோயிலுக்குப் போவதற்கோ அல்லது உறவினர்களைப் பார்க்கப் போவதற்கோ, நம்பிக்கையோடு, துணிவோடு வீட்டைவிட்டு போய் வரலாம். அந்த உத்தரவாதத்தையும் இன்றைக்கு மூத்தக் குடிமக்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் என்கிறபோது, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிறந்த நாள் மட்டுமல்ல; இன்னும் நூற்றுக்கணக்கான பிறந்த நாளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காண வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒவ்வொரு பிறந்த நாளும் ஏழை எளியோர்களின், நலிந்தவர்களின், அடித்தள மக்களின், ஒடுக்கப்பட்டவர்களின், புறக்கணிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டுகிற, ஒளி ஊட்டுகிற பிறந்த நாளாக அமைந்திருப்பதனால், அவர் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்திட வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

[2016 பிப்ரவரி 18

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாட்டு மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளைத் தந்தார்கள். ஏற்கெனவே ஊடக விவாதங்களின்போதும், சட்டமன்றத்திற்குள்ளேயும் எதிர்க்கட்சிகள் வினா எழுப்பியபோது, "தந்த வாக்குறுதிகள் அனைத்தையும் தங்குதடையில்லாமல் நிறைவேற்றிய மகத்தான மக்கள் அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) 99 விழுக்காடு வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறது" என்று நான் பலமுறை அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறேன். இந்த ஒரு கோரிக்கையை, இந்த ஒரு வாக்குறுதியை மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த ஆட்சியினுடைய இறுதிக் காலத்திலாவது நிறைவேற்றித் தருவார்கள் என்று உறுதியோடு, நம்பிக்கையோடு பேசியும் வந்தேன்.

இன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள 60 அகவையைக் கடந்த ஒட்டுமொத்த மூத்த குடிமக்களுக்கும் இந்த அன்புப் பரிசை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் உலகம் முழுவதும் பரவி வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழ் சமூகமுமே மகிழ்ச்சி அடையும். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய நம்பிக்கையை அரசியலில், சமூகப் பொருளியலில் பதித்ததோடு, தமிழ்ச் சமூகம் தன்மானத்தோடு, சுயமரியாதையோடு, கௌரவத்தோடு வாழ்வதற்கும், அவர்களது வாழ்வில் வசந்தத்தை வாழ்நாளெல்லாம் தந்து மகிழ்வதையே தன் வாழ்நாள் நோக்கமாகக் கொண்டிருக்கிறவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தங்களுடைய பிறந்த நாளிலே, 24–2–2016 அன்றைய பிறந்த நாள் பரிசாக, மூத்த குடிமக்களுக்கு இந்த அன்புச் செய்தியைத் தந்திருக்கிறார்கள். அதோடு மட்டும் நின்றுவிடவில்லை; 'அந்த விண்ணப்பத்தை அவர்கள் கணினியிலே பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்; அல்லது பணிமனைகளிலே கேட்டு வாங்கிக்கொள்ளலாம்; அதற்குக் கால நிர்ணயம் எதுவும் இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால், பெரியவர்கள் முண்டியடித்துக் கொண்டுபோய் உடனே வாங்க வேண்டிய அவசியம் இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் விண்ணப்பத்தைத் தந்து, அந்த அடையாள அட்டையை மற்றும் டோக்கன்களைப் பெற்றுக் கொண்டு பயணம் செய்யலாம். இதனால் ஏறத்தாழ 60 இலட்சம் அல்லது ஒரு கோடி மூத்த குடிமக்கள் பயனடைவார்கள். இன்று தமிழ்நாட்டிலே இந்த இனிப்பான செய்தியைக் கேட்டு 60 வயதைக் கடந்தவர்களெல்லாம் மகிழ்ச்சியடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டிலே தந்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டிலே தந்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.



2016 பிப்ரவரி 18] [திரு. உ. தனியரசு]

இன்னும் சொல்லப்போனால், இந்திய தேசத்தினுடைய தலைநகரான டெல்லியிலே, கல்விச் சாலைகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு, அவர்களிடையே ஆர்வத்தைத் தூண்டுவதற்கு, தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டங்களைப் பின்பற்றவேண்டுமென்று டெல்லி சட்டமன்றத்திலே, எதிர்க்கட்சித் தலைவர் பேசியது இன்று டெல்லியில் செய்தியாக வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், தலைநகர் டெல்லிக்கே வழிகாட்டியாக இருக்கிற முதல்வர்; இந்தியாவிற்கு வழிகாட்டியாக இருக்கிற ஆட்சியாளர்; உலகத்திற்கே வழிகாட்டியாக இருக்கிற ஆட்சியாளர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சமூகத்தினுடைய எல்லா நிலைகளிலும் இருக்கின்ற மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கிற, கடைசி மனிதனினுடைய துன்பத்தை, துயரத்தைத் தீர்க்கின்ற அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு. நான் பலமுறை அழுத்தந்திருத்தமாக 'இலவசம்; கட்டணம் இல்லாதது' குறித்தெல்லாம் சொன்னேன்.

சுதந்திரம் பெற்று 67 ஆண்டுகள் ஆன பிறகும்கூட, ஆதரவற்ற முதியவர்கள் வெறும் 500 ரூபாய்தான் உதவித் தொகையாகப் பெற்று வந்தார்கள். ஈன்றெடுத்த பிள்ளைகளால் நிராகரிக்கப்பட்ட அந்த நலிந்த முதியவர்களுக்கு, நலிந்த மக்களுக்கு, கடைசி காலத்தில் இருக்கிற மக்களுக்கு, அத்தனை முதியவர்களுக்கும், ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடனே ஒரே கையெழுத்தில் 500 ரூபாயை ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்தவர் மாண்புமிகு அம்மா

அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான்கூட மாண்புமிகு அமைச்சர் பெருமகனாரோடு கிராமப்புறங்களில் அரசுத் திட்டங்களுக்காக மக்களைச் சந்திக்கின்றபோது, திரும்பத் திரும்பச் சொன்னோம். எதிர்க்கட்சிகளே இந்தக் கோரிக்கையை வைக்கவில்லை. மூத்த குடிமக்களுடைய உதவித் தொகையை 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று எதிர்க்கட்சிகள்கூட கோரிக்கை வைக்கவில்லை. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த நலிந்த, வயது முதிர்வு பெற்றவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த 500 ரூபாயை, ஆயிரம் ரூபாயாக ஒரே கையெழுத்தில் உயர்த்தித் தந்ததன் காரணமாக, ஏறத்தாழ 30 இலட்சம் முதியவர்கள் அந்த உதவித் தொகையைப் பெற்று, இப்பொழுது வாழ்க்கையில் நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதுபோன்றுதான், இப்பொழுது அதே மூத்த குடிமக்களுக்கு, அரசுப் பேருந்துகளிலேகூட கட்டணம் இல்லாமல் பயணம் செய்வதற்கு இந்த ஆணையைப் பிறப்பித்து, இன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய பிறந்த நாள் பரிசாக இதை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-ல் தனது பிறந்த நாள் பரிசாக இதைத் தந்திருப்பதன்மூலம் 100 விழுக்காடு அளவிற்கு சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றி, உலகத்திலுள்ள ஆட்சியாளர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாய் விளங்குகிறார். ஜனநாயகத்தின்பால், மக்களாட்சியின்பால், தனி மனித உரிமைகளின்பால் மிகுந்த நம்பிக்கை வைத்து, சட்டமன்றத்தினுடைய மரபுகளை, மாண்புகளைப் பின்பற்றுவதோடு, சட்டமன்றத்திற்கு வெளியிலிருப்பவர்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாத்து, நீதியை, சட்டத்தைப் பாதுகாத்து, நீதியின் வடிவமாய் விளங்கி, சமூக நலனிலே அக்கறை கொண்டு, அனைத்துப் பிரிவு மக்களின் பேரன்பைப் பெற்றிருக்கிற, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வருகின்ற 2016 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை கண்டிராத அளவிற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெறவிருக்கிறார்கள்; மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த ஆண்டு பிறந்த நாள் பரிசாக தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் அதைத் தரவிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் 234 தொகுதிகளிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா



அவர்கள் மகத்தான வெற்றியைப் பெறுவார்கள்; பெறுவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, இந்த இனிய செய்தியைத் தந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் தலைதாழ்ந்த பாராட்டுதல்களை, வணக்கத்தைத் தெரிவித்து, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி பாராட்டி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயது முடிந்த முதியவர்களுக்கெல்லாம் அரசுப் பேருந்துகளிலே இலவசமாகப் பயணம் செய்யலாம் என்ற புதிய அறிவிப்பை, சிறந்த அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் பேரவை விதி 110—ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். 2011—லே சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தபொழுது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். 'அந்தத் தேர்தல் வாக்குறுதிகளை 5 ஆண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றியே தீருவேன்' என்று சூளுரைத்து, தமிழக மக்கள் நல்ல வாழ்வாதாரத்தைப் பெற வேண்டும் என்பதற்காக திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 'தொலைநோக்குத் திட்டம்—2023' என்பது ஒரு முக்கியமான திட்டம். 2011 தேர்தலை மட்டும் மனதில் கொண்டு, மக்களைச் சந்திக்கின்ற ஒரு தலைவியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்திருந்தால், 2016 வரைதான் திட்டங்களைத் தீட்டியிருப்பார்கள். ஆனால், தமிழகம் முன்னேற வேண்டும்; தமிழகம் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக வர வேண்டுமென்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'தொலைநோக்குத் திட்டம்—2023' என்ற திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாக அனைத்துத் துறைகளிலும் செயல்படுவதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உருவாக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும்தான் காரணம். இன்றைக்கு அவை அனைத்தும் தமிழக மக்களைச் சென்றடைந்திருக்கின்றன.

[திரு. பி.வி. கதிரவன்] [2016 பிப்ரவரி 18

அதுமட்டுமல்ல; அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டிருப்பதோடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'இந்த மக்கள் தன்னுடைய வாழ்நாளில் யாரிடமும் இலவசம் பெறக்கூடாது என்ற நிலையை எப்படியாவது என்னுடைய காலத்தில் உருவாக்குவேன் என்று சொல்லியதோடு, அந்த நிலையையும் உருவாக்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்பதை நான் இந்த நேரத்தில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; தேர்தல் வாக்குறுதியைக் கொடுத்தது மட்டுமல்லாமல், அவ்வப்போது மக்களுக்கு என்ன தேவையோ, அவற்றையெல்லாம் பல்வேறு திட்டங்களாக பேரவை விதி 110—ன்கீழ் அறிவித்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுடைய, உலகத்தில் வாழ்கின்ற தமிழர்களுடைய இதயமாக விளங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நீடூழி வாழ்ந்து, தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குடும்பத்துடன் கோயிலுக்குப் போகின்றபோது, என் பெயரைச் சொல்லி அர்ச்சனை செய்யச் சொல்வேன். இன்றைக்குத் தமிழ் பேசக்கூடியவர்கள் 8 கோடிக்கும் மேல் இருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கின்ற பல கோடி மக்கள், அதாவது, பள்ளிகளிலே படிக்கின்ற மாணவ, மாணவிகள், அவர்கள் மட்டுமல்லாமல், தமிழகத்தில் வாழ்கின்ற தாய்மார்கள் என இப்படி பல கோடி பேர் மாண்புமிகு அம்மா அவர்கள் பெயரிலே அர்ச்சனை செய்து கொண்டேயிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பல கோடி மக்கள் 'அம்மா, அம்மா' என்று அர்ச்சனை செய்துகொண்டு, வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள்.



2016 பிப்ரவரி 18] [திரு. ஆ. நாராயணன்]

இன்றைக்குக் காலையிலே ஒரு செய்தியைப் பத்திரிகையிலே பார்த்தேன். இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் விதி 110—ன்கீழ் அறிவிப்பு ஏதாவது செய்வார்கள் என்ற செய்தியைப் பார்த்தேன். பேரவை விதி 110—ன்கீழ் அறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்று நானும் நினைத்தேன். அதற்கேற்ப, விதி 110—ன்கீழ் இன்றையதினம் மூத்த குடிமக்களுக்காகவே ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. இன்றைக்குக் காலையில் விதி 110—ன்கீழ் அறிக்கை குறித்த செய்தியைப் படிக்கின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தேர்தல் வாக்குறுதிகளிலே, இந்த மூத்தக் குடிமக்கள் குறித்த திட்டம் மட்டும் விட்டுப்போய்விட்டதே என்று நினைத்தேன். ஆனால், அந்தத் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் முழுமையாக நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்காக உங்களுக்குக் காலங்காலமாக நாங்கள் நன்றி கடன்பட்டவர்களாக இருப்போம். நீங்கள் பல நூறு ஆண்டுகள் நோயில்லாமல் வளமோடு வாழ வேண்டுமென்று இந்தப் பிறந்தநாளில் வாழ்த்தி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

**திரு. ஆ. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் கேட்காமலேயே கொடுக்கக்கூடிய தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுடைய நோக்கம்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நோக்கம். ஏனென்றால், அவர்கள் கேட்காமல், அதற்குமுன், விதி 110—ன்கீழே கொடுக்கக்கூடிய முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—45

இன்றைக்கு என்னைப்போன்ற 60 வயதுக்கும் மேல் உள்ள மூத்த குடிமக்கள் முதற்கட்டமாக, சென்னை மாநகரப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம் என்றும், இது தனது பிறந்த நாளன்று நடைமுறைப்படுத்தப்படும் என்றும் விதி 110—ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக என் குடும்பத்தின் சார்பாகவும், என் சார்பாகவும், தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

[திரு. ஆ. ராமசாமி [2016 பிப்ரவரி 18

*(மேசையைத் தட்டும ஒலி) எனக்கு 60 வயது நடந்து கொண்டிருக்கிறது; அதன் காரணமாகவும் இன்றைக்கு நான் இந்த அறிவிப்பை மனதார வரவேற்கிறேன். 24–2–2016 அன்று பிறந்த நாள் காணும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 60 வயதிற்கு மேல் இருக்கக்கூடிய மூத்தக் குடிமக்கள் முதல்கட்டமாக சென்னை மாநகரப் பேருந்துகளிலே கட்டணமின்றி பயணம் செய்யலாம் என்றும், இந்தத் திட்டம் வருகின்ற 24–2–2016 முதல் செயல்படுத்தப்படும் என்றும் விதி 110–ன்கீழ் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இதை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.*

*நான் அறிந்த வரையில், இந்திய இரயில்வே துறையில் மட்டும், 60 வயது நிரம்பிய முதியவர்களுக்கு 50 விழுக்காடு கழிவுடன் இரயில்களில் பயணம் செய்யக்கூடிய திட்டம் இருக்கின்றது. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும், எந்த அரசுப் பேருந்திலும், (மேசையைத் தட்டும் ஒலி) முதியோர்களுக்கு முற்றிலும் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யக்கூடிய திட்டம் இல்லை. அதை முதன்மையாக அமல்படுத்தியிருக்கக்கூடிய மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழ்நாடு இருக்கின்றது. இந்தத் திட்டம் முதல் கட்டமாக சென்னையிலே அமல்படுத்தப்பட்டு, நடைமுறைகளைப் பார்த்துவிட்டு, அது தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி விரிவுபடுத்தப்படவிருக்கிற திட்டத்தையும் அவர்கள், விரைவிலே இறை அருளால் நிறைவேற்றுவார்கள் என்று நம்பி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*



2016 பிப்ரவரி 18]

***திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தில் இருக்கின்ற நாடுகளில்* Welfare State *என்று கேட்டால், எல்லோரும் நார்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய இந்த* Scandinavian *நாடுகளைத்தான் சொல்வார்கள். மக்கள் நல்வாழ்விலே உன்னத நிலை இருந்தால், அதை* Welfare State *என்று சொல்வார்கள். இனிமேல் வரப்போகிற வரலாற்று ஆசிரியர்களிடம்* Welfare State *எது என்று கேட்டால், அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்கிற தமிழ்நாடுதான் என்று சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், முதியோர்களை மகிமைப்படுத்தக்கூடிய ஒரு திட்டமாக இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஒரு காலகட்டத்தில், 10 இலட்சம் பேர்கள்கூட முதியோர் உதவித் தொகைகளைப் பெறாத நிலையில், இன்றைக்கு 31 இலட்சம் பேருக்குமேல் கொடுக்கின்ற அரசாங்கம், இந்த அரசாங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் 1,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கின்ற அரசாங்கம் இந்த அரசாங்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*தேர்தல் அறிக்கைகளை கதாநாயகர்களாகவும், கதாநாயகிகளாகவும் பார்க்கின்ற தலைவர்கள் இருக்கிற தமிழ்நாட்டில், தேர்தல் அறிக்கையை, 'மக்களிடமிருந்து நாம் பெற்றக் கடன்' என்று நினைக்கக்கூடிய உன்னதமான அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) "கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று சொல்வார்கள். அதுமாதிரி தேர்தல் அறிக்கையில் 54 பத்திகளில் கொடுத்த 150 வாக்குறுதிகளையும் ஒன்று தவறாமல் நிறைவேற்றிய அரசாங்கம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த 54 உறுதிமொழிகளிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த தலையாய உறுதிமொழிகளில் ஒன்று இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி, தனிநபர் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவேன் என்பதுதான். தமிழக அரசாங்கத்தின் சென்ற வருடத்தினுடைய* GDP *முதன்முதலாக 11 இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டியிருக்கிறது என்று 2 நாட்களுக்கு முன்பு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வாசித்தார்கள். அந்த 11 இலட்சத்தைத் தாண்டுகின்றபோது, 7.8 கோடி ஜனத்தொகையை நீங்கள் கணக்குப்*

போட்டு பார்த்தீர்கள் என்றால், 1 இலட்சத்து 37 ஆயிரத்து 588 ரூபாய் நம்முடைய தமிழகத்தின் தனிநபர் வருமானம். கடந்த மைனாரிட்டி அரசாங்கத்தினுடைய இறுதிநாளில் அவர்கள் அறிவித்த பட்ஜெட்டை பார்த்தீர்கள் என்றால், தனிநபர் வருமானம் அன்றைய தேதியில் 69,001/- ரூபாய். சரியாக இரண்டு மடங்கு தனிநபர் வருமானம் கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உன்னதமான சாதனையை சாதித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

***Dr. (Tmt.) NANCY ANN CYNTHIA FRANCIS:** Hon'ble Speaker and my most beloved Amma, these last five years have been the golden years for Tamil Nadu. (Thumping of desks) You have transformed Tamil Nadu and we are very grateful to you Amma, for this. I would like to make a special mention in a few words of certain select schemes that came to my mind, namely, the Health sector, the Education sector and the Housing sector. You have empowered the women of Tamil Nadu, for which we are very grateful to you. Amma. (Thumping of desks) You have uplifted the downtrodden. You have provided house for the poor, the elders, the widows, the orphans and the downtrodden. You have been, in short, a real Amma to all of us. God bless you Amma, always. (Thumping of desks) Thank you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகமே எனது குடும்பம்; தமிழ்நாட்டு மக்களே எனது பிள்ளைகள்; தமிழக மக்களின் நலனே எனது நலன்' என்று மக்களுக்காகவே அல்லும் பகலும் வாழும் (மேசையைத் தட்டும் ஒலி) ஏழரை கோடி தமிழக மக்களின் கலங்கரை விளக்கம்; நாள்தோறும் நாங்கள் சொல்லும் திருமந்திரம்; "அம்மா, அம்மா, அம்மா"; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் திருவடி பணிந்து வணங்குகிறேன். திட்டங்களே திகைத்துப் போகும் அளவிற்கு



திட்டங்கள் தரும் தாயே! தர்மத்தின் பெயர் நீங்களே அம்மா. போக்குவரத்துத் துறைக்கு கடந்த காலத்தில் கிள்ளிக் கொடுத்தவர்கள் மத்தியில், அம்மா நீங்கள் அள்ளிக் கொடுத்த அட்சயப் பாத்திரம்! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வாழ்நாளில் அன்னை தெரசாவையும், வீரமங்கை வேலு நாச்சியாரையும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியையும், அள்ளிக் கொடுத்த அமுதசுரபி மணிமேகலையையும் நாங்கள் கண்டதில்லை. ஆனால் இவர்கள் அனைவரையும் ஒருசேர பார்ப்பதே உங்கள் வடிவில்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாட்டு வண்டிகள்கூடப் போகாத இடத்தில் பாதையைச் சரிசெய்து. போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றுக்கெல்லாம் மணிமகுடம் வைத்தது போல், தமிழர்களுடைய இதயங்களில் இன்று மனம் குளிர, ஒட்டுமொத்த குற்றால நீரையே கொண்டு வந்து கொட்டியிருக்கிறீர்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்கெனவே முதியோர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக ஆயிரம் ரூபாய் கொடுப்பதன் காரணமாக, அவர்களுடைய பிள்ளைகளாக இருந்தாலும் சரி, மருமகளாக இருந்தாலும் சரி, விழுந்து விழுந்து அவர்களைக் கவனிக்கின்ற காலம், மாண்புமிகு அம்மாவின் காலம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டணமின்றி பயணம் செய்யும் வாய்ப்பைக் கொடுத்திருப்பதன் காரணமாக, பெற்றோர்கள் அவர்களுடைய பிள்ளைகளைப் பார்த்துச் சொல்வார்கள்; 'இனிமேல் நான் எங்கே செல்ல வேண்டுமென்றாலும் எங்கள் அம்மா பாஸ் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் போய்க்கொள்வேன். உங்களுடைய கார் வேண்டாம், பைக் வேண்டாம்' என்று சொல்கின்ற அளவிற்கு காலத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள்.

இந்திய வரைபடத்தில் இதுவரைக்கும் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், வயது முதிர்ந்த மூத்த குடிமக்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கிட 110 விதியின்கீழ் அறிவிப்பு வெளியிட்டுள்ள தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தங்கள் பாதம் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே வாக்குகளைப் பெறுவதற்காக, மக்களை ஏமாற்றுவதற்காக தேர்தல் வாக்குறுதிகளை கொடுத்தார்கள். ஆனால், தேர்தல் வாக்குறுதி என்று எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்தால், அது 100 சதவிகிதம் நிறைவேற்றுகின்ற வாக்குறுதியாகத்தான் இருக்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றிக் காட்டியிருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* கடந்த கால ஆட்சியிலும் வாக்குறுதியைக் கொடுத்து ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா கொடுத்த வாக்குறுதியால், மக்களின் வாழ்வாதாரம் இன்றைக்கு உயர்ந்திருக்கிறது; அதனால் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கின்றது அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்குப் படித்தவர்கள், வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள், தொழில்புரிவோர், படித்த இளம்பெண்கள், அரசு ஊழியர்கள், இவர்கள் அனைவரின் குறிக்கோள், எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நீடுழி வாழ்ந்து, இன்னும் பல நற்காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றையதினம் இந்த பஸ் பயண சலுகை பெற்றவர்களும், எங்களைப்போன்ற, கழகத்தினுடைய ஒன்றரை கோடி தொண்டர்களும், நாங்கள் அனைவரும் சேர்ந்து, இந்த 68–வது பிறந்த நாளில் மாண்புமிகு அம்மா அவர்களிடம் கேட்பது, 234–க்கு 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற்று, தமிழகத்தில் மீண்டும் ஒரு வரலாற்றைப் படைக்க வேண்டும் என்பதுதான். உலகத்திலேயே ஒரு வரலாறைப் படைக்கின்ற தேர்தலாக 2016 சட்டமன்றத் தேர்தல் இருக்கும். ஏனென்று சொன்னால், எதிர்க்கட்சியே இல்லாத சட்டமன்றம் என்று சொன்னால், அது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளுகின்ற தமிழ் மாநிலம் மட்டும்தான் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை திட்டங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். இன்னும் 2016–லே ஆட்சிக்கு வந்தால், தமிழக மக்களுக்கு என்னென்ன திட்டங்களெல்லாம் கிடைக்குமோ என்று மக்களெல்லாம் அன்றாடம் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* கடந்த கால ஆட்சியினர் கொடுத்த வாக்குறுதிகளை





நிறைவேற்றவில்லை. நாங்கள் அதுகுறித்து கேட்டபோது, "வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றாலும், இதயத்திலே இடம் இருக்கிறது" என்று சொல்லியவர்கள்தான் கடந்த கால ஆட்சியாளர்கள். ஆனால், மக்களின் இதயங்களிலே இடம் பெற்றிருக்கின்ற ஒரே தலைவர் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்கள், இதுபோன்ற நல்ல பல திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் தமிழக மக்கள் மட்டுமல்ல; "அம்மாவைப்போன்று எங்களுக்கு யாரும் இல்லையே" என்று பக்கத்து மாநில மக்கள்கூட நினைக்கின்றார்கள். இன்றைக்குத் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் இந்தியாவிலேயே முதல்வருக்கெல்லாம் முதல்வராக இருக்கின்ற எங்கள் தாய் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மட்டும்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றையதினம் மாநிலம் கடந்துகூட இந்தக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறதென்று சொன்னால், அது எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் மட்டும்தான் முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படிப்பட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நீடூழி வாழ்ந்து, மீண்டும் 2016–லே முதல்வராகி, பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்திட வேண்டுமென்றும், அவர் பல்லாண்டு, பல நூறு ஆண்டு வாழ வேண்டுமென்று, அவருடைய 68–வது பிறந்த நாளிலே, வாழ்த்துவதற்கு வயதில்லையென்றாலும், இரு கரம் கூப்பி, தலைவணங்கி, விடைபெறுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *"கருவறையிலே, நீ வளர இடம் கொடுத்தேனே, நான் இருக்க ஒரு மூலை உன் வீட்டில் இல்லையா?"* என முதியோர் இல்லத்தில் வாடும் தாய்மார்களின் நிலை; தந்தையிடம் பணம் இருந்தால் அவர் பெயரை தன் பெயரோடு இணைத்துக்கொள்ளும் உள்ளங்கள்; பணம் இல்லாவிட்டால், முதியோர் இல்லத்திலே சேர்க்கும் நிலை சில இடங்களில் உள்ளதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதியோர் ஓய்வூதியத் தொகையை இரண்டு மடங்காக்கி, ஈகைக்கும் தலையாய இலக்கணமாய்த் திகழ்ந்தவர். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு,

[பேரவைத் தலைவர்] [2016 பிப்ரவரி 18

முதியோர் பயனுற, கட்டணமில்லாப் பேருந்து பயணச் சலுகையை வழங்கி, தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிய ஒரே முதல்வர்; *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்கும் மேலாக செயல்படுத்திய தலைவர், முதல்வர் என்ற பெருமையைச் சேர்த்துள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அருள்தரும் தெய்வங்கள் மண்ணிலே ஆயிரம் இருக்கலாம். ஆசிகள் வழங்கும் முதியோர் என்னும் தெய்வங்களைத் தாங்கும் தலைவராய், முதியோர் குலம் காத்து, வளம் சேர்க்கும் குல தெய்வமாய் மாண்புமிகு அம்மா அவர்கள் தொண்டு செய்து வருகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* முதியோர் கோரிக்கைகளைக் கேட்க யாரும் இல்லை என்பது அன்றைய காலம். அந்தக் கால சாபத்தைப் போக்கி, சோகத்தை நீக்கி, சுவாமி விவேகானந்தரின் குருவான இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்களின் பிறந்த நாளான இன்று, 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இலவச பஸ் பயணம் என்ற அறிவிப்பை வெளியிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பிறந்த நாள் முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என வரமாகத் தந்தருளி, சேய் காக்கும் தாயாக முதியோர்தனைக் காக்கும் முதல்வராக, தொடர்ந்து முடிசூடவுள்ள *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்குப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

## 5. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். *(குறுக்கீடுகள்)* திரு. வி.சி. சந்திரகுமார், நான் வேறு அலுவலுக்குள்ளே சென்று விட்டேனே? பிறகு என்ன? *(குறுக்கீடுகள்)* அதுதான் இன்றைக்கு அம்மா அவர்கள் ஓர் அற்புதமான அறிவிப்பைத் தந்திருக்கிறார்களே! அதற்குப்பிறகு என்ன? *(குறுக்கீடுகள்)* இல்லை, நீங்கள் பொது விவாதத்தில் பேசப்போகிறீர்கள். ஏதாவது இருந்தால் அப்போது பேசலாம். *(குறுக்கீடுகள்)* செல்வி கே. பாலபாரதி, என்ன? சொல்லுங்கள்.



2016 பிப்ரவரி 18]

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாற்றுத் திறனாளிகள். . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் பேசும்போது உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசுவீர்கள் அல்லவா? அப்போது உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)* இல்லை, அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதெல்லாம் என்னுடைய ஆய்வில் உள்ளன. அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* இதுசம்பந்தமாகக் கேட்க முடியாது. அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் உள்ளது குறித்து நீங்கள் கேட்க முடியாது. *(குறுக்கீடுகள்)* என்ன? செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் பேசுவீர்கள் அல்லவா? அப்போது பேசலாம். உட்காருங்கள். செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள்.

*நண்பகல் 12–00*

*[தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள் (திரு. சி. மைக்கேல் ராயப்பன், திரு. செ. அருண் பாண்டியன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. க. தமிழழகன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. க. பாண்டியராஜன், திருமதி ஆர். சாந்தி மற்றும் திரு. மு. அருண் சுப்பிரமணியன் ஆகியோர் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]*

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடிக் கொண்டிருந்த மாற்றுத் திறனாளிகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. அதை நீங்கள் வற்புறுத்த முடியாது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் சொல்கிறேன், இருங்கள். *(குறுக்கீடுகள்)* டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்ற விஷயங்கள். அதைப்பற்றியெல்லாம் நீங்கள் என்னிடம் கேட்க முடியாது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* டாக்டர்

[பேரவைத் தலைவர்] [2016 பிப்ரவரி 18

கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)*

## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருமே எதிர்பார்க்காத வகையில், சங்கம் வளர்த்த மதுரை மாநகரில், தமிழ்த்தாய்க்கு சிலை அமைக்க உத்தரவு பிறப்பித்து, தமிழ் மொழியின் பாரம்பரியப் பெருமையை உயர்த்திக் காட்டிய (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். விஜயதரணி, கொஞ்சம் இருங்கள். அவர் குழுவின் அறிக்கையை அளிக்கிறார்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, இன்றைக்கு நீங்கள் பொது விவாதத்தில் பேசப்போகிறீர்கள்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இன்று பேச இருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இன்று பேச இருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, நீங்கள் இன்று பேச இருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஜி. நாராயணன்:** அனைத்துத் தரப்பு மக்களையும் வாழ வைக்கும் வகையில் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்திவரும் ஏழைகளின் இதய தெய்வம்



2016 பிப்ரவரி 18] [திரு. பி.ஜி. நாராயணன்]

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி, இன்று காலையில்தான் உங்கள் கட்சி உறுப்பினர் என்னிடம் அறிவிப்பைக் கொண்டுவந்து கொடுத்தார். (குறுக்கீடுகள்) இன்று காலையில்தான் கொடுத்தார். (குறுக்கீடுகள்)

*(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**திரு. பி.ஜி. நாராயணன்:** 2015–2016 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று ஐம்பத்தொன்பதாவது முதல் இருநூற்று எழுபத்திரண்டாவது வரையிலான 14 அறிக்கைகளை, குழு அதிகாரம் அளித்துள்ளவாறு, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடு)

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவையிலிருந்து வெளியேறினார்.)

## 8. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2016–2017 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

***திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு, தே.மு.தி.க. சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்த என்னுடைய தலைவர் கேப்டன் அவர்களுக்கும், சட்டமன்றத்திற்குள் மீண்டும் நான் காலடி எடுத்து வைப்பதற்கு உத்தரவிட்டு தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதியரசர்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, எனது உரையைத் தொடங்குகிறேன்.



ஈரோடு கிழக்குத் தொகுதி மக்களால் சட்டமன்ற உறுப்பினராக ஐந்தாண்டுகளுக்கு நான் தேர்வு செய்யப்பட்டாலும், சுமார் மூன்றரை ஆண்டுகள் மட்டுமே சட்டமன்ற உறுப்பினராக நான் பணியாற்றியிருக்கிறேன். தே.மு.தி.க. 'எதிர்க்கட்சி' என்பதைவிட, 'எதிரிக்கட்சி'யாகப் பார்க்கப்பட்டு, எனது தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் என்றால், என்னவென்று கேட்கும் நிலைதான் உள்ளது. பாதாளச் சாக்கடைப் பணி பத்தாண்டுகள் ஆகியும், இன்னும் நிறைவு பெறவில்லை; போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க மேம்பாலங்கள் கேட்டும் அமைக்கப்படவில்லை; பேருந்து நிலையம் இன்னும் விரிவாக்கம் செய்யப்படவில்லை; அரசு செவிலியர் மருத்துவக் கல்லூரி கேட்டும் கிடைக்கவில்லை; சாலைகள் குண்டும், குழியுமாக உள்ளன. குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை; பெரும்பள்ளம் ஓடை தூர் வாரி, தடுப்புச் சுவர்கள் அமைக்கப்படவில்லை; ஜவுளி வணிக வளாகம் கட்டப்படவில்லை; முதல்வரால் அறிவிக்கப்பட்ட பொது சுத்திகரிப்பு நிலையமும் செயல்பாட்டிற்கு வரவில்லை.

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் பேசியபோது, பாதாளச் சாக்கடைத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார். இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டமாகும். அந்தத் திட்டத்தைப் போடுகின்றபொழுதே, அதனை முழுமையாக முடிக்கின்ற அளவிற்கு அந்தத் திட்டத்திற்கான நிதியை அவர்கள் ஒதுக்கியிருக்க வேண்டும். அதாவது, பணிகளை முழுமையாக முடித்து, மீண்டும் தார்ச் சாலைகள் அங்கே அமைப்பது வரையிலான பணிகளுக்குத் தேவையான நிதியை ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், கடந்த

மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பாதாளச் சாக்கடை அமைப்பதற்கு நிதியை ஒதுக்கினார்களேதவிர, பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகள் முடிவுற்றபிறகு, மீண்டும் சாலைகள் போடுவதற்கு உரிய நிதியை ஒதுக்கத் தவறிவிட்டார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற, பிறகு, ஈரோடு மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்கீழ் கடந்த ஆட்சிக் காலத்தில் தோண்டப்பட்ட பள்ளங்களைச் சீரமைப்பதற்காக 68 கோடி ரூபாயை தாயுள்ளத்தோடு ஒதுக்கி உத்தரவிட்டிருக்கிறார்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் பேசியபோது, 'ஈரோடு மாவட்டத்தில் பாலம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இன்னும் அது கட்டப்படவில்லை' என்ற ஒரு கருத்தைக் கூறினார். ஈரோடு பொது மருத்துவமனை அருகே மேம்பாலம் கட்டுவதற்கு வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டு, ரூ.69.5 கோடி நிதி ஒதுக்கீடு கோரி, வரப்பெற்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள், அவருடைய தொகுதியான ஈரோடு மாநகரத்தில் எந்த வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என பொத்தாம்பொதுவான தவறான தகவலை இந்த அவையில் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதிலிருந்து அவர் சரியாக, அவருடைய தொகுதிப் பக்கமே செல்லவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*



ஈரோடு மாவட்டம் மற்றும் ஈரோடு வட்டத்தில் உள்ள காளிங்கராயன் கால்வாய், பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள காளிங்கராயன் அணைக்கட்டிலிருந்து பிரியும் மிகவும் பழமையான கால்வாய் ஆகும். இக்கால்வாயின் மொத்த நீளம் 56 மைல் 5½ பர்லாங் ஆகும். இதன்மூலம் சுமார் 15,743 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடைகின்றன. இக்கால்வாயின் தலைப்பு சரகம் முதல் 15/0 முடிய ஈரோடு மாநகராட்சி நகர்ப்புற மக்கள் வசித்து வருகிறார்கள். வலதுகரை பகுதியில் எண்ணற்ற சாயப் பட்டறைகள், சலவைப் பட்டறைகள் மற்றும் தோல் தொழிற்சாலைகள் இயங்கி வருவதால், இவற்றின் கழிவுநீர் மற்றும் ஈரோடு மாநகராட்சியின் கழிவுநீர் ஆகியவை கால்வாயில் கலந்ததால், காளிங்கராயன் கால்வாயின் நீர் மாசடைந்து, விவசாயப் பெருமக்களும், ஈரோடு மாநகராட்சி மக்களும் நீரை உபயோகப்படுத்த இயலாத நிலையில் இருந்தனர். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கால்வாயை சீரமைத்துக் கொடுக்கும்படியும், கால்வாயில் மாசுபட்ட நீர் கலக்காதவண்ணம் மேம்பாட்டுப் பணிகளைச் செய்து கொடுக்கும்படியும் உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஈரோடு மாநகராட்சி மக்களின் கோரிக்கையை ஏற்று, முதல்கட்டமாக, காளிங்கராயன் கால்வாயின் மைல் 3/3 மைல் 9/7 வரை காளிங்கராயன் கால்வாயை லைனிங் செய்யவும், மாசுபட்ட நீர் கால்வாயில் கலக்காமல் தனியாக ஓடைக்குச் செல்ல பேபி கால்வாய் அமைப்பதற்கும் ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் இன்றைக்குச் சிறப்பாக செய்து முடிக்கப்பட்டுள்ளன என்பதை நான் பணிவோடு இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், இரண்டாவது கட்டமாக, காளிங்கராயன் கால்வாய் தலைப்பு சரகம் முதல் மைல் 3/3 வரை காளிங்கராயன் கால்வாயை லைனிங் செய்யவும், மாசுபட்ட நீர் கால்வாயில் கலக்காமல் தனியாக ஓடைக்குச் செல்ல பேபி கால்வாய் அமைப்பதற்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.41.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளும் இன்றைக்குச் சிறப்பாக முடிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட இரண்டு பணிகளையும் சிறப்பாக

செய்து முடிக்க, மாண்புமிகு அம்மா அவர்கள், மொத்தம் ரூ.91.00 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கி ஆணையிட்டதால், இன்றைக்கு அந்தக் கால்வாயில் சிறப்பான முறையில் நீர் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, காளிங்கராயன் கால்வாய் நீர், ஈரோடு மாநகர மக்கள் உபயோகப்படுத்துகின்ற நீராக, இன்றைக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், எழுமாத்தூர் கிராமம், குரங்கன்பள்ளம் ஓடையின் குறுக்கே இன்றைக்கு ரூ.69.35 இலட்சம் செலவில் தடுப்பணை ஒன்று கட்டப்பட்டுள்ளது.

மேலும், ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பணப்பாளையம் கிராமத்தில், குரங்கன்பள்ளம் ஓடையின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ரூ.43 இலட்சம் செலவில் நல்ல முறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், அவல்பூந்துறை கிராமம், ஊஞ்சலூர் கிளை வாய்க்கால் மைல் 6–6–50–ல் வாய்க்காலின் குறுக்கே மற்றொரு பாலம் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், 740 ஆண்டுகள் பழமைவாய்ந்த காளிங்கராயன் அணைக்கட்டினை மேலும் புனரமைப்பதற்கான பணிகள் ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு, தற்போது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் மேற்கொள்ளப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டம் குறித்தும், சாலைகளின் நிலைமைகள் குறித்தும் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அனைத்துத்





தொகுதிகளிலும் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் விட்டுச் சென்ற திட்டங்களும் இன்றைக்குச் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4 நகராட்சிகள், 2 பேரூராட்சிகள் மற்றும் 5 ஊராட்சிகளை இணைத்து ஈரோடு மாநகராட்சி 25–10–2011 முதல், விரிவாக்கம் செய்யப்பட்ட ஒருங்கிணைந்த மாநகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. இவற்றில் ஈரோடு மற்றும் 4 நகராட்சிகளைச் சேர்த்து தீட்டப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு 209.22 கோடி ரூபாய் அளவிற்கு நிருவாக அனுமதி பெறப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள 5 ஊராட்சிகள் மற்றும் 2 பேரூராட்சிப் பகுதிகளிலும்—எஞ்சியுள்ள பகுதிகளுக்கும்கூட—பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த திருவாளர்கள் SPD Consultants என்ற தனியார் ஆலோசகர்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேற்படி ஆலோசகரால் இத்திட்டத்தின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, தொடர் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், இறுதி அறிக்கையின்பேரில் அரசு உத்தரவு பெற்று, இம்மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளிலும்கூட இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலைகள் குறித்தும் குறிப்பிட்டார்கள். ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது நடைபெற்றுவரும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக, 315 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி பணிகள் நிறைவுபெற்ற இடங்களில், கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்பேரில், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்மூலமாக 196.76 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் சீரமைப்பு செய்யப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்துவிடப்பட்டுள்ளன.

அதேபோல், தற்போது சிறப்புச் சாலைகள் குறித்தும் அந்த மாவட்டத்தை சார்ந்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 2015–2016 ஆம் ஆண்டு சிறப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ், 27.13 கி.மீ. நீள சாலைகளை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இன்றைக்கு 25.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அவை நடைபெற்று வருகின்றன. அதேபோல், விடுபட்ட அனைத்துச் சாலைப் பணிகளையும் மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இன்றைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பாதாளச் சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்படும்போதே, அத்திட்டத்தின்கீழ் சாலைகள் மேம்பாட்டிற்கும் தேவையான நிதி ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு அதற்கான நிதியை முழுமையாக ஒதுக்கவில்லை. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தத் திட்டத்திற்கும்கூட நிதியொதுக்கி, அனைத்துச் சாலைகளும் மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல், 86.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, 30–1–2016 அன்று உத்தரவு பெறப்பட்டு, மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு 19–2–2016 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, இன்றைக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஈரோடு மாநகராட்சிக்கு மட்டுமல்ல; உங்கள் தொகுதிக்கு மட்டுமல்ல; இன்றைக்கு அனைத்துத் தொகுதிகளிலும் உள்ள அனைத்துச் சாலைகளையும் மேம்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே சட்டமன்றப் பேரவையில், கடந்த காலத்தில் ஒரு கோரிக்கை வைத்தார்கள். ஈரோடு மாநகரைப் பொறுத்தவரையில், ஜவுளித் தொழில்கள் நிறைந்த மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால்,



ஜவுளி சாயச் சலவை உற்பத்தியாளர்கள் நலனைப் பாதுகாக்கிற வகையில், ஒரு பொது சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை அப்போது வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, 700 கோடி ரூபாய் செலவில் ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் ஈரோட்டில் அமைக்கப்படும் என்று உத்தரவிட்டு, அதற்கான பூர்வாங்கப் பணிகள் போர்க்கால அடிப்படையில் இன்றைக்கு நடைபெற்று வருகின்றன. இந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வைத்திருக்கிறார்கள். கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின்போது 110–விதியின்கீழ் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, அந்தத் திட்டப் பணிகள் தற்போது போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு இந்தச் சட்டமன்றப் பேரவையில் அமர்ந்துகொண்டிருக்கிறார் என்று சொன்னால், அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணையினால்தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

> "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
> அன்றே மறப்பது நன்று"

என்ற குறளுக்கேற்ப, நீங்கள் நன்றி மறவாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நன்றிகளை நினைவுகூர வேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றியைப்பற்றிப் பேசுகிறார். நாங்கள் உங்களோடு கூட்டணி வைக்கவில்லையென்றால், நீங்கள் அமைச்சராகி இருக்க முடியுமா என்பதை முதலில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

[திரு. வி.சி. சந்திரகுமார்][2016 பிப்ரவரி 18

*(குறுக்கீடுகள்)* நாங்கள் உங்களோடு கூட்டணி வைக்கவில்லையென்றால், நீங்கள் அமைச்சராக ஆகியிருப்பீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களோடு நாங்கள் கூட்டணி அமைத்ததால்தான், நாங்கள் அமைச்சராகி இருக்கிறோம் என்று சொல்கிறார். நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், தனித்து நின்று ஒரு இடத்தைக்கூட பெற முடியவில்லையே? இவர்களுடைய வாக்கு வங்கி என்ன என்பதை இதன்மூலமாகத் தெரிந்துகொள்ளலாம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் *12–15*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** திரு. வி.சி. சந்திரகுமார், உள்ளாட்சி மன்றத் தேர்தல் மட்டுமல்ல; நாடாளுமன்றத் தேர்தலில் அனைவருடனும் கூட்டணி சேர்ந்து போட்டியிட்டீர்களே, அதிலேயாவது வெற்றி பெற்றீர்களா? மக்கள் உங்களை முற்றிலும் நிராகரித்துவிட்டார்கள் என்பதற்கு கடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலும் ஒரு சாட்சி; *(மேசையைத் தட்டும் ஒலி)* நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலும் ஒரு சாட்சி: இதுமட்டுமல்ல, இனிமேல் எந்தத் தேர்தல் வந்தாலும், உங்களுடைய நிலை அதுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* வரும் சட்டமன்றத் தேர்தலிலும் உங்களுக்கு என்ன கிடைக்கும்? இதற்குமுன் நடந்த தேர்தலில் நீங்கள் என்ன பெற்றீர்கள்? பெரிய cipher. *(மேசையைத் தட்டும் ஒலி)* வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் நீங்கள் பெறப் போவது அதைத்தான்; அதாவது *234*–க்கு cipher; மாண்புமிகு அம்மா அவர்கள் பெறப் போவது *234*–க்கு *234*. *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுதான் நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.



2016 பிப்ரவரி 18]

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** *(குறுக்கீடுகள்)* நான் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ** நாடாளுமன்றத் தேர்தலில் ஏன் ஒரு இடத்தில்கூட உங்களால் வெற்றி பெற முடியவில்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார்; ஆதாரமில்லாமல் சொல்லக்கூடாது. ** குறித்துப் பேசிய வாசகம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிய வார்த்தைகள் அவைக்குறிப்பிலே இருக்குமானால், நான் பேசிய வார்த்தைகளும் அவைக் குறிப்பில் இருக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொன்னீர்கள். அது ஆதாரமில்லாத குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டு அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)* நான் சொல்லியது உட்பட அவைக்குறிப்பிலிருந்து அது நீக்கப்படுகிறது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இதற்குமேல் உங்களுக்கு என்ன ஆதாரம் வேண்டும்? ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள், ஏன் நிற்கிறீர்கள்? *(குறுக்கீடுகள்)* ** என்று சொன்ன வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியவற்றை நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கினால், நான் நிச்சயமாக பேசவே மாட்டேன். (குறுக்கீடு) நான் பேசவில்லையென்றால் பரவாயில்லை, அதைப்பற்றிக் கவலை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவை விதிகளுக்கு மாறாக நீங்கள் பேசும்போது நான் என்ன செய்ய முடியும்?

**திரு. வி.சி. சந்திரகுமார்:** அவர்கள் பேசியது எல்லாம் அவைக்குறிப்பில் இருக்கும். நாங்கள் பேசுவது அவைக்குறிப்பில் இருக்காது. அப்படியென்றால், நாங்கள் ஏன் பேச வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை விதிகளுக்கு மாறாக நீங்கள் பேசினால், நான் அதை நீக்க வேண்டியிருக்கும்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** நான் அவை விதிகளுக்கு மாறாகப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரமில்லாமல் நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. அது விதிகளுக்கு ஒவ்வாதது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** அவை விதிகளுக்கு மாறாக நான் எதையும் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை விதிகளுக்கு மாறாக நீங்கள் பேசுவதால், அதை நான் அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன். வேறொன்றும் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ** அதனடிப்படையிலே நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் கொஞ்சம் பொறுமையாக, கோபப்படாமல், இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பேசலாம். தொகுதியில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால், அதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் என்னுடைய தொகுதி பிரச்சினைகளைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். சம்பந்தமில்லாமல் பிரச்சினையை ஆரம்பித்தது எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள். அதன்பிறகு நான் பேசியதை மட்டும் நீக்கினால் என்ன அர்த்தம்? இதற்குப்பிறகு இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பேச வேண்டிய விஷயங்கள்தான் என்னிடம் இருக்கின்றன. அதைப்பற்றித்தான் பேசப் போகிறேன். வேறு எதுவும் பேசப் போவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** நான் பேசிய வார்த்தைகள் அவைக்குறிப்பில் இருக்க வேண்டும். அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிய வார்த்தை மட்டும் அவைக்குறிப்பில் இருக்கும்; நான் பேசிய வார்த்தை அவைக் குறிப்பில் இருக்காது என்றால், என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேசியது உட்பட, நீங்கள் ஆதாரமில்லாமல் பேசிய அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவ்வளவுதான்; வேறொன்றும் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பேச்சை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆதாரமில்லாமல் பேசவில்லையே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் நங்கூரம் பாய்ச்சியதைப் போல அதிலேயே நிற்காமல் வேறு சப்ஜெக்ட்டைப்பற்றிப் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார், நீங்கள் பேச வேண்டியதைப் பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்குப் பேசுவதற்கு நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் உங்களுக்குக் கொடுத்த நேரத்தை நன்றாகப் பயன்படுத்துங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** நீங்கள் பேசியதற்கு நான் பதில் சொன்னால், அதை ஏன் அவைக்குறிப்பில் ஏற்ற மாட்டேன் என்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிய வார்த்தைகள் அவைக்குறிப்பில் இருக்க வேண்டும்; நான் பேசியது அவைக்குறிப்பில் இருக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்கள் பேசியதிலிருந்து, அனைத்தையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இரண்டில் ஏதாவது ஒன்றை முடிவு செய்யுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினரைப் பற்றித் தவறாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத்தான் கட்டளையிடுகின்ற உரிமை இருக்கிறது. உறுப்பினர்களுக்குக் கட்டளையிடுவதற்கு உரிமை இல்லை. ஆகவே, அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு)

*பிற்பகல் 12—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் ஆதாரமில்லாமல் பேசியவற்றைத்தான் நான் நீக்கியிருக்கிறேன். நீங்கள் ஆதாரத்தோடு பேசினால், அது அவைக்குறிப்பில் இருக்கும். நீங்கள் ஆதாரமில்லாமல் பேசியதைத்தான் நான் நீக்கியிருக்கிறேன். அவ்வளவுதான்; நீங்கள் மேற்கொண்டு பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அதையெல்லாம் வற்புறுத்த முடியாது; பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** நீங்கள் அதைச் சொல்லுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதையெல்லாம் பேசாதீர்கள். நீங்கள் வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அதை விட்டுவிடுங்கள். வேறு விஷயங்களைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அப்படியென்றால் நீங்கள் எல்லாவற்றையும் நீக்குங்கள். (குறுக்கீடு) அவர் பேசியது மாத்திரம் இருக்கும்; நான் பேசியது இருக்காது என்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பது எதற்கு? (குறுக்கீடு) அதை நீங்கள் சொல்லக்கூடாது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு வேண்டுகோள்தான் விடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிகளுக்கு மாறாக, ஆதாரம் இல்லாமல் பேசினால், அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குவது என்னுடைய கடமை. அதைத்தான் நான் செய்திருக்கிறேன். நீங்கள் ஆதாரத்தை என்னிடம் கொடுக்கவில்லை. அதுகுறித்துப் பேசினீர்கள்; நான் நீக்கியிருக்கிறேன். நீங்கள் வேறு விஷயங்கள் குறித்துப் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரமில்லாமல் எதையுமே பேசவில்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதை என்னிடம் கொண்டுவந்து காட்டுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அந்த ஆதாரங்களை என்னிடத்தில் கொண்டுவந்து காண்பித்தால், அதை நான் பார்த்துவிட்டு முடிவைச் சொல்கிறேன். (குறுக்கீடு) இப்பொழுது ஒன்றும் பேச முடியாது. நீங்கள் மேற்கொண்டு வேறு விஷயங்களைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ** வேறு என்ன ஆதாரம் வேண்டும் உங்களுக்கு?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் பேசுவது எதுவுமே அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) நீங்கள் தேவையில்லாமல் எதையாவது பேசிக் கொண்டேயிருந்தால், நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு)

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறு சப்ஜெக்ட்டிற்குப் போகிறேன். எங்களுடைய மாவட்ட அமைச்சர் பேசியதிலிருந்து அனைத்தையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்; நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லையென்றால், எப்படி நான் பேச முடியும்? நீங்கள் குற்றச்சாட்டு சொல்லிக் கொண்டேயிருப்பீர்கள்; நாங்கள் பதிலுக்கு மறுப்பு சொல்லக்கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார், குற்றச்சாட்டு இல்லை. மாண்புமிகு அமைச்சர்கள், தாங்கள் பொறுப்பேற்றுப் பேசுகிறார்கள். அது அவைக்குறிப்பிலே இருக்கின்றது. (குறுக்கீடு) நீங்கள் ஆதாரத்தை என்னிடத்திலே கொடுத்துவிட்டு, நான் அனுமதித்தால், அதன்பிறகு பேசினால் அது அவைக்குறிப்பில் இருக்கும். இல்லையென்றால், அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்படுகிறது. ஆகவே, நான் அதை நீக்கியிருக்கிறேன். எனவே, நீங்கள் மேற்கொண்டு வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ** என்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ** என்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுங்கள். நீங்கள் என்னோடு argument செய்யாதீர்கள். நீங்கள் நடக்க வேண்டியதைப் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** எங்களுடைய மாவட்ட அமைச்சர்தான் முதலில் இந்தப் பிரச்சினைக்குக் காரணமாக இருந்தார். எனவே, அவர் பேசியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குங்கள். அதற்குப்பிறகு நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விருப்பம் இருந்தால் பேசலாம். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, பேசுவதற்கு நான் அனுமதி அளித்திருக்கிறேன். பேசுவதும், பேசாததும் உங்களுடைய விருப்பம். (குறுக்கீடு) அதற்கு ஒன்றும் நான் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) இல்லை; அதற்கெல்லாம் நான் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) பேசுவதற்கு உங்களுக்கு நான் வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வேறு விஷயத்தைப் பேசுங்கள். நீங்கள் அதையே ஏன் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் அப்படி என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) நீங்கள் பேரவைத் தலைவரை வற்புறுத்த முடியாது. நான் எடுக்கின்ற நடவடிக்கை குறித்து நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) இல்லை; அதுதான் முடியாது. விதிகளில் அதற்கு இடமில்லை. (குறுக்கீடு) விதிகளில் அதற்கு இடமில்லை. நீங்கள் ஆதாரத்தை என்னிடம் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் ஆதாரத்தைக் கொடுக்கவில்லை. ஆகவே, எனக்கு நீக்க வேண்டிய சூழ்நிலை. நீங்கள் ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். நான் அதை அவைக்குறிப்பில் வைத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு, நான் அனுமதித்தால் நீங்கள் பேசலாம். பேசுவது அவைக்குறிப்பில் இருக்கும். (குறுக்கீடு) ஆதாரமில்லாமல் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. மேற்கொண்டு வேறு விஷயத்தைப் பேசுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** நீங்கள் ஒட்டுமொத்தமாகக் குற்றச்சாட்டைக் கூறிவிட்டு, நான் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது, ஏறாது என்று சொன்னால், அந்தக் குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? முதலில் நீங்கள் அதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதே argument–ஐ செய்து கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. வேறு பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடு) இல்லையென்றால், உங்களுக்கு நான் மைக் கொடுப்பதில் பிரயோஜனம் இல்லை. (குறுக்கீடு) நான் வேறு உறுப்பினரை அழைக்க வேண்டியதிருக்கும். (குறுக்கீடு)

**திரு. வி.சி. சந்திரகுமார்:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

*[தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. சி. மைக்கேல் ராயப்பன், திரு. செ. அருண் பாண்டியன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. க. தமிழழகன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. க. பாண்டியராஜன், திருமதி ஆர். சாந்தி மற்றும் திரு. மு. அருண் சுப்பிரமணியன் ஆகியோர் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]*

***திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மெட்டுவாவி கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். மெட்டுவாவி ஊராட்சி மன்றத் தலைவராக மூன்று முறையும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும் இருந்த எனக்கு, 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த அவையில் பணியாற்றிட எனக்கு வாய்ப்பளித்த வாழும் ஒன்பதாவது வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் என் தாள்பணிந்த வணக்கங்களை முதற்கண் நன்றி மலர்களாகக் காணிக்கையாக்குகிறேன் தாயே! எழுகின்ற பிறப்பெல்லாம் உங்கள் எளிய தொண்டனாக நன்றியோடு பணியாற்றிட நானும், என் குடும்பத்தாரும், ஆண்டவனிடம் பிரார்த்திக்கிறோம் தாயே!

*பிற்பகல் 12–25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–ல் சட்டமன்றத் தேர்தலின்போது, மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன 54 தேர்தல் வாக்குறுதிகளோடு, சொல்லாத எத்தனையோ வாக்குறுதிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி செயல்படுத்தியிருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இப்பொழுது, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அளித்திட்ட 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற நல்லதோர் வாய்ப்பினை எனக்கு நல்கிட்ட, எங்கள் 1½ கோடி தொண்டர்களின் நாடி நரம்புகளில் ஓடுகின்ற இரத்தத்தில் உள்ள அணுக்களின் உயிர்த்துடிப்பாய், (மேசையைத் தட்டும் ஒலி) எந்நாளும் எங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் வைத்து நித்தம், நித்தம் பூஜித்துவரும் புது யுகம், நாளைய தமிழ்ச் சமுதாயம் தலைநிமிர்ந்து நிற்க எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களைத் தந்து, இரு நான்கு திசை எங்கும் இல்லாத, ஈடு இணையற்ற நிருவாகத் திறமையால், தமிழ் கூறும் நல்லுலகம் இத்தரணியில் எங்கெங்கு இருந்திட்டாலும், அத்தனை அங்கங்களையும் சுத்தப்படுத்தி, துரிதப்படுத்தி, செம்மைப்படுத்தி, செழுமைப்படுத்தி, செயல்படுத்தி, பக்குவப்படுத்தி, பாதுகாக்கும் பாசத் தாய், சந்தியா தாய் தன் தவ பலத்தால் ஈன்றெடுத்த, இக்கலியுகத்தில் காணக் கிடைக்காத கடவுளின் அவதாரம், எங்கள் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் பணிவான வணக்கங்களைக் காணிக்கையாக்குகின்றேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த நான்கே முக்கால் ஆண்டுக் கால நல்லாட்சிபோல், இவ்வுலகில் வேறெங்கும் கண்டதில்லை என நாளைய வரலாறு போற்றிப் புகழும்வண்ணம், கொட்டிக் கொடுத்த திட்டங்களால் பட்டி தொட்டி எங்கும் மக்கள் பாராட்டி, இத்தனை திட்டங்கள் தந்து, எங்கள் வாழ்வில் வசந்தம் மலரச் செய்த, பெண் இனத்தின் பேரொளியாய், காத்து நிற்கின்ற கடவுளாய் நாங்கள் மாண்புமிகு அம்மா அவர்களைப் பார்க்கின்றோம். 'இனி என்றும் எங்கள் வாக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் இரட்டை இலைக்குத்தான்' என்று ஒட்டுமொத்த தமிழ்ப் பெண்களும் சாதி, மத, இன, மொழி கடந்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் கட்சிகளையும் மறந்து, அம்மா என்னும் உயிர்மெய் எழுத்துக்குள் அடங்கி, சுதந்திரக் காற்றைச் சுவாசித்து, 'வாழ்க பல்லாண்டு! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள்' என வாழ்த்துரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011–ல் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு பதவியேற்றபோது, கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்களின் கையாலாகாத்தனத்தால் தமிழ்நாடு இருண்டு கிடந்தது. எங்கும் மின்வெட்டு; மின்சாரம் எப்பொழுது வரும், எப்பொழுது போகும்

[திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி][2016 பிப்ரவரி 18

என்று யாருக்கும் தெரியாது. இதனால் பள்ளிக் குழந்தைகள் படிக்க முடியவில்லை; தாய்மார்கள் சமைக்க முடியவில்லை; விவசாயிகள் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை; தொழிலதிபர்கள் தொழில் செய்ய முடியவில்லை; கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் குடிக்க தண்ணீர் கொடுக்க முடியவில்லை; யாரும் இரவில் நல்ல முறையில் தூங்கி எழ முடியவில்லை; நித்தம், நித்தம் கூலி வேலைக்குச் செல்பவர்கள்கூட வேலைக்குச் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டு, நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரம் கேள்விக்குறியானது. 2006 ஆம் ஆண்டுவரை மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான நல்லரசு, தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக வைத்திருந்தது. அதன்பின் ஆட்சிக்கு வந்து, 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை தமிழகத்தை மின்வெட்டு மாநிலமாக ஆக்கியதுதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய சாதனை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு முதல் இன்று வரை முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த தொடர் நடவடிக்கையால்தான் இன்றைக்குத் தமிழ்நாடு மின்மிகை மாநிலமாகச் செழிப்போடு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மின்சாரம் பற்றி தி.மு.க.-வினர் பேச பயப்படுகிறார்கள். கடந்த கால ஞாபகம் மக்களுக்கு வந்துவிட்டால் என்ன செய்வது என்கிற நடுக்கம். ஆனால், அதை மக்கள் மறக்கவும் இல்லை; அவர்களை மன்னிக்கவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல; முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையானாலும், காவேரி நீர்ப் பிரச்சினையானாலும், மேகதாது அணைப் பிரச்சினையானாலும், சுயநலம் கருதி அவர்கள் ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடவில்லை. இந்த அவைக்கு அவர்கள் இன்று வரவில்லை. எப்போதும் அவர்களுக்கு இங்கே வேலையில்லை. போதும், இந்த நாடு தாங்காது. இதுவே 2016 ஆம் ஆண்டு தேர்தலில் மக்களின் தீர்ப்பாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)



2016 பிப்ரவரி 18] [திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி]

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக உள்ளது; இந்த ஒரே சாதனை போதும்; மாண்புமிகு அம்மா அவர்களின் நுண்மான் நுழைபுலத்தோடு ஆய்ந்து அறிந்து செயல்படுகின்ற நல்லாட்சிக்கு சான்று. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசின் இந்த ஒரே சாதனைக்காக, தமிழ்நாடு என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது என்றால், அது மிகையல்ல. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, இந்த நாடு நன்றி பாராட்டிக் கொண்டிருக்கிறது. 2011–ல் இந்த நல்லரசு பதவியேற்கும்முன் தமக்குத் தாமே கொலைகளை நடத்தி, சாதி மோதல்களை உருவாக்கி, சட்டம்–ஒழுங்கு கெட்டுக் கிடந்த நிலைமை எல்லாம் இருந்தது. அவற்றையெல்லாம் இன்றைக்கு மாற்றி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்கி, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டி என்ற வான்புகழ் கொண்டுள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் யாரும் பிச்சையெடுக்க வேண்டிய அவசியமில்லை. குடும்ப அட்டை மட்டும் இருந்தால் போதும்; வெறும் கையோடு சென்று, 20 கிலோ அரிசியை விலையில்லாமல் பை நிறைய வாங்கிட முடியும். அந்த வகையில், உணவு சமைக்க, உணவுக்கு உத்தரவாதம் தந்த ஒரே அரசு, இந்தியாவில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் மக்களுக்கு வாழும் மணிமேகலையாக காட்சி தருகிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆணுக்குப் பெண் சரிநிகர் சமம் என்று இருந்தாலும், தமிழ்நாட்டின் பண்பாட்டின்படி, தாய்மார்கள், சமைத்து, பிள்ளைகளுக்குத் தலைவாரி பூ முடித்து, பள்ளிக்கு அனுப்பி தானும் வேலைக்குச் செல்ல வேண்டுமென்ற நிலை இருக்கிறது. இந்த நிலையில் தாய்மார்களின் நலன் காக்க, அவர்களது வேலைபளுவைக் குறைக்க, அவர்கள் ஓய்வெடுக்க மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் போன்றவற்றையெல்லாம் குடிசை வீட்டு குப்பம்மாள் முதல் மாடிவீட்டு மருதம்மாள் வரை ‘இல்லை’ என்று சொல்லாமல் மாண்புமிகு அம்மா அவர்கள்

கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம், அனைத்துப் பெண்களின் மனதை கொள்ளை கொண்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

கிராமப்புறங்களிலே கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள் போன்றோர்களுக்கு ஆடு, மாடு, வெள்ளாடு தந்து, அவர்களது வீட்டில் விளக்கேற்றி, நாட்டின் கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு வித்திட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

தமிழகத்தில் பெற்ற பிள்ளை கவனித்தாலும், கவனிக்காவிட்டாலும், 'உற்ற பிள்ளையாய் நானிருக்கேன் உங்களுக்கு உதவ' என (மேசையைத் தட்டும் ஒலி) முதியோர் ஓய்வூதியத்தை ரூ.500/–லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்திக் கொடுத்தது, மனித நேயமிக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசுதான். அதேபோல, இன்றையதினம் அகவையில் 60 வயதைக் கடந்தவர்களுக்கு, அரசுப் பேருந்துகளிலே இலவசப் பயணம் என்று அறிவித்ததும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சிறுவயதிலே எனது வீட்டிற்கு அருகில் இருந்த தெலுங்கு பேசும் குடும்பத்தைப் பார்த்திருக்கிறேன்; துணி துவைப்பதுதான் அவர்களுடைய வேலை; மிகவும் கஷ்டம். அவர்களுக்கு 3 பெண் பிள்ளைகள்; மூன்று பிள்ளைகளுக்கும் பெயர் என்ன தெரியுமா? 'சின்ன பங்காரு, நடு பங்காரு, பெரிய பங்காரு'. அதேபோல, தமிழ் பேசும் பல வீடுகளிலும் 'சின்னதங்கம், பெரியதங்கம்'; இதுதான் பெயர். ஏன் இவர்கள் 'தங்கம், தங்கம்' என்று அழைத்தார்கள் என்றால், தங்கத்தை அவர்கள் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது; அதை வாங்குவதோ, அவர்களுக்குக் கனவாகவே முடியும். ஆனால் அவர்களுடைய வீட்டிலுள்ள பெண் பிள்ளைகள் S.S.L.C. படித்திருந்தால், அவர்களுடைய திருமணத்திற்கு தாலிக்குத் தங்கம் 4 கிராம், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கம், பட்டம் அல்லது பட்டயப் படிப்பு படித்திருந்தால், 50 ஆயிரம் ரூபாய் ரொக்கம், 4 கிராம் தங்கம் என கொடுத்து, அவர்கள் எண்ணங்களையெல்லாம் வண்ணங்களாக்கி, அழகு பார்த்தது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற ஏழை எளியவர்கள் மறப்பார்களா?



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, "மறக்க மாட்டோம்; எங்களால் முடியவில்லை எங்களது பிள்ளைகளுக்குச் செய்ய; ஆனால், தமிழ்நாட்டிலுள்ள அத்தனை ஏழை, எளிய குடும்பங்களுக்கும் தாயாக இருந்து, பெற்ற தாயினும் இந்தச் சமுதாயத்தைப் பேணிக் காக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை மறக்க மாட்டோம்" (மேசையைத் தட்டும் ஒலி) என்கிறார்கள்; பாராட்டுகிறார்கள்.

பிற்பகல் 12–35

அதுபோல, எண்ணற்ற திட்டங்களை தமிழகத்திலே செயல்படுத்துவதைச் சொல்லிக்கொண்டே போகலாம். மகப்பேறு நிதியுதவி இரட்டிப்பு, அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பரிசுப் பெட்டகம் தந்து, தாய்வீட்டுச் சீதனம், மாமன் வீட்டு வரிசைகளும் வரும் முன்னே, அம்மா அவர்களுடைய திட்டம், அவர்களை அரவணைத்து, அவர்களுக்கு ஆதரவு தருகிறது; அவர்கள் பாராட்டுகிறார்கள். திடீர் என உடல்நலக் குறைவு ஏற்பட்டால் மனங்கலங்கி, 'கையிலே காசு இல்லை; என்ன செய்வேன்?' என ஏங்கி, மூலை, முடுக்கிலே முடங்கிக் கிடந்தவர்களுக்கெல்லாம், 'முழுமையாகக் குணப்படுத்த நானிருக்கிறேன்' என்று விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்தார் மாண்புமிகு அம்மா அவர்கள். அதன்மூலம், மண் குடிசைவாசிகளும் மனம் குளிர்ந்து, 'வாழ்க மாண்புமிகு அம்மா அவர்கள் பல்லாண்டு' என வாழ்த்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் இந்த அரசிற்கு.

கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தக்குடித் தமிழன். அவனது நாளைய தலைமுறை இந்நாட்டிற்கு வழிகாட்ட வேண்டும்; பேரும் புகழும் பெற்றுத் தர வேண்டும்; தமிழ்ச் சமுதாயத்தைக் காக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, 'வாக்கு வங்கிதான் எங்கள் வாழ்வின் இலட்சியம்' என்பவர்கள் மத்தியில், நாளைய சமுதாய சிந்தனையில் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த திட்டங்கள்தான் தோன்றும். உலகில் எங்கும் இல்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்; மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) +2 வரை விலையில்லாமல் அத்தனையும் வழங்கும் திட்டம்.

[திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி][2016 பிப்ரவரி 18

இதற்காக இந்த தலைமுறை மட்டும் அல்ல தாயே; அடுத்த தலைமுறையும் உங்கள் பின்னால் அணி வகுக்கும் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இளம் பிஞ்சுகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை நெஞ்சார வாழ்த்துகிறார்கள்.

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதியிலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்

"அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி,
அதன் அருகினில் ஓலை குடிசை கட்டி,
பொன்னான உலகென்று பெயருமிட்டால்
இந்த பூமி சிரிக்கும்; அந்த சாமி சிரிக்கும்."

என்ற பாடலின் கருத்தின் அடிப்படையிலே, இன்றையதினம் கிராமப்புற ஏழைகளுக்கு 3 இலட்சம் பசுமை வீடுகள், நெசவாளர்களுக்கு 10,000 பசுமை வீடுகள், பேரூராட்சிகளில் வசிக்கும் ஏழையெளியோர்களுக்கு 20 ஆயிரம் பசுமை வீடுகள் என வழங்கி, ஏற்ற வித்தியாசங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குறைத்துள்ளது. அதனால் ஏழைகள், 'என்றும் வெல்க அம்மா' என்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி ஏராளமான வளர்ச்சித் திட்டங்களைத் தந்து, தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக்க இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் 60,610 கோடி ரூபாய் உத்தேசமாக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டின் வளர்ச்சி தங்குதடையில்லாமல் செல்ல இது உதவும். வரும் 2016–ல், சட்டமன்றத் தேர்தலில் 234–க்கு 234–ஐயும் வென்று, (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது பொருளாதார வளர்ச்சியில் உள்ள 8.01 சதவீதத்தையும் வென்று, இந்தியாவில் இரண்டாவது மாநிலமாக பொருளாதாரத்தில் இருக்கின்ற நிலையை மாற்றி, முதல் மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டுவார்கள் என்பதில் யாருக்கும் எள்ளளவும் ஐயம் இல்லை.

முதன்முதலாக, சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்ய மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு



2016 பிப்ரவரி 18] [திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி]

வருகின்றது. மலைப் பகுதித் திட்டங்களை மத்திய அரசு கைவிட்டாலும், அதற்காக 75 கோடி ரூபாய் ஒதுக்கி, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இயற்கையைப் பாதுகாப்பதில் இருக்கின்ற நல்லெண்ணத்தை பறைசாற்றுவதாக மேற்கண்ட பணிகள் இருக்கின்றன என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குக் கிடைத்த நல்ல பெயராகும்.

தமிழகத்தில் உள்ள கிராமத்தில் வறுமையை ஒழிக்க புதுவாழ்வுத் திட்டம். அதற்காக 900 கோடி ரூபாயை உவந்து அளிக்க முன்வந்துள்ளது உலக வங்கி. அரசு நிருவாகத்தில் மாண்புமிகு அம்மா தலைமையிலான அரசு பீடுநடை போடுகிறது என்று சொல்வதற்கு இந்த ஒரே ஒரு காரணம் போதும்.

வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை அளிக்க 414 வேலைவாய்ப்பு முகாம்கள். அதன்மூலம் 1,13,881 இளைஞர்கள் தனியாரிடம் வேலை பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டதோடு, 840 வாழ்வாதாரக் குழுக்கள் 6,356 கோடி ரூபாய் சேமிப்பு செய்ததுடன், 25,785 கோடி ரூபாய் கடனும் பெற்றுள்ளன. அதேபோல, நகர்ப்புற வறுமையை முற்றாக ஒழித்திட, தமிழ்நாடு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தினைப் புதிதாகத் தொடங்கி, அதற்காக 250 கோடி ரூபாய்; நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் நகரிலுள்ள ஏழை, எளியவர்கள் வாழ்வில் வளம் பெறுவார்கள்.

பிற்பகல் 12–40

'தமிழ், தமிழ்' என்று மொழியை தன் சுயநலத்திற்காகப் பயன்படுத்துவோர் மத்தியில், தமிழ் வளர்ச்சிக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த காலத்தில் 175 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. தொல்காப்பியர் அமர்வு, சங்க கால அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கு 90.04 கோடி ரூபாய், பழந்தமிழர் கட்டடக் கலையைப் பிரதிபலிக்க இந்த இடைக்கால பட்ஜெட்டில் 37.25 கோடி ரூபாய் ஒதுக்கி, உண்மையான தமிழின் பாதுகாவலர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக தமிழ் கூறும் நல்லுலகம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டுகின்றது.

ஆன்மிக நெறிமுறைகளைப் பின்பற்றி, மகாமகம் செல்வோருக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த, 135.38 கோடி ரூபாய் ஒதுக்கி, அவர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு.

இதுபோல், சட்டம்—ஒழுங்கு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், சிறைச்சாலைகள், நீதி நிருவாகம் போன்றவற்றிற்கு நிதிகளை ஒதுக்கியதுடன், நிருவாக ஆளுமையை மேம்படுத்த மட்டும் 10,000—க்கும் மேற்பட்ட இ—சேவை மையங்கள்; மக்கள் குறைகளை உடனுக்குடன் தீர்க்க 1100 என்ற 24 மணி நேரமும் இயங்கும் இலவசத் தொலைபேசி இணைப்பு என அத்தனைத் துறைகளிலும் தங்குதடையின்றி நிருவாகம் செம்மையாக நடக்க, கடந்த நான்கே முக்கால் ஆண்டு ஆட்சிக் காலத்தில் நிதி ஒதுக்கி, இடைக்கால பட்ஜெட்டிலும் தொடர்ந்து அந்தச் சேவை மக்களுக்குச் சென்றடைய நிதி ஒதுக்கி, செவ்வனே இந்த ஆட்சி பீடுநடை போட்டு வருகிறது. இவை அனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களின் அளப்பரிய முயற்சிகளால்தான் என்பதை இந்த நாடு நன்கு அறியும்.

'அய்யோ! கடன், கடன்' என்று கூறி, சந்திலே சிந்துபாடி மக்களை ஏமாற்ற நினைக்கும் ஏமாளிகள் நாட்டில் ஏராளம். நேற்று நடந்ததை இன்று மறந்துவிடுவார்கள். உண்மைக்குப் புறம்பானவற்றை உரக்கச் சொல்லி, ஏமாற்றி, அரியணை ஏறி ஏற்றம் பெறலாம் என்றால், எதிர் முகாம்களில் இருப்பவர்கள் ஏமாந்து போவார்கள்.

கடையமு வள்ளல்களோடு எட்டாவது வள்ளலாகத் திகழ்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், நெருப்பிலே இட்டு, சுட்டு எடுத்த பத்தரை மாற்றுத் தங்கம், ஒன்பதாவது வள்ளல் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை சிறு நரிகள் கூட்டம் சுற்றி நின்று சப்தம் எழுப்பினாலும், சிம்மம் சிலிர்த்தெழுந்தால், சிதறி ஓடும் நாலா பக்கமும் நரிகள் கூட்டம் என்ற விதத்தில் இங்கே எதிர்ப்பதற்கே ஆளில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

2016 தேர்தல் மட்டுமல்ல; தமிழகத்தில் இனி என்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிதான் என மக்கள் முடிவு எடுத்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களின் உண்மையான சொரூபத்தை அவர்கள் கண்டுகொண்டார்கள்.





இனியும் உங்களுடைய ஏமாற்று வேலை பலிக்காது. அதனால் உங்களை ஓரத்தில், தூரத்தில், ஓராயிரம் காதத்தில், ஆழத்தில் எறிந்து விட்டார்கள்; இனி எழுந்திருக்கவே முடியாது. எப்போதும் ஏமாற்றமே! உங்களுக்கு அது தப்பாது என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தாய், தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாக்க, தன் குழந்தைகள், நோய் நொடி இல்லாமல் வாழ, சமையல் பொருட்களோடு, சிறு தானியங்களையும் தனித் தனியாகச் சேமித்துப் பாதுகாத்து, குடும்பத்திற்குப் பொங்கி, படைத்து, அனைவரின் நலன் காக்க பாடுபட்டு வந்தார்கள். அந்த வீட்டிற்குள் இடையிலே புகுந்த ஏமாற்று வித்தை கண்ட ஒருவர், அந்தத் தாய் சேமித்த அத்தனை பொருட்களையும் எடுத்து மண்ணிலே கொட்டி, ஏதேனும் காசு, பணம், பொருள் உள்ளதா என்று கிளறி கலக்கிவிட்டார். அதனால் அனைத்து சமையற்பொருட்களும் ஒன்றாக சமைக்க முடியாத நிலைக்கு மண்ணோடு, மண்ணாகக் கலந்து விட்டது. மீண்டும் வந்த தாய், பார்த்தார்கள்; பதைபதைத்தார்கள். நான் நன்றாக நோய் நொடி இல்லாமல் மக்கள் வாழ சேமித்த எல்லாவற்றையும் இப்படி வீணடித்துவிட்டார்களே! எப்படி நான் இளைத்த மகனுக்கு எள் சோறு சமைப்பேன்? கொழுத்த மகனுக்கு எப்படி கொள்ளு இரசம் கொடுப்பேன்? கடும் வயிற்றுப் புண்ணிற்கு எப்படி கம்பங்கூழ் காய்ச்சுவேன் என்று அங்கலாய்த்து, பக்கத்து வீட்டுப் பார்வதியை அழைத்து, அவற்றையெல்லாம் எப்போதும்போல் இருக்க கூலி கொடுத்து, கூட தானும் உழைத்து, எப்போதும் போல் செய்வதற்கு எப்பாடு பட்டிருப்பார்களோ, அதுபோல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அவர்கள் செய்த உருப்படியில்லாத திட்டங்களினால், அவர்களால் ஏற்பட்ட கடன் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட கோடிகள். அந்த இடையிலே வந்த ஏமாற்று வித்தைக்காரன் செயலால், பக்கத்து வீட்டுப் பார்வதிக்குக் கூலி கொடுத்தது, அண்டை வீட்டுத் தோட்டத்தில் அறுவடைக்கு வந்ததையெல்லாம் எடுத்து, எதிர்காலத்திற்கு முதலீடு செய்ததுதான் இன்றுள்ள கடன்.

ஆக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் இருந்தபோது, ஏற்பட்ட கடனை இன்றுள்ள கடனோடு கூட்டிப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சி நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன்; இத்தனை நல்ல திட்டங்களை அறிவித்த

[திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி][2016 பிப்ரவரி 18

மாண்புமிகு அம்மா அவர்கள் எங்கே? ஒரு திட்டத்தையும் உருப்படி இல்லாமல் செய்து, தமிழகத்தை இருளில் மூழ்கச் செய்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி எங்கே? நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்துப் பேச வேண்டும். இந்தக் கடன் ஒரு கடன் அல்ல; இங்கே முதலீடு செய்யப்பட்டுள்ளது. அத்தனையும் வருங்காலத்தில் வருவாயாக மாறப்போகிறது. 2016–லும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதலமைச்சராக வென்று, (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திர சாதனை புரியப்போகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–45*

பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் சொல்லாத திட்டங்களைக்கூட செயல்படுத்தியிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள் 250 கோடி ரூபாயை பொள்ளாச்சி உட்கோட்டத்திற்கு ஒதுக்கி, 5 வருடப் பராமரிப்புடன், இன்றைக்குத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நெடுஞ்சாலைகளும் பளபளவென்று மின்னுகின்ற அளவிற்கு அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக பொள்ளாச்சி தொகுதி மக்கள் சார்பில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். மாவட்ட அரசு மருத்துவமனைக்கு ஏறக்குறைய 22 கோடி ரூபாய் ஒதுக்கி கட்டடங்கள், கருவிகள் வழங்கியதோடு, மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்களை நியமித்து, தனியார் மருத்துவமனைக்கும் மேலாக சுத்தமான மருத்துவமனையாகத் தரமுயர்த்திக் கொடுத்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களை நான் நன்றியோடு பாராட்டுகிறேன்; வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தனை பள்ளிகளிலும் கட்டடங்கள், கழிப்பறைகள், லேப்—டாப் உட்பட அறிவித்த அத்தனை திட்டங்களையும் செயல்படுத்தி, நிறைவேற்றிக் கொடுத்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பள்ளி மாணவ, மாணவியர்கள் சார்பாக நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அத்தனை குடும்பங்களுக்கும் விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர், ஆடு, மாடு, வெள்ளாடு என திட்டங்களைக் கொட்டிக் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சிதான். வரலாற்றில் என்றும் இல்லாத வகையில், 350



2016 பிப்ரவரி 18] [திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி]

ஏக்கர் பரப்பளவு கொண்ட கோதவாடி குளத்திற்கு, வறட்சியான காலக் கட்டத்தில் தண்ணீர் விட்டு பல்வேறு கிராமங்களிலே இருந்த குடிநீர்ப் பஞ்சத்தை அந்தப் பகுதியில் போக்கியுள்ளார் மாண்புமிகு அம்மா அவர்கள். அதற்காக அந்தப் பகுதி மக்கள் அனைவரும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் தேர்தல் 2001–ல், மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், தண்ணீர் வராமல் செய்தது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சாதனை. அப்போது நெகமம் பேரூராட்சி மக்கள் அனைவரும், 'எங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் மட்டும் கொடுங்கள்; வேறு எதுவும் வேண்டாம்' என்று கேட்டார்கள். இன்று அந்தப் பேரூராட்சிக்கு மட்டும் ரூபாய் 8 கோடியே 83 இலட்சத்தை ஒதுக்கி, தனிக் குடிநீர்த் திட்டமாக அறிவித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்ததன்மூலம், அந்தப் பகுதியிலே எதிர்க்கட்சிகளே இன்றைக்கு இல்லையென்ற நிலை வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய சாதனை, தொகுதி மக்களால் பேசப்படுகின்றது. இதுபோக, கோட்டூர் மேம்பாலம், மீன்கரை ரோடு மேம்பாலம், வடக்கிபாளையம் மேம்பாலம், ராமபட்டணம், வடசத்தூர் போன்ற பகுதிகளிலே கட்டப்பட்ட மேம்பாலப் பணிகள்; பொள்ளாச்சி நகரிலுள்ள பாலக்காடு சாலை, பல்லடம் சாலை, கோட்டூர் சாலை, மீன்கரைச் சாலை ஆகியவற்றை அகலப்படுத்தி, சென்டர் மீடியன் வைத்து நகர மக்களுடைய பாராட்டைப் பெற்றது மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப் பெருந்திட்டங்களோடு சிறு பணிகள் ஏராளம், ஏராளம். இதுபோல் விரைவாக வருகின்ற காலத்திலும் திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழகத்தில் எந்தக் குறையும் இல்லாத நல்லாட்சியை மாண்புமிகு அம்மா அவர்கள் நிச்சயம் கொடுப்பார்கள். வருகின்ற தலைமுறை வாழ்த்தும் தாயே உங்களை. 'திசைகாட்டும் முள், கழன்ற காம்பஸை வைத்துக்கொண்டு நடுக்கடலில் மூழ்க இருக்கும் கப்பலை கரை சேர்க்க மல்லுக்கட்டும் மாலுமியைப் போல், துடுப்பில்லா படகு சூறாவளியில் சிக்கி

[திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி][2016 பிப்ரவரி 18

தாறுமாறாக சுற்றுவதுபோல் சிலர்; பாலைவனத்தில் திக்குத் தெரியாமல் சென்று சோலையை தேடுவதுபோல் சிலர்; கானல் நீரைக் கையால் அள்ளி குடிக்கலாம் என ஓடிப் பிடிக்க நினைப்பவர் சிலர்; இரண்டு கண்களையும் இழந்தவன் பெண் பார்க்க முயல்வதைப்போலவும், கால் இரண்டும் இல்லாதவன் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்ள முயல்வதைப்போலவும், *(மேசையைத் தட்டும் ஒலி)* காது இரண்டும் கேட்காத செவிடன் இசைக் கச்சேரிக்குச் செல்ல முயல்வதைப்போலவும், வாய் பேசாத ஊமையன் வழக்கு மன்றத்திலே வாதாட முயற்சிப்பதைப்போலவும் இருக்கிறது இவர்கள் செய்கின்ற கூத்து' என இன்றைக்கு மக்கள் மத்தியிலே பேசப்படுகின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அடுத்த முறையும் ஆளப்போவது தமிழகத்தை மாண்புமிகு அம்மாதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* தொடர்ந்து ஆளப்போவது மாண்புமிகு அம்மாதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மலர்ந்திடும் தமிழ் மக்கள் வாழ்வு. திக்கெட்டும் நிலைத்திடும் மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ் என்று கூறி, வரக்கூடிய காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆனைமலை–நல்லாறு திட்டத்தையும் நிறைவேற்றி, அந்தப் பகுதி மட்டுமல்ல; சுற்றுவட்டாரப் பகுதியிலே இருக்கின்ற அத்தனை எதிர்க்கட்சிகளையும் இல்லாமல் செய்துவிடுவார்கள் என்று சொல்லி, *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நல்ல வாய்ப்பினைக் கொடுத்த தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் நான் கொடுத்து விடுகிறேன். அதைச் சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி பாராட்டி அமைகிறேன், நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**தொகுதி கோரிக்கைகள்:**

*1.* பொள்ளாச்சி நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வட்ட சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

*2.* போக்குவரத்து நெரிசலைப் போக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த மேம்பாலப் பணியை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.



2016 பிப்ரவரி 18] [திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி]

*3.* பொள்ளாச்சி நகரில் *9* ஏக்கர் பரப்பளவு கொண்ட SRMH பள்ளியை கலை, அறிவியல் கல்லூரியாக அறிவித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*4.* கோதவாடி குளம், வலசுகுளம் போன்றவற்றிற்கு மழைக்கால உபரி நீரினை விட்டு நிரப்பிக் கொடுக்க அரசாணை பிறப்பித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

*5.* உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியையும், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியையும் இணைத்து, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

*6.* பொள்ளாச்சி வருவாய்க் கோட்டம் *96* வருவாய்க் கிராமங்களைக் கொண்டதாகும். இதனை ஆனைமலை தாலுகா, பொள்ளாச்சி தெற்கு, வடக்கு தாலுகா, என மூன்றாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

*7.* பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அருகில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் இடத்தையும், பாலகோபாலபுரம் ரோட்டில் உள்ள நடுநிலைப் பள்ளியின் இடத்தையும் முழுவதுமாக எடுத்து, அரசு மருத்துவமனைக்கு வழங்கிட வேண்டும்.

*8.* பொள்ளாச்சி நகரின் வளர்ச்சிக்கு உதவிடும் மீன்கரை சாலையில் இருந்து சாம்சன் ஓட்டல் வழியாக மகாலிங்கபுரம் வரை உள்ள திட்டச் சாலையையும், ஸ்ரீராம் மகாலில் இருந்து மின் மயானம் வரை உள்ள திட்டச் சாலைகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

*9.* தென்னை நகரமான பொள்ளாச்சி சுற்று வட்டாரப் பகுதியிலுள்ள தென்னை விவசாயிகளின் நலன் காக்க, மத்திய அரசு அறிவித்த கொப்பரை கிலோ ரூ.*59.50* பைசா என்பதை, தமிழ்நாடு டேன்பெட் நிறுவனம்மூலம் மத்திய அரசின் நேபட் நிறுவனத்திற்குக் கொள்முதல் செய்து கொடுக்க உத்தரவிட வேண்டும்.

*10.* தேங்காய் எண்ணெய்யில் பாம் கெர்னல் ஆயில் கலப்பதை உடனே தடுத்து நிறுத்திட வேண்டும்.

*11.* மத்திய அரசின் தென்னை மேம்பாட்டுக் கழகத்திற்கு தமிழக விவசாயி ஒருவரைத் தலைவராக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*12.* P.A.P. திட்டத்தில் கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி வடக்கு ஒன்றியங்களில் விடுபட்ட பகுதிகளைச் சேர்க்க வேண்டும்.

*13.* P.A.P. பாசனமில்லாத பூமிகளை ஆயக்கட்டில் இருந்து விடுவிக்க நடவடிக்கை விரைந்து எடுத்து, வீணாகும் தண்ணீரைச் சேமிக்க வேண்டும்.

*14.* ஆனைமலை நல்லாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

பிற்பகல் 12–50

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு துவக்கத்தின்போது முன் பகுதி வறட்சியோடு இருந்தது; பின் பகுதி மழையோடு இருந்தது. இது இரண்டுமே அரசின் சாதனை அல்ல. 'தமிழ்நாடா? மழை நாடா?' என்று கேட்கக்கூடிய அளவிற்குப் பெரும் மழை பெய்தது. இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றத்தின்போது, இந்தச் சமூகத்தில் இருக்கக்கூடிய மனிதர்களுக்கு ஒரு நல்ல பாடத்தை மழை கற்றுக்கொடுத்தது. மதம், ஜாதி வேறுபாடு எதுவும் இல்லாமல், முதல் மீட்புப் படையாக தமிழகத்தினுடைய இளைஞர்கள்தான் பல மாடிக் கட்டடங்களைக் கடந்து சென்று, தங்களுடைய உயிரைப் பொருட்படுத்தாது, மற்றவர்களுடைய உயிரை மீட்டுக் கொண்டுவந்தார்கள். இந்த வெள்ளத்தின்போது பாதிக்கப்பட்டு, அதன்பிறகு பிரசவித்த ஒரு இளம் பெண், தன்னுடைய அழகான பெண் குழந்தைக்கு 'யூனுஸ்' என்று பெயர் வைத்தார். யார் அந்த 'யூனுஸ்' என்றால், அந்த வெள்ளத்தின்போது, தன்னந்தனியாக வீட்டுக்குள் தவித்துக்கொண்டிருந்த அந்த கர்ப்பிணிப் பெண்ணை, இந்த முகம்மது யூனுஸ்தான் தன்னந்தனியாகப் போராடி, அந்த வீட்டிற்கு உள்ளே சென்று, வெளியே கொண்டுவந்து காப்பாற்றியிருக்கிறார். ஆகவே, அவர் ஓர் இந்து பெண்ணாக



இருந்தாலும், பிறந்த தன்னுடைய குழந்தைக்கு முஸ்லிம் இளைஞருடைய பெயரை வைத்தார் என்று சொன்னால், அது தமிழ்நாட்டு மக்களுடைய மதச் சார்பற்ற மனிதநேய பண்பாடு குறித்து இந்த மழை வெள்ளக் காலத்தில் நாம் கற்றுக்கொண்ட மிகச் சிறந்த ஒரு பெரிய பாடமாக இருந்தது. இந்த நல்ல பாடத்திற்கிடையில், தலைநகர் சென்னை தலைவிரிக் கோலமாக மாறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, முதியவர்கள் பேருந்தில் செல்வதற்கு இப்பொழுது இலவசக் கட்டணச் சலுகைகளையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். அப்போது மழை வெள்ளத்திலே யாருடைய தெரு, எங்கிருக்கிறது என்று தெரியாமல் படகிலே போய்க்கொண்டிருந்தார்கள். விழுப்புரத்திலிருந்து சென்னைக்கு வர வேண்டுமென்றால், தனியாக கப்பல் விட வேண்டும் போல இருந்தது. அந்த அளவிற்கு நம்முடைய கால்வாய்கள், ரோடுகள் உடைந்து, சின்னாபின்னமாகி இருந்தன. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் நாம் எவ்வளவு பின்தங்கி இருக்கிறோம்; அதுவும் தலைநகரமான சென்னை மாதிரியான இடங்களில்; ஊடகங்கள், பத்திரிகைகள் மூலமாக மட்டுமல்ல; நேரடியாகவும் அதுபோன்ற நிலைமைகளை நாம் பார்க்க முடிந்தது.

சென்னை என்பது சுமார் 300 ஏரிகளால் சூழப்பட்டிருக்கக்கூடிய ஒரு பெருநகரம். எதிர்காலத்திலும்கூட இந்த இயற்கையினுடைய சீற்றம் என்பது நேரலாம். இதுபோன்ற ஏரிகளுக்கு மத்தியில் இருக்கக்கூடிய சென்னையில், இந்த ஏரிகளிலிருந்து வெளியேறக்கூடிய தண்ணீர் போகும் பாதைகள் எப்படி ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் நாம் பார்க்க முடிந்தது. அந்த ஆக்கிரமிப்புகள் என்பது, ஏதோ குடிசைகள் மட்டுமல்ல; பெரும் தொழில் நிறுவனங்கள், Gas cylinder இல்லாத, Oxygen cylinder இல்லாத ஆஸ்பத்திரிகள், கேளிக்கை விடுதிகள், எண்ணற்ற பல்கலைக்கழகக் கட்டடங்கள் என்று இப்படி அவரவர்களால் முடிந்த அளவிற்கு ஆக்கிரமிப்புகள் செய்து வைத்திருக்கிறார்கள். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவி ஏழை எளியவர்கள்தான்.

பிற்பகல் 12–55

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான், நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை இயற்கை கற்றுக்கொள்ளச் செய்தது.

நாங்கள் கற்றுக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய மக்கள் நலக் கூட்டணியினுடைய அருமைத் தலைவர்கள் அந்த வெள்ளத்தின்போது (குறுக்கீடுகள்) மக்கள் நலக் கூட்டணியினுடைய நான்கு தலைவர்களுமே-இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையில், அவர்கள் நேரடியாகப் போக வேண்டும் என்று இல்லை. ஆனால் போனார்கள்; வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், அந்த அடித்தட்டு ஏழையெளிய மக்கள் இருக்கக்கூடிய குடிசைப் பகுதிகளில், சாக்கடையோடு கலந்திருந்த அத்தனை அசுத்தங்களையும் அள்ளி, துப்புரவுப் பணிகள் உட்பட அத்தனைப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டார்கள். (குறுக்கீடுகள்) அங்கெல்லாம்கூட நீங்கள் வரவில்லை என்பதை நாங்களே நேரடியாகப் பார்த்தோம். இவ்வளவு பெரிய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது மொத்தமாக, “மக்கள் நலக் கூட்டணித் தலைவர்கள் போனார்கள்; போனார்கள்; போனார்கள்” என்று திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று தடவை சொல்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த போர்க்கால நடவடிக்கையின் காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து அமைச்சர்களும் சென்றார்கள்; அனைத்து அரசு அலுவலர்களும் சென்றார்கள்; அனைத்துத் தரப்பினரும் களத்திலே இறக்கிவிடப்பட்டு, மூன்றே நாட்களில் சகஜ நிலைக்கு சென்னை மாறியது என்று சொன்னால், அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாகத்தான். ஒரே ஒரு நாள் போய் குப்பையை அப்படியே எடுத்துவிட்டு, போட்டோவுக்கு போஸ் கொடுத்துவிட்டு, ‘மக்கள் நலக் கூட்டணித் தலைவர்கள் குப்பையை எடுத்தார்கள்; குப்பையை எடுத்தார்கள்’ என்கிறீர்கள். தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலிருந்து 5,000 தொழிலாளர்களைக் கொண்டுவந்து இறக்கி, துப்புரவுப் பணியாளர்களை வைத்து சென்னையில் குப்பையை அகற்றிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) நான்கே நான்குபேர் போய் குச்சியை எடுத்துக்கொண்டு, தலையிலே முண்டாசு கட்டிக்கொண்டு, இடுப்பிலே துண்டு கட்டிக்கொண்டு, சும்மா ‘இப்படி குப்பையை எடுத்தேன்; ஷாட் ரெடி’ என்று உடனே குப்பையை எடுப்பதுபோன்று போட்டோவிற்கு போஸ் தந்தால், அதற்குப் பெயர் குப்பையை எடுத்ததாக அர்த்தம் அல்ல. துப்புரவுப் பணியாளர் ஒவ்வொருவருமே இரவு, பகல் பாராமல், அருவருப்பு பாராமல் குப்பைகளை அள்ளி அள்ளிக் கொட்டினார்களே, அவர்களைத்தான் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அமெரிக்காவிலே புயல் ஏற்பட்டபோது, அங்கே அப்போதுகூட சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. ஆனால், அதுபோன்ற பிரச்சினைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே மூன்றே நாட்களில் தீர்த்து, சகஜ நிலைக்குக் கொண்டுவந்தார். அந்தப் பெருமை மாண்புமிகு அம்மா அவர்களைத்தான் சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் பணிவோடு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தலைவர்கள் எல்லாம் நிவாரணப் பணிகளின்போது குப்பை எடுத்ததைப்பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு வார்டுக்கும், ஒவ்வொரு பகுதிக்கும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழுக்களை நியமித்து, நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள். சென்னையில் இப்போது தினமும் 5,000 டன் குப்பை எடுக்கப்படுகிறது. சென்னையில் வரலாறு காணாத மழை பெய்தபோது, குப்பைகள் தேங்கிய நிலையில், 1–12–2015 முதல் 31–12–2015 வரை 2,21,366.3 மெட்ரிக் டன் குப்பைகளை அகற்றச் செய்து, சாதனை படைத்தார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கைதான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; வெளியூரிலிருந்து வரவழைக்கப்பட்டவர்களையும் சேர்த்து 42,656 நபர்கள்மூலம் துப்புரவுப் பணிகள்

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2016 பிப்ரவரி 18

மேற்கொள்ளப்பட்டன. அதற்காக அவர்களுக்கெல்லாம் ரூபாய் *2,000* வீதம் ஊக்கத் தொகையை கிட்டத்தட்ட *8,53,12,000* ரூபாய் அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். சரித்திரத்திலே இல்லாத அளவுக்குக் கிட்டத்தட்ட *2,21,366.3* மெட்ரிக் டன் குப்பையை அகற்றிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசையே சாரும். அதாவது, மழை வந்தபிறகு இவ்வளவு விரைவாக குப்பையை அகற்றிய வரலாறே கிடையாது. வெளியூர்களிலிருந்து, கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலிருந்து வந்தவர்கள் எல்லாம், 'மழை பெய்ததா? இப்படி சகஜமான ஒரு சூழ்நிலை இருக்கிறதே?' என்று கேட்டார்கள். அவ்வளவு வேகமாக, புயல் வேக நடவடிக்கையை எடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* செல்வி கே. பாலபாரதி, ஒரு நிமிடம் இருங்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புச் சகோதரி அவர்கள் மிகச் சிறப்பாகப் பேசுவதுபோல் பேசினார்கள். 'உங்களையெல்லாம் நாங்கள் பார்க்கவில்லை' என்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, அனைவரும் எந்தவிதமான உயிர்ச் சேதமும் இல்லாமல், பாதுகாப்பான இடங்களிலே தங்க வைக்கப்பட்டனர் என்பது உண்மை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *1–00*

சென்னை மாநகராட்சியிலே உள்ள அம்மா உணவகங்கள் மூலமாக, பாதிக்கப்பட்டவர்கள் பள்ளிக்கூடங்களிலும், முகாம்களிலும், எங்கெங்கெல்லாம் தங்கவைக்கப்பட்டிருந்தார்களோ, அங்கெல்லாம் அனைவருக்கும் எந்தவிதமான குறைவுமின்றி



2016 பிப்ரவரி 18] [திருமதி எஸ். கோகுல இந்திரா]

தொடர்ச்சியாக உணவு வழங்கப்பட்டது. சுகாதாரப் பணிகள்பற்றி நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த நேரத்திலே அதற்கு பதில் அளிப்பார்கள். பால், பிஸ்கட் என்று அனைத்தும் கொடுக்கப்பட்டு, எல்லா வகையிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைவருக்கும் தாயாக இருந்தார் என்பதுதான் உண்மை. *(மேசையைத் தட்டும் ஒலி)* நீங்கள் ஒரு சகோதரியாக இருக்கக்கூடிய இந்த நேரத்திலே உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அம்மா உணவகங்களிலே பணியாற்றிய அந்தப் பெண்கள் எந்தவிதமான ஓய்வும் இல்லாமல் *24* மணி நேரமும் தொடர்ச்சியாக, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உணவு வழங்கினார்கள். அதற்காக அவர்களை நீங்கள் பாராட்ட வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* "உங்களையெல்லாம் பார்க்கவில்லை" என்று, மனசாட்சியே இல்லாமல் நீங்கள் சொல்வது ஏற்கத்தக்கது அல்ல என்பதை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிவாரணப் பணிக்கு வந்தபோது, உங்களில் யாரையும் பார்க்கவில்லை; அதைத்தான் 'நான் பார்க்கவில்லை' என்று சொன்னேன். *(குறுக்கீடுகள்)* எதற்கு நீங்களாக கற்பனை செய்துகொள்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வேறு விஷயத்தைப் பேசுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாருடைய சேவையையும் குறைத்துப் பார்க்கவில்லை. அரசு தரப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையையோ அல்லது யார் தரப்பிலும், எவருடைய சேவையையும் நான் குறைத்துப் பார்க்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் வந்தார்கள்? யார் பார்த்துக்கொண்டார்கள்? யார் பாதுகாத்தார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாருக்கும் தெரியாது; மக்களுக்குத் தெரியும். இவர்கள் வரும்போது, நாங்கள் இல்லை என்பதெல்லாம் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள்தான் பார்த்துக்கொண்டார்கள்; மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாங்கள் அனைவரும் பணியாற்றினோம் என்பதை மக்கள் தெரிந்துகொண்டார்கள்; மக்கள் பார்த்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வரும்போது உங்களைப் பார்க்கவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாங்கள் எல்லாம் சென்னையை சரியாக செம்மைப்படுத்தி, நீங்கள் வந்தபோது சகஜ நிலைக்குக் கொண்டு வந்திருந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் சகஜ நிலையில் வைத்ததற்குப்பிறகுதான், நீங்கள் வந்து பார்த்திருக்கிறீர்கள். அதனால்தான் எங்களை பார்க்க முடியவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை வெள்ளத்தின் சுவடுகளை தன் கொடை உள்ளத்தால் துடைத்தெறிந்த முதலமைச்சர்! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய சார்பிலே மூத்த அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும் தீபாவளி அன்றிலிருந்து, தொடர்ந்து 25 நாட்களுக்கும் மேலாக களத்திலே, இருந்தார்கள். சாமானியனோடு படகிலே சென்று, மாட்டு வண்டியிலே சென்று, ஜே.சி.பி. இயந்திரத்தின் மேலே ஏறிச் சென்று, துடித்துக்



கொண்டிருந்த, போராடிக்கொண்டிருந்த ஒவ்வொருவரையும், அங்கேயிருந்த அத்துணை கழகத் தோழர்கள், அரசு அலுவலர்களின் உதவியோடு, மீட்டெடுத்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் தாண்டி ஒவ்வொரு அமைச்சர்களும், அரசு அலுவலர்களும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும்-இன்னும் சொல்லப் போனால், 24 மணி நேரமும் ஒரு தலைமைச் செயலகம் இந்தியாவிலேயே விழித்திருந்தது என்று சொன்னால், அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைமைச் செயலகம்தான். அந்த அளவிற்கு விழித்திருந்து, வெள்ள நிவாரணப் பணியிலே ஈடுபட்டது.

நீங்கள் அமைச்சர்களையோ, மற்றவர்களையோ பார்க்கவில்லை என்று சொன்னால், இன்றைக்கு இவ்வளவு பெரிய வெள்ள பாதிப்பு ஏற்பட்டதற்குப் பிறகு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல முழுமையாக சகஜ நிலைக்கு சென்னை திரும்பியது எப்படி? தொற்று நோய் வராமல் தடுத்தது எப்படி? தொற்று நோய் வராமல், வருவதற்கே வாய்ப்பு இல்லாத நிலையை உருவாக்கியது எப்படி? (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு, உலக சுகாதார நிறுவனம், மத்திய நிபுணர் குழு அத்துணை பேர்களுடைய பாராட்டுகளையும் பெற்றது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய அனைத்து அமைச்சர்களும், உயர் அலுவலர்களும் தங்களது கடமையை, உள்ளார்ந்த அன்போடு, கடமையை கடமையாக மட்டுமே செய்தார்கள். மற்றவர்கள் செய்திக்காக, பேஸ்புக், வாட்ஸ் அப் என பத்திரிகை செய்திக்காக, பணியைச் செய்தார்கள். யார் யாரைப் பாராட்டுகிறார்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எதிர்நோக்கவில்லை. தன்னுடைய கடமையை, உள்ளார்ந்த அன்போடு, உயிரைப் பணயம் வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களே கொட்டுகின்ற மழையிலே வெள்ளம் சூழ்ந்த பகுதியிலே ஓடிச் சென்று மக்களைச் சந்தித்து (மேசையைத் தட்டும் ஒலி) ‘நான் இருக்கிறேன்’ என்று தைரியம் கொடுத்து, இந்த மக்களைப் பாதுகாத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசியல் முறையில் இதுபோன்ற இயற்கைச் சீற்றங்களின்போது, உடனடிப் பணிகளில் நாம் சேவையை இணைக்க வேண்டும் என்பதை மழை கற்றுக் கொடுத்தது என்றுதான் நான் சொன்னேன். வேறு யாரையும் நான் குறை சொல்லவே இல்லை. தயவு செய்து மழை வெள்ளத்தை விட்டுவிடுங்கள் நீங்கள். அடுத்து, தவ்ஹித் ஜமாத் என்று சொல்லக்கூடிய இஸ்லாமிய அமைப்பு, இஸ்லாமிய இளைஞர்கள் மிகச் சிறப்பான முறையில் தங்களுடைய உழைப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு மதம் சார்ந்த அல்லது ஆன்மிக தலங்கள், அவை கோயில்களாக இருந்தாலும், இஸ்லாமியர்கள் வழிபடக்கூடிய மசூதியாக இருந்தாலும், கிறிஸ்தவ மக்கள் வழிபடக்கூடிய தேவாலயங்களாக இருந்தாலும், அங்கேயெல்லாம் உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்புக்கு இட வசதி செய்தார்கள். ஆகவே, தமிழகத்தில் மனிதநேயத்தின் ஊற்றுக் கண்ணாக இருக்கக்கூடிய இந்தப் பண்பும், குணமும் வளர்க்கப்பட வேண்டும் என்ற முறையில்தான் நான் என் கருத்தைப் பதிவு செய்கிறேன்.

*பிற்பகல் 1–05*

இரண்டாவது, யாரையும், யாருடைய சேவையையும் நான் குறைத்துப் பார்க்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், எங்கள் இயக்கத்திலே எங்களை நாங்களே பாராட்டிக்கொள்வதும் இல்லை. முடிந்தால், நாங்கள் உங்களைமாதிரி இருக்கக்கூடிய எல்லோரையும் பாராட்டுவோமே தவிர, 'நம்மை நாமே பாராட்டிக் கொள்வோம்' என்ற வகையில் எங்களைப் பாராட்டிக்கொள்வதும் இல்லை. எங்களைப் பாராட்டுவதற்காக நான் இதைச் சொல்லவுமில்லை. அரசியலில் சேவையைக் கலக்க வேண்டிய ஒரு பாடம் என்ற முறையிலேதான் நான் இதைச் சொன்னேன். அதோடு முடித்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புச் சகோதரி அவர்கள், 'எங்களை நாங்கள் பாராட்டிக்கொள்ளவில்லை' என்று சொன்னார்கள். இந்த அவையிலே சற்றுமுன்பு பேசும்போது, "நாங்கள் சென்று, எங்கள் மக்கள் நலக் கூட்டணித் தலைவர்கள் சென்று, அந்தக் குப்பையை அள்ளினோம்; நாங்கள் சென்று எல்லாவற்றையும் செய்தோம்" என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்குப்பிறகு, 'நாங்கள் யாரையும் பாராட்டவில்லை' என்று சொல்கிறார்கள். அவர்களது ஒவ்வொரு கூற்றையும், மனசாட்சியோடு அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காக, இன்றைக்கு 24 மணி நேரமும் ஒவ்வொரு தொண்டையும், பணியையும் செய்து வருகின்றார்கள் என்பதுதான் உண்மை. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அக்கா அவர்கள் சொன்னதுபோல, அங்கே சென்று முண்டாசைக் கட்டிக்கொண்டு, ஒரு குளத்தில் நின்று, காலைக் காண்பித்து போட்டோ எடுத்துக்கொள்வதுபோன்று ஒரு நிலையை, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுக்கவில்லை என்பதுதான் உண்மை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, ஒரேயொரு கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, 100 ஆண்டுகள் பெய்திராத கனமழையின்போது, எத்தனை பேர் மனித நேயத்தோடு பணியாற்றி மக்களைக் காப்பாற்றினார்கள் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். ஓர் அரசினுடைய கடமையாக நாங்கள் செய்ததையும் நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். 'இந்த அரசு பதவியேற்ற தொடக்கத்தின்போது வறட்சி; 'இந்த அரசு பதவியை நிறைவு செய்கின்றபோது வெள்ளம்; இது அரசின் சாதனை இல்லை' என்று அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக இது அரசின் சாதனையல்ல. ஆனால், அதை எதிர்கொண்ட விதம், (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சி வந்தபோது, இதுவரை

வரலாறு காணாத வகையிலே 1,613 கோடி ரூபாயை வறட்சி நிவாரணமாக வழங்கிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, இந்த வெள்ளம்; 100 ஆண்டுகள் கண்டிராத வெள்ளம். 100 ஆண்டுகள் கண்டிராத, வரலாறு காணாத வெள்ளம். தமிழக மக்கள் பிழைப்பார்களா? வெள்ளத்திலே அவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்; கொட்டுகிற மழையில் தலைநகர் சென்னை தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கொட்டுகிற மழையிலும், தலைமைச் செயலகத்திற்கு ஒரு முதலமைச்சர் வந்து, நடவடிக்கை எடுத்தார்கள் என்று சொன்னால், அந்தச் சரித்திரத்தைப் படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மனித நேயத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். எல்லோரையும் நாங்கள் பாராட்டுகிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்; எல்லோரும் பாராட்டுகிறோம்; ஆனால், அரசு சாதனை செய்தது. தமிழ்நாட்டின் இந்தத் தலைநகர் பிழைக்குமா என்ற அளவிற்கு 100 ஆண்டுகள் காணாத கனமழை பெய்தபோதும், இயல்பைவிட 53 சதவிகிதத்திற்கும் அதிகமான மழையை தமிழகம் பெற்றபோதும், வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த மக்களைக் காப்பாற்ற முடியுமா என்கின்றபோது அறிவுசார்ந்த, மதிநுட்பம்சார்ந்த, அனுபவம் வாய்ந்த அணுகுமுறையால், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழகத்தை சகஜ நிலைக்குக் கொண்டு வந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். அதையும் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு மற்றவற்றைச் சொன்னால், நாங்கள் எல்லோரும் அதைக் கேட்பதற்குத் தயாராக இருக்கிறோம். அவை எதுவுமே நடைபெறாததைப்போல, ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் முயல்கிறார். அதனால்தான், என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதைப்பற்றி இந்தச் சபையில் எடுத்துச் சொல்கிற கடமை இங்கே இருக்கக்கூடிய எங்களுடைய மாண்புமிகு அமைச்சர்களுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அவர்கள் குறுக்கிட்டு பதிலளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செய்தியை செய்தியாகத்தான் சொல்ல முடியும். அந்தச் செய்தியைப் பாராட்டாகவோ, புகழாகவோ ஆளுங்கட்சி அமைச்சர்கள் பார்த்தால், அதற்கு நான் பொறுப்பல்ல. ஆகவே, உங்களுடைய பார்வை எப்படி இருக்கிறது என்பதை இந்த சபை புரிந்துகொள்ளும். ஆகவே, அந்த அளவுக்கு அதைச் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என நினைக்கிறேன். மற்றபடி, ஆளும் அ.தி.மு.க. அரசைப் புகழ வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. (குறுக்கீடுகள்) நாங்கள் செய்த வேலையை நாங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) அதைத்தான் நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, எதிர்க்கட்சி என்ற முறையிலே, மக்களுடைய குறைகளைத்தான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புகழ வேண்டும் என்ற அவசியம் எங்களுக்கு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நாட்டிலே இருக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்கள் தினந்தோறும் புகழ்ந்து கொண்டிருக்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு இல்லத்திலேயும் மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மக்கள் புகழ்ந்து கொண்டிருக்கும்போது, உறுப்பினர் அவர்கள் புகழ வேண்டும் என்கிற அவசியம் எங்களுக்கு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

*பிற்பகல் 1–10*

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டு, இடைக்கால நிதிநிலை

அறிக்கையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி சமர்ப்பித்தபோது, அப்போது இருந்த கடன் கிட்டத்தட்ட ரூ.1,01,541 கோடி. அந்த ரூ.1,01,541 கோடி கடன் இருந்ததற்காக, அன்றைக்கு அ.தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபோது, இப்போதிருக்கக்கூடிய நமது மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போது ஓர் அறிக்கையின் மூலமாக கடுமையாக விமர்சனம் செய்தார்கள். அதை மக்களும், நாங்களும் பார்த்தோம். அந்த விமர்சனம் சரிதான். இப்பொழுது 2016–2017–ல் இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த அரசின், உங்களுடைய அரசின், அ.இ.அ.தி.மு.க. அரசின் கடன் 2,47,031 கோடி கடன் ரூபாய். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் பிரச்சினையைப்பற்றி நான் ஏற்கெனவே பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அவர்களும் 'இது சரியானதுதான்' என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் எப்போதுமே இப்படித்தான். இவர் வக்கீல் தொழிலுக்குப் போயிருந்தால், தலைசிறந்த வழக்கறிஞராக ஆகியிருப்பார் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி வாதிடக்கூடிய திறமை அவருக்கு இருக்கிறது. (சிரிப்பு) ஆனால், யார் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று அந்தப் பெருமாளுக்கே தெரியும்; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதனை நான் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்களுக்கு நினைவுபடுத்தி, இந்தக் கடன் பிரச்சினையைப்பற்றி மீண்டும் சில விளக்கங்களை இங்கே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் நிலுவைக் கடன் விகிதம் 2015–2016 ஆம் ஆண்டு தொடங்கி, அடுத்த ஐந்து ஆண்டுக் காலகட்டத்தில் 25 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற 2011–2012 முதல், இதுவரை இந்த வரம்பிற்குள்ளாகவே அரசின் பொதுக் கடன்





இருக்கும் வகையில், மாண்புமிகு அம்மாவினுடைய நல்லரசு அதை உறுதி செய்து, நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை நான் முதலிலேயே தெளிவுபடக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடன் நிலை 2015–2016; கடந்த நான்கு ஆண்டுகளில், அதாவது, 2011–2012 முதல் 2014–2015 வரை நமது மாநில அரசு பெற்ற நிகரக் கடன் 78,617.31 கோடி ரூபாயாகவும், இதே காலகட்டத்தில் மூலதனச் செலவினம் 76,483.85 கோடி ரூபாயாகவும் இருக்கின்றது. இது உண்மை. சாலைகள் அமைத்தல், பாலங்கள், கட்டடங்கள் போன்ற மூலதனச் சொத்துகளை உருவாக்கும் நோக்கத்திற்காகவே இந்தக் கடனை அரசு பயன்படுத்தியுள்ளது என்பதனை நான் உறுதிபடக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2010–2011 ஆம் ஆண்டு இறுதியில், மொத்தக் கடன் நிலுவை, மொத்த மாநில உற்பத்தி மதிப்பில் 19.54 சதவீதமாக இருந்தது. அதாவது தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2010–2011–ல் 25 சதவீதத்திற்குள் இருக்க வேண்டுமென்று அப்போதைய 13–வது நிதிக் குழு நிர்ணயித்த விகிதத்தில், அது 19.54 சதவீதமாக இருந்தது. இதனை 2014–2015 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு 19.10 சதவீதமாகக் குறைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, தி.மு.க. ஆட்சியைக் காட்டிலும் கடனுடைய அளவு, ஐந்தாண்டுக் காலத்தில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு குறைத்திருக்கிறது. நீங்கள் ஒப்பிட்டுச் சொன்னீர்கள் அல்லவா? தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்த கடன் உயர்ந்து, இரண்டு இலட்சம் கோடிக்கும் மேல் போய்விட்டது என்று. (குறுக்கீடு) இதுதான் உண்மை. மேலும், 2014–2015 ஆம் ஆண்டு வரையில், மாநில அரசின் கடன் நிலுவை ரூ.1,79,967 கோடியாக இருந்தது. 2015–2016 ஆம் ஆண்டிற்கு நிகரக் கடன் 30,446.67 கோடி ரூபாய் பெறப்படும் எனவும், இதனால், 2015–2016 இறுதியில் மொத்த நிகரக் கடன் 2,11,483 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில், அதாவது, 15–2–2016 வரை பெற்றுள்ள கடன் அளவின்படி, தமிழக அரசின் தற்போதைய மொத்த நிகரக் கடன் 2,06,875 கோடி ரூபாய் மட்டுமே. 2016–2017 ஆம் ஆண்டிற்குப் பெற உத்தேசித்துள்ள கடன் 35,128.59 கோடி ரூபாயையும் சேர்த்து, 31–3–2017 ஆம் ஆண்டு இறுதியில் கடன் 2,47,031 கோடி ரூபாயாக இருக்கும். இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 19.62 சதவீதமே

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 18

இருக்கும். இது வரையறுக்கப்பட்ட *25* சதவீதம் அளவிற்குள்தான் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவாகக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் *1–15*

நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காகப் பொதுக் கடன் பெறுவது என்பது உலகிலுள்ள அனைத்து அரசுகளும் கையாளும் கருவியாகும். கடன் பெற்று உள்கட்டமைப்பு போன்ற அசையா சொத்துகளை உருவாக்குவதில் முதலீடு செய்வதால், பொருளாதார வளர்ச்சி தூண்டிவிடப்படுகிறது. அத்தகைய பொருளாதார விரிவாக்கம் அதிக வருவாயைப் பெருக்குவதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும், மாநிலங்களுக்கு நிதியாதாரத்தைப் பெருக்குவதற்கும் வழிவகுக்கிறது. எனவே, கடன் நிலுவைத் தொகையானது உயர்ந்துள்ளபோதிலும், வருவாய்ப் பெருக்கத்தின் காரணமாக, தவணை தவறாமல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கடனைத் திருப்பிச் செலுத்த முடிந்துள்ளது என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அரசும், பிற மாநில அரசுகளும் பொதுக் கடன் பெற்றுத்தான் மூலதனச் செலவினங்கள் உள்பட பல்வேறு பிற செலவினங்களை மேற்கொள்கின்றன. உதாரணமாக, மத்திய அரசின் *2015–2016* ஆம் ஆண்டினுடைய வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் *68* இலட்சத்து *94* ஆயிரத்து *691* கோடியாக, அதாவது, நாட்டினுடைய மொத்த உற்பத்தி மதிப்பில் அது *48.8* சதவீதமாக உள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கை, *2015*–ன் நிலவரப்படி, மொத்தக் கடன் நிலுவைக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்கும் உள்ள விகிதாச்சாரம் ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் *25* சதவீதம்-மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் நன்றாக கவனிக்க வேண்டும்-இது குஜராத்தைப் பொறுத்தவரையில் *23.7* சதவீதமாகவும், கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் *22.9* சதவீதமாகவும், கேரளத்தைப் பொறுத்தவரையில் *29.7* சதவீதமாகவும் இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அது *20* சதவீதமாகத்தான் உள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாநில அரசினுடைய மொத்த பொதுக் கடனுக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம் என்பது மத்திய நிதிக் குழுவின் பரிந்துரையில் வரையறுக்கப்பட்ட அளவைக் காட்டிலும் குறைந்த அளவிலேயே உள்ளது. மொத்தக் கடன் மற்றும் மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரத்தைக் குறைந்த அளவில் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2016 பிப்ரவரி 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு அவர்கள் ஒரு இலட்சம் கோடி கடன் வைத்தபோது அதை எதிர்த்தீர்கள். இன்றைக்கு நீங்கள் *2* இலட்சம் கோடி கடன் வைத்தால், விளக்கம் கொடுக்கிறீர்கள். இந்தப் பொருளாதார டெக்னிக்கல் விவகாரங்களை மாண்புமிகு அண்ணன் அவர்கள் அன்றைக்கு எதிர்த்தார்; அதை நானும் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்.

ஏனென்றால், தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. ஆட்சிகளில் இரண்டு ஆட்சியாளர்களுமே கடன் வைக்கிறீர்கள்; காரணம் சொல்கிறீர்கள், ஒருவருக்கொருவர் விமர்சனம் செய்துகொள்கிறீர்கள். நான் அந்தக் காரணங்களுக்குள்ளேகூடப் போகவில்லை. தேவை இருக்கிறபொழுது அரசு கடன் வாங்குகிறது; மக்களுக்கான சில பணிகளைச் செய்கிறது. ஆகவேதான், தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. இரண்டு கட்சிகளுடைய ஆட்சியிலேயும் கடன் என்பது சுமார் *3* இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வளர்ந்திருப்பதால்தான், நாங்கள் ‘மக்கள் நலக் கூட்டணி’ என்ற நிலைக்குப் போயிருக்கிறோம். இந்தக் கருத்தை நாங்கள் மக்கள் மத்தியிலே நிச்சயமாகக் கொண்டு செல்வோம். ஏதோ நாங்கள் அரியணை ஏற வேண்டும் என்பதற்காகவோ அல்லது மாநிலத்தில் உடனே ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகவோ அல்ல இது; தமிழகத்தில் இப்படி ஒரு மாற்றுக் கருத்து, மாற்றம் என்பது கட்டாயமாகத் தேவை. தி.மு.க. ஆட்சியானாலும் சரி, உங்களுடைய ஆட்சியானாலும் சரி; கடனில் இருக்கக்கூடிய ஆட்சியாகவேதான் இருக்கிறது; அப்படித்தான் நாங்கள் பார்க்கிறோம்.

நேற்று 60 வயதான மாற்றுத் திறனாளி திரு. குப்புசாமி அவர்கள் இறந்துவிட்டார். ** அவருடைய குடும்பத்திற்கு நிவாரணமாக ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகள் நான்காவது நாளாகப் போராடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் ** என்று சொல்வதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

காரணம் என்னவென்றால், ** இவர்கள் எல்லாம் சங்கத்தைச் சார்ந்தவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைந்து செல்லும்படி தமிழக காவல் துறை அறிவுறுத்தியிருக்கிறது. அறிவுறுத்தியும் அவர்கள் கலையவில்லை. அதற்குப்பிறகு ஆறு மணி அளவில் காவல் துறையினர் காவலில் வைத்திருந்த அனைவரையும் விடுதலை செய்துவிட்டார்கள். அங்கிருந்து கலைந்து சென்றதற்குப் பிறகு, போகிற வழியில், அந்த நபருக்கு—ஏற்கெனவே அவருக்கு உடல்நலம் குன்றியிருந்த காரணத்தால், இரத்தம் வந்திருக்கிறது. பக்கத்தில் இருந்த காவலர் ஒருவர், அவரை அழைத்துச் சென்று இராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதித்திருக்கிறார். அங்கு சென்றதற்குப்பிறகுதான் அவர் இயற்கை மரணம் எய்தியிருக்கிறார். ** என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ** என்கிற அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 1–20

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதை ஆமோதிக்கிறேன். ** அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபிறகு treatment–ல்தான் அவர் இறந்திருக்கிறார். வேலூரிலிருந்து அவர் போராட்டத்திற்காக சென்னைக்கு வந்தார். (குறுக்கீடு) அது ஒன்றும் பிரச்சினை இல்லை. அடுத்து, தேர்தலைச் சந்திக்கக்கூடிய இந்த நேரத்தில், அளித்த எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றிவிட்டதாக நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையிலேயே சொன்னார்கள்; நீங்களும் மகிழ்ச்சியாக இருந்தீர்கள்; எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், அதைக் காட்டிக்கொள்வதற்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஏனென்றால், இன்னும் இரண்டு வாக்குறுதிகள் மீதம் இருக்கின்றன. அது என்னவென்றால், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், புதிய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்தமாட்டோம், கொண்டு வரமாட்டோம்; ஊதியக் குழுவில் உள்ள முரண்பாடுகளைச் சரிசெய்வோம்; தொகுப்பூதியம், மதிப்பூதியம் போன்றவற்றையெல்லாம் இரத்து செய்வோம்' என்றெல்லாம் வாக்குறுதிகள் கொடுத்தீர்கள். அந்த வாக்குறுதிகள் அடங்கிய உங்கள் தேர்தல் அறிக்கையை என் கையில் வைத்திருக்கிறேன். ஏனென்றால், தேர்தலின்போது நாங்கள் உங்கள் கூட்டணிக் கட்சி இல்லையா? அதனால் வைத்திருக்கிறோம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்றைக்குச் சத்துணவுத் துறை, அங்கன்வாடி மையங்களிலுள்ள சமையலர்கள், உதவியாளர்கள், வருவாய்த் துறை, வணிக வரித் துறையைச் சார்ந்த அலுவலர்கள் என கிட்டத்தட்ட 6, 7 இலட்சம் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியாதது அல்ல; தமிழக அரசினுடைய வருவாய் ரூபாய் 42 ஆயிரம் கோடி என்று இருந்ததை, ரூபாய் 62 ஆயிரம் கோடியாக உயர்த்திக்கொடுத்த அந்த ஊழியர்களின் பணியை நாம் குறைத்துப் பார்க்கக்கூடாது. அதேபோன்று, பசுமை வீடுகள் திட்டத்தில் இரண்டேகால் இலட்சம் வீடுகளை குறித்த காலத்தில் ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்கள் கட்டிக்கொடுத்தார்கள். நீங்களே சாதனை என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த ஊழியர்களின் ஒத்துழைப்போடுதான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அந்தச் சாதனைகள் செய்யப்பட்டுள்ளன. சகலத் தரப்பிலும், 53 துறைகளுடைய ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுடைய பணிக் காலத்தில், இந்த ஐந்தாண்டுக் காலத்தில் நீங்கள் செய்வீர்கள், செய்வீர்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை.

புதிய பென்ஷன் திட்டம் மிகவும் மோசமானது; 2004 ஆம் ஆண்டுக்குப்பிறகு பணியில் சேர்ந்தவர்களிடமிருந்து 8,000 கோடி ரூபாய்க்குமேல் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை அமல்படுத்தியபின், காவல் துறையில் சேர்ந்தவர்களால்கூட கடன் வாங்க முடியவில்லை; வீடு கட்ட முடியவில்லை; ஒரு அவசர நிலையில்கூட எதுவுமே செய்ய முடியவில்லை. ஓய்வுக்குப் பின் இந்தத் திட்டத்தில் இருக்கும் ஊழியர்களின் நிலை என்னவென்று தெரியவில்லை. ஆகவே, அரசு ஊழியர்களுக்கான புதிய பென்ஷன் திட்டத்தை இரத்து செய்தல் என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ. பேசும்போதுகூட கவனித்தேன். அவர்கள் ஆட்சியில்தான் இந்த புதிய பென்ஷன் திட்டத்திற்கான வரைவே போடப்பட்டது; இப்போது இங்கே வந்து 'குவா, குவா' என்று கத்துகிறார்கள். அதேமாதிரிதான் பா.ஜ.க.; அவர்கள் அந்தத் திட்டத்தை அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களும் பழைய பென்ஷன் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று போராட்டத்தை ஆதரிக்கிறார்கள். அடுத்து, தி.மு.க.; அப்போது காங்கிரஸை தங்கள் கூட்டணிக்குள் வைத்துக்கொண்டு புதிய பென்ஷன் திட்டத்திற்கு அன்றைக்கு ஆதரவாக இருந்துவிட்டு, இப்போது அவர்களும் வேலை நிறுத்தத்தை ஆதரிக்கிறார்கள். இடதுசாரிகளான நாங்கள் அப்படி ஆதரிக்கவில்லை. தற்போது 37 எம்.பி.–க்கள் உங்கள் கட்சியில் இருக்கிறார்கள்; 'நாங்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவோம்' என்று சொன்னீர்கள். இப்போது என்னதான் நினைக்கிறீர்கள் என்று புரியவில்லையே? ஊழியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சரி, இன்றைக்காவது ஏதாவது அறிவிப்பு வரும் என்று பார்த்தால், அதுவும் வரவில்லை. தேர்தல் நடத்த வேண்டிய பணி அவர்களுடையது; அவர்களிடம்தான் நாம் நிற்க வேண்டியிருக்கிறது. எனவே, தேர்தல் நடக்குமா? பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு நடக்கின்ற நேரம், ஆசிரியர்கள்; இந்த ஐந்து வருடங்களில் ஞாயிற்றுக்கிழமைதோறும் கல்லறை அருகே உட்கார்ந்து உண்ணாவிரதம் இருப்பார்கள். "என்னய்யா? இப்படி இருக்கிறீர்களே? ஞாயிற்றுக்கிழமை ஏன் போராட்டம்?" என்று கேட்டால் 'பிள்ளைகளின் கல்வி கெடக்கூடாது' என்பார்கள். அந்தளவிற்கு ஆசிரியர்கள் இந்த அரசாங்கத்தோடு எப்படி இருந்தார்கள் என்பது உங்களுக்கும் தெரியும். இன்றைக்கு எல்லோரும் இணைந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அரசு உடனடியாக அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், புதிய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்தக்கூடாது, தொகுப்பூதிய, மதிப்பூதிய முறையை இரத்து செய்ய வேண்டும். நீங்கள் பழைய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டோம் என்கிறீர்கள். எனவே, வேறு புதிய வாக்குறுதிக்குப் பஞ்சமே இருக்கக்கூடாது என்று நானே சொல்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள்,' 'ஊருக்குத்தான் உபதேசம்; அது எங்களுக்கு இல்லை' என்கிற தொணியிலேயே பேசிக்கெண்டிருப்பார்கள். அதாவது, இவர்களுக்கு எவ்வளவுதான் விளக்கம் சொன்னாலும், அந்தக் கடன் அளவைப்பற்றி மீண்டும், மீண்டும் நான் விளக்கம் சொன்னாலும் அதை ஒப்புக்கொள்ள மனமில்லாமல் பேசிக்கொண்டிருக்கிறார். இப்போது எதிர்க்கட்சி என்ற நிலையில் இருக்கின்றார்கள். அது அவர்களுடைய நிலை. மேற்கு வங்கத்தில் இவர்களது இடதுசாரி கட்சியின் ஆட்சி நடைபெற்றபோது, அந்த மாநிலத்தினுடைய கடன் அளவை நான் இங்கே சபையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேற்கு வங்கத்தில் இவர்களது கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சியில், மாநில உற்பத்தி மதிப்பில் கடன் அளவுஎன்பது 2001–ல் 38.4%, 25 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டும். ஆனால், 38.4%. 2002–ல் 42.4%, 2003–ல் 46.8%, 2004–ல் 47.5%, 2005–ல் 46.7%, 2006–ல் 49.7%, 2007–ல் 47.4%, 2008–ல் 45.6%, 2009–ல் 44%, 2010–ல் 44%, இப்படித்தான் கம்யூனிஸ்டு ஆட்சியில் மேற்கு வங்கத்தில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் அளவு என்பது இருந்திருக்கிறது. இந்த அளவிற்கு பெரிய அளவில் கடன் அளவை வைத்துக்கொண்டு இவர்கள் ஆட்சியை நடத்தியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், எப்போது ஆட்சியில் இருந்தாலும், இந்தக் கடன்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 18

அளவை நிதிக் குழுவின் பரிந்துரை, 25 சதவிகிதம் என்றால், அந்த 25 சதவிகிதத்திற்குள், கட்டுக்குள் வைத்திருந்து, இன்னும் சொல்லப்போனால், 20 சதவிகிதத்திற்குள்ளாகவே வைத்திருந்து கடன் வரம்பையும் கட்டுப்படுத்தி ஆட்சியை நடத்திவருகிறார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

பிற்பகல் 1–25

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் மாற்றுக் கருத்து சொல்லவில்லை. நாங்கள் எல்லாம், குடும்பத்தையே கடன் வாங்கித்தான் நடத்திக்கொண்டிருக்கிறோம்; அதனால் பிரச்சினை ஒன்றும் இல்லை. கடந்த காலத்தில் வந்த அந்த விமர்சனங்கள், இப்போது வந்திருக்கக்கூடிய இரண்டு கட்சிகளினுடைய விமர்சனங்களைப் பார்க்கும்போது, எனக்குத் தோன்றிய கருத்து என்கிற முறையில்தான் அதை நான் சொன்னேன்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், சத்துணவு ஊழியர்கள், இதர ஊழியர்களுடைய போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான முயற்சியை எடுக்க வேண்டும். +2 தேர்வு வருகின்றது; இப்போது தேர்தலும் வருகின்றது; இதுபோன்ற பணிகள் தங்குதடையின்றி நடைபெற இந்தப் பணியாளர்களின், ஊழியர்களின் கோரிக்கைகளை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏற்கெனவே ஆசிரியர் தேர்வுகளில் TET–I, TET–II–ல் 14,000 பேர் தேர்வு பெற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு 7 ஆண்டுகளுக்குள் வேலை கிடைக்கும் என்று சான்றிதழ் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்போது மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. 14 ஆயிரம் பேர் தேர்வாகி இன்னும் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, இப்போது நீங்கள் அவர்களுக்கு வேலை கொடுப்பீர்களா என்று நான் கேட்கவில்லை. நீங்கள் வேலை கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி; 14 ஆயிரம் பேர் தேர்வாகியும் பணியிடம் ஒதுக்கீடு செய்யப்படாமல் வேலையில்லாமல் இருந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.



2016 பிப்ரவரி 18] [செல்வி கே. பாலபாரதி]

அதேபோன்று, தமிழகத்தில் அரசுத் துறைகளில் 3 இலட்சம் காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. அதுவும் நிரப்பப்படவில்லை. மொத்தத்தில் தமிழ்நாட்டில் இவ்வளவு இளைஞர்கள், இளைய சக்திகள் இருந்தும், வெளி மாநிலம், வெளிநாடு என்று போய்க்கொண்டிருக்கின்றார்கள். ஆற்றல்மிக்க திறமையான இளம் பெண்கள், இளைஞர்கள் இருக்கின்றார்கள். ஆகவே, தமிழகம் அடுத்தக் கட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டுமென்றால், இந்தச் சமூகம் நல்ல ஆரோக்கியமாக நடக்க வேண்டுமென்றால், அரசியலுக்கு அப்பாற்பட்டு இந்த இளைஞர்களுடைய வேலைவாய்ப்பை நாம் முக்கியப்படுத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு 89 இலட்சம் பேர் வேலைக்காக பதிவு செய்து காத்துக்கொண்டிருக்கின்றார்கள். ‘தென் மாவட்டங்களில் நாங்கள் பல தொழிற்பூங்காக்கள்; தொழில்களைத் துவக்குகின்றோம்’ என்று தி.மு.க. ஆட்சியில் அன்றைக்குச் சொன்னார்கள். ஒரு அடிக்கல்லையும் காணவில்லை. நீங்களும் சொல்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நல்ல முயற்சியை எடுத்திருக்கின்றது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பல்வேறு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக மாத்திரமல்ல, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்ல அரசின் மூலமாக சிறப்பு முகாம்கள் சிறப்பாக நடத்தப்பட்டதன் விளைவாக, பல்வேறு துறைகளில் 4,82,335 பேருக்கு வேலைவாய்ப்பைத் தந்திருக்கிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** நேற்று அத்திக்கடவு–அவினாசி திட்டத்தைப்பற்றி விளக்கம் சொல்லிவிட்டீர்கள்; இப்பொழுது பதிலளிக்க பேப்பர் எதையும் கையில் எடுத்துவிடாதீர்கள். நேற்றே நீங்கள் விளக்கம் சொல்லிவிட்டீர்கள்; அதை நாங்களும்

புரிந்துகொண்டுவிட்டோம். அங்கே போராடக்கூடியவர்கள், தொடர்ந்து உட்கார்ந்துகொண்டிருக்கின்றார்கள். உங்கள் வாக்குறுதியை அரசிதழில் வெளியிட்டால், போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவோம் என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, உங்களுடைய வாக்குறுதியை, நிதிநிலை அறிக்கையில் நீங்கள் கூறியிருப்பதை உடனடியாக அரசிதழில் பிரசுரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது 50 வருடங்களாகப் பேசப்பட்டு வரும் திட்டம். உங்களுக்கு நன்றாகத் தெரியும். அத்திக்கடவு–அவினாசி திட்டம் பற்றி காமராஜர் காலத்திலிருந்து பேசிக்கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு முழுமையாக திராவிட இயக்கக் கட்சிகளின் ஆட்சிதான் நடந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே ஆட்சியில் இருந்தவர்களும் சரி; நீங்களும் சரி; இவ்வளவு கால அவகாசம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இவ்வளவு காலம் தாமதப்படுத்தி வந்த நிலையில், இப்பொழுது நாங்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று அவசர, அவசரமாக நீங்கள் சொல்கிறீர்கள். மக்கள் போராடுகிறார்கள். ஆகவே, இதுதான் நிலைமை என்பதனால் இதுபோன்ற குடிநீர்த் திட்டங்களாக இருந்தாலும், நீர்ப்பாசனத் திட்டங்களாக இருந்தாலும் மக்கள் நலக் கூட்டணி சார்பாக ஒரு தெளிவான செயல் திட்டத்தை நாங்கள் முன்வைத்திருக்கிறோம். அதை நாங்கள் அமல்படுத்தலாம் என்று கருதுகிறோம்.

முறைசாரா தொழில்கள் நிறைய இருக்கின்றன. அரசுத் துறைகளிலும் ஓட்டுநர், attender, watchman போன்ற நிறைய பணிகளுக்கு outsourcing மூலமாக தொகுப்பூதியம், மதிப்பூதியம் வழங்கப்படுகின்றது. அதேபோல், தனியார் வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவ நிறுவனங்களில் எல்லாம் இதுபோன்ற பணிகளுக்கு ரூ.6,000/–, ரூ.7,000/– ஊதியம் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு–அவினாசி திட்டத்தைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். நேற்று முன்தினம்தான் இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத்



திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களிடமிருந்து கூடிய விரைவில் ஒரு நல்ல அறிவிப்பு வரும் என்பதை மட்டும் நான் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** நன்றி. இந்த முறைசாரா அமைப்புகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் உடல் உழைப்பைச் செலுத்துபவர்கள். இவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை. இந்த நிலைமை எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றது. ஊதியத்திற்கான ஒரு புதிய சட்டம் என்பது தேவை. ஒரு நிறுவனத்தின்கீழ் வேலை பார்த்தால் 15 ஆயிரம் ரூபாய் ஊதியம் அல்லது குறிப்பிட்ட நிறுவனம் எவ்வளவு ரூபாய் இலாபம் பெறுகிறது, அவர்கள் எவ்வளவு ரூபாய் வணிக வரி செலுத்துகிறார்கள் அல்லது தொழில் வரி செலுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து அவர்களது ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும். பத்திரிகைத் துறை, ஊடகத் துறை உட்பட இன்றைக்கு எல்லாத் துறைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் அவர்களுடைய வருமானம் போன்றவற்றையெல்லாம் கணக்கீடு செய்து எவ்வளவு குறைந்தபட்ச ஊதியம் என்பதை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளின்கீழ் கொண்டுவர வேண்டியிருக்கிறது. இப்பொழுது நான் அதைச் சொல்லிப் பலன் இல்லை. நாங்கள் அதை நிச்சயமாகச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக விலைவாசி உயர்வு. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், விளக்கம் அளிக்க எழுந்திருக்க வேண்டாம்; ஒன்றே ஒன்று. ரேஷன் கடைகளில் அரிசி இலவசமாகக் கொடுப்பதெல்லாம் உண்மைதான். துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு கொடுக்கப்படுவது உண்மைதான். ஆனால், வெளியிலே 200 ரூபாய்க்கு துவரம் பருப்பு விற்கப்படுகிறது. மிளகாய் வற்றல் 155 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு பொருள்கூட விலை குறையவில்லை. மாநில அரசு என்னதான் ரேஷன் கடை, அது, இதுவென்று சொன்னாலும், விலைவாசி உயர்வில் லகானைப்

[செல்வி கே. பாலபாரதி] [2016 பிப்ரவரி 18

பிடிக்க முடியவில்லை. அது தாவிக் குதித்துப் போய் கொண்டேயிருக்கிறது. இது ஏழையெளிய, நடுத்தர மக்களைக் கடுமையாக பாதித்திருக்கிறது என்ற அடிப்படையில் அதைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே நடைபெற்ற விவாதங்களின்போதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். அதற்குத் தகுந்த பதிலும் தரப்பட்டிருக்கிறது. விலைவாசியைப்பற்றிச் சொல்லும்போது, பருப்பு விலை உயர்ந்திருக்கிறது என்று சொல்கிறார். நமக்கு பருப்பு எங்கிருந்தெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் மழை மிகுதியாக அல்லது மழை குறைவாக இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களினால் பருப்பு விலை உயர்ந்து வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். இவர்கள் கட்சி ஆண்ட, ஆளுகிற மாநிலங்களிலெல்லாம் இல்லாத அளவில், உணவுக்காக கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 25 ஆயிரம் கோடி ரூபாயை மானியமாகத் தந்த தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மானியமாக 25 ஆயிரம் கோடி ரூபாயை வழங்கி, சாதாரண மக்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய தொகுப்பிலிருந்து விலை கொடுத்து அரிசி வாங்குகிறார்கள். 3 ரூபாய், 5 ரூபாய் 65 பைசா, 8 ரூபாய் 30 பைசா என்று A.A.Y. B.P.L., A.P.L.,என பல்வேறு திட்டங்களின்கீழ் மூன்று வகையான விலைகளைக் கொடுத்தோம். Additional allotment–க்காக 20 ரூபாய்க்கு மேலாகக் கொடுத்தோம். மத்திய தொகுப்பிலிருந்து விலை கொடுத்து அரிசியை வாங்கி, மக்களுக்கு விலையில்லாமல் அரிசியை வழங்குகிற ஒரே தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களைவிட விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி, விலைவாசியைக் கட்டுக்குள்ளே வைத்திருக்கிற தலைவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.



2016 பிப்ரவரி 18] [திரு. இரா. காமராஜ்]

விலைவாசி உயர்வு என்று சொல்கிற அதேநேரத்தில், ஒரு கோடியே 91 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் விலையில்லாமல் அரிசியைப் பெறுகிறார்கள்; அவர்களுக்கு மானிய விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் போன்றவை வழங்கப்படுகின்றன. அதேபோல, மண்ணெண்ணெய், சர்க்கரை போன்றவை மானிய விலையிலே வழங்கப்படுகின்றன. இவையெல்லாம் வழங்கப்படுவதன்மூலம், விலைவாசி தமிழகத்திலே கட்டுக்குள்ளே வைக்கப்பட்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருந்தும், அறியாததுபோல அவைக்குத் தவறான தகவலைத் தருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலைக் கட்டுப்பாட்டு நிதியம் என்கிற ஒரு நிதியத்தை ஏற்படுத்தி, அதற்காக 100 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதன்மூலம் எந்தப் பொருளின் விலையேறுகிறதோ, அந்தப் பொருளின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு, அந்தப் பொருள் விளைகின்ற இடத்திலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து, அதனை மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின்மூலமும், அமுதம் அங்காடிகள்மூலமும் கொடுத்து, விலையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரிசி விலை உயர்ந்தபோது, 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்கின்ற மிகப் பெரிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். அப்போது அந்தத் திட்டத்தினை மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் மிகப் பெரிய அளவிலே பாராட்டினார்கள். அன்றைக்கு அதனைப் பாராட்டிவிட்டு, இன்றைக்கு இந்த அவையிலே அதற்கு மாற்றுக் கருத்தினைச் சொல்கிறார்கள். ரூ.20/–க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்தபொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொது மக்கள், சாதாரண மக்கள் அட்சதை தூவி மாண்புமிகு அம்மா அவர்களை வரவேற்பார்கள் என்கிற கருத்தினை இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–35

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தமிழகத்திலுள்ள சாதாரண மக்களைப்

பாதுகாக்கிற வகையிலே இருக்கின்றன. இந்தியத் திருநாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், அதே நேரத்தில் உலக அளவிலிருந்து வருகிறவர்கள் எல்லாம் பார்த்து பாராட்டுகின்ற வகையில் தமிழகத்தில் அம்மா உணவகங்களை ஏற்படுத்தி சாதாரண மக்களுடைய பசியைப் போக்கிக்கொண்டிருக்கிற தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப்போல பல்வேறு விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின்மூலம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை விலைவாசி உயர்விலிருந்து காப்பாற்றி, விலைவாசி உயர்வு என்பது இல்லாமல், அதைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே விலைவாசி கட்டுக்கடங்காமல் போய்விட்டது; விலைவாசியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கட்டுப்படுத்தத் தவறிவிட்டது என்ற ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பெண். அவர் ஏற்கெனவே இந்த அவையிலே இருந்திருக்கிறார். சென்ற ஆட்சியில் விலைவாசி ஏற்றம் ஏற்பட்டபோது அந்தக் காலக்கட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதையும், அன்றைக்கு ஆட்சியிலிருந்த மைனாரிட்டி முதலமைச்சர் கருணாநிதி என்ன செய்து கொண்டிருந்தார் என்பதையும் இன்றைக்கு தமிழகத்தில் பெண் குலத்தின் காவல் தெய்வமாக இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எப்படிப்பட்ட ஆட்சியைத் தந்துகொண்டிருக்கிறார் என்பதையும் உளப்பூர்வமாக மனதைத் தொட்டு அவர் சொல்ல வேண்டும். இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் விலைவாசி ஏற்றம் என்பது அடியோடு தவிர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமை வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதுதான் இன்றைக்கு நாட்டு மக்களுடைய பாராட்டுகளாக இருக்கின்றன.





மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பருப்பு விலை உயர்வு குறித்து இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் போதுமான அளவிற்குப் பருப்பு வகைகள் விளையவில்லை. மக்களுடைய நுகர்வுக்கு ஏற்ற மாதிரி பருப்பு விளைச்சல் இல்லை. இந்தியாவில் மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா போன்ற பல்வேறு மாநிலங்களில் பருப்பு வகைகள் விளைகின்றன. அங்கே எத்தகைய தட்பவெப்ப நிலை ஏற்படுகிறதோ, அதனுடைய தாக்கத்தின் அடிப்படையில் இந்திய அளவில் பயறு வகைகளுடைய விலை ஏற்றம் ஏற்படுவது சகஜம். இன்றைக்கு இந்திய அரசே, இதனைப் புரிந்துகொண்டு வெளிநாடுகளிலிருந்து துவரம் பருப்பை இறக்குமதி செய்திருக்கிறது. அதேமாதிரி, பருப்பு வகைகளை இறக்குமதி செய்து வழங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத் தொகுப்பிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஏறத்தாழ 2,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பை வாங்கி, அதைப் பதப்படுத்தி, மக்களுக்குச் சிறப்பான முறையில் விநியோகம் செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே பதுக்கல் என்ற நிலையே இல்லாமல், அதை அறவே அகற்றியிருக்கிறார்கள். வியாபாரிகள் அவற்றைப் பதுக்கி வைத்து இதுபோன்ற காலச் சூழ்நிலையிலே மக்களிடத்திலே விற்கின்றபோது அவற்றின் விலையை அதிகப்படுத்திவிடுவார்கள். அந்த நிலை இன்றைக்குத் தடுக்கப்பட்டிருக்கிறது. கள்ள மார்க்கெட் வியாபாரம் தடுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; மிளகாய் வற்றல் விலை ஏறியிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மிளகாய் வற்றல் விலை ஏறியபோது மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.100 கோடி மானியம் கொடுத்து, கூட்டுறவு மொத்த நுகர்வோர் பண்டகச் சாலைகள் மற்றும் பிரைமரி கூட்டுறவு பண்டகச் சாலைகளின் மூலமாக ஏறத்தாழ 394 கடைகளின்மூலம் விநியோகம் செய்து, விலைவாசி ஏற்றம் இல்லாத அளவிற்குக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே வெங்காய விலை ஏற்றத்தின்போது பத்திரிகைகள் எல்லாம் எழுதின. வெங்காயத்தை உரித்தால்தான் கண்ணீர் வரும். ஆனால், முன்னாள் மைனாரிட்டி முதலமைச்சர் கருணாநிதியினுடைய ஆட்சியிலே வெங்காய விலையைக் கேட்டாலே கண்ணீர் வந்தது என்று நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களே பேசினார்கள். ஆனால், இன்றைக்கு அதுமாதிரி இல்லாத ஒரு சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் ஒவ்வொரு பொருளுக்குமான விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. பசுமைப் பண்ணை நுகர்வோர் கடைகளைப்பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இப்பொழுது தனியார், மருந்துகளை அதிக விலைக்கு விற்கிறார்கள் என்பதை அறிந்து, விலையைக் கட்டுப்படுத்த, நியாயமான விலையில், *15* சதவிகிதம் அளவிற்குக் குறைந்த விலையிலே அம்மா மருந்தகங்கள் மூலம் மருந்துகள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அதேமாதிரி அம்மா சிமென்ட், ரூ.*10*–க்கு அம்மா குடிநீர், இப்படிப்பட்ட திட்டங்களைக் கொடுத்து, தமிழக மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்கியிருப்பவர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். புதிய கூட்டணிக்காக இங்கே விளம்பரம் தேடுவதைக் காட்டிலும், தோழமையின் மூலமாக மக்களுக்கு நாங்கள் என்னென்ன செய்தோம் என்பதையும் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும். இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னது மாதிரி நன்றியுடையவர்களாக நாம் எப்போதுமே இருப்போம். தமிழர்கள் நன்றி பாராட்டக் கூடியவர்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *1–40*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பருப்புகளின் விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு, அதன் சாகுபடியைப் பெருக்குவதற்கு *47* கோடி ரூபாய் மானியம் கொடுத்ததன் காரணமாக, கடந்த ஆட்சியில் *6.3* இலட்சம் ஹெக்டேராக இருந்த சாகுபடி பரப்பு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், *2014–2015*–ல், *8.8* இலட்சம்



ஹெக்டேராக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) விதை மானியம், DAP உர மானியம், உழவு மானியம், வரப்பிலே துவரைப் பயறைப் போடுவதற்கு ஹெக்டேருக்கு *100* ரூபாய் மானியம், இப்படி பல மானியங்கள்மூலம் *47* கோடி ரூபாயை வழங்கி பயறு வகைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, இந்தியாவில் ஒரு ஹெக்டேர் வெங்காயம் பயிரிடுவதற்கு *18* ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கிற ஒரே அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பருப்பு விலையைக் கட்டுப்படுத்துவதற்கு, பருப்பு சாதாரண மக்களையும் சென்றடைவதற்கு, ஒரு ரேஷன் கார்டுக்கு *30* ரூபாய்க்கு ஒரு கிலோ துவரம் பருப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது. அதேபோல, *25* ரூபாய்க்கு ஒரு லிட்டர் பாமாயில் எண்ணெய் வழங்கப்படுகிறது. இதற்காக மத்திய அரசு மானியம் வழங்கிக்கொண்டிருந்தது. ஆனால், *30–6–2012*–வுடன் மத்திய அரசு வழங்கிய மானியத்தையும் நிறுத்திவிட்டது. அந்த நிதிச் சுமையையும் தமிழக அரசே ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்களே வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களை விலைவாசி ஏற்றத்திலிருந்து, விலைவாசி உயர்விலிருந்து பாதுகாப்பதற்காக, அந்த நிதிச் சுமையையும் தமிழக அரசே ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களே வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேச ஆரம்பித்து *40* நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய சிரமம் எல்லாம் எங்களுக்குப் புரிகிறது. உங்களுக்கு என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதும் எங்களுக்குப் புரிகிறது. எங்களுக்காவது ஒரு சிக்கல். உங்களுக்கு திரும்பிய பக்கமெல்லாம் சிக்கல்களாகத்தான் இருக்கின்றன. சர்க்கரைக்கு லெவி மானியம் கிடைக்கவில்லை, அரிசிக்கு மானியத்தை நிறுத்திவிட்டார்கள், மண்ணெண்ணெய்யை நீங்கள் கூடுதலாக வாங்க வேண்டும். இந்தச் சிக்கல்களையெல்லாம் நான் உணர்வுபூர்வமாகப் புரிந்துகொண்டிருக்கிறேன். ஆகையால்தான், இந்த அளவோடு இதை நிறுத்திக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். தி.மு.க. ஆட்சியை விட்டுவிட்டதாக நினைக்க வேண்டாம். அவர்களுடைய ஆட்சியிலும் துவரம் பருப்பினுடைய விலை கூடியது, உங்களுடைய ஆட்சியிலும் துவரம் பருப்பினுடைய விலை கூடியது. ஆகவேதான், எங்களுடைய மக்கள் நலக் கூட்டணி உருவாகியிருக்கிறது. உங்கள் இரண்டு கூட்டணியிலும் விலைவாசி உயர்ந்திருக்கிறது. அதனால்தான் எங்கள் கூட்டணியே உருவானது. (குறுக்கீடு) நான் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சிறிய விளக்கம். 'சென்ற ஆட்சியிலும் விலைவாசி கூடியது; இந்த ஆட்சியிலும் விலைவாசி கூடியிருக்கிறது' என்று பொத்தாம்பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். கடந்த ஆட்சியில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இந்த ஆட்சியிலே விலைவாசியைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இந்த இரண்டிற்கும் என்ன வித்தியாசம் என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நடவடிக்கை இன்றைக்கு நாட்டு மக்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறது. கடந்த ஆட்சியிலே, திரு. கருணாநிதியினுடைய ஆட்சியிலே விலைவாசி உயர்ந்தது, அது ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தது என்பதை தோழமைக் கட்சியாக இருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.



**செல்வி கே. பாலபாரதி:** கடந்த தி.மு.க. ஆட்சியிலே ஒரு கிலோ துவரம் பருப்பு 60 ரூபாய். இப்போது ஏன் 200 ரூபாய்க்கு விற்கிறது? நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? இரண்டும் ஒன்றுதான். (குறுக்கீடு) ஆகவே, நான் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது, நான் சொன்னது இவையெல்லாம் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான். அதாவது, பருப்பு விலை உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் அதன் விளைச்சல் குறைந்திருக்கிறது. விலைவாசியைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை தைரியமாக எங்களால் சொல்ல முடிகிறது. இன்றைக்கு விலைவாசி ஏற்றம் என்பது தமிழகத்திலே இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழக மக்கள் விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்படவில்லை என்பதை எங்களால் தைரியமாகச் சொல்ல முடியும்.

*பிற்பகல் 1–45*

இதற்கு முன்பு சட்டமன்றத்திலே நீங்கள் பேசியபோது, சொன்ன வார்த்தைகளை யோசித்துப் பார்க்க வேண்டும். குமுதம் ரிப்போர்டர் பத்திரிகையில் நீங்கள் ஒரு பேட்டி கொடுத்திருந்தீர்கள். அதில் பாதியை நான் கடந்த கூட்டத் தொடரிலே சொன்னேன். அதில் கடைசியாக தி.மு.க. ஆட்சியைப்பற்றி நீங்கள் சொன்னதால், அதை நான் சொல்ல விரும்புகிறேன். அண்ணா தி.மு.க. ஆட்சியையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியையும், கருணாநிதி ஆட்சியையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்பிடுகின்றார்கள். அதற்காக நான் இதைச் சொல்ல வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் அந்தப்

பத்திரிகையில் எழுதியிருந்த வார்த்தைகள் "கடந்த ஆட்சியில் விலைகள் உயர்ந்து கொண்டிருக்கின்றன. தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளைக் கொண்டாடவே மக்கள் சிரமப்படுகிறார்கள் என்று சட்டமன்றத்தில் பேசியபோது, அப்போதைய முதலமைச்சர், 'பாண்டி பஜாரை சென்று பார்த்தால் தெரியும்; பொருள் வாங்க அலைமோதும் மக்கள் கூட்டத்தை' என்றார்". அதாவது, திரு. கருணாநிதி சொன்னதாக இவர் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். 'இதே விலை உயர்வைக் குறித்த விவாதங்களின்போதெல்லாம், விலை எப்போது உயராமல் இருந்தது என்ற கேள்விகளும் ஆளும் தரப்பிலிருந்து அவ்வப்போது கேட்கப்பட்டுக் கொண்டேயிருந்தன' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. 'எப்போது விலைவாசி ஏறாமல் இருந்தது; இப்பொழுது ஏறுகிறது' என்றெல்லாம் நாங்கள் சொல்லவில்லை.

எங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு விலைவாசியைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். மக்கள் சிரமப்படாமல் இருக்கிறார்கள். மக்களிடத்திலே விலைவாசித் தாக்கம் இல்லையென்பதைத்தான் நாங்கள் ஆணித்தரமாக இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** *ரூ.200–ஐ கட்டுப்படுத்தப்பட்ட விலை உயர்வு என்கிறீர்களா? (குறுக்கீடு) ரூ.200/- கட்டுப்படுத்தப்பட்ட விலையா என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியா மட்டுமல்ல; இது உலகளாவிய அளவிலே இருக்கக்கூடிய விலை. பருப்பு விலையைப் பொறுத்தவரையில், உலகளாவிய அளவிலே இருக்கக்கூடிய விலை. (குறுக்கீடு) அதைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் மத்திய அரசு மானியத்தை நிறுத்தியதற்குப் பின்பும், அந்த மானியத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசே ஏற்றுக்கொண்டு, மக்களுக்கு துவரம் பருப்பையும், உளுத்தம் பருப்பையும் வழங்கிக் கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கடுத்தபடியாக மின்சாரம். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ.200, ரூ.200 என்று சொல்லிக் கொண்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ரேஷன் கடைகளில் ரூ.30–க்கு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு கிடைக்கிறது என்று ஏன் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உரையை முடியுங்கள். ஒரே நிமிடத்தில் முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ரேஷன் கடைகளில் 2 மாதத்திற்கு ஒரு முறைதான் கிடைக்கிறது. அதுவும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ரேஷன் கார்டுகளுக்கு மட்டும்தான் கிடைக்கிறது. நான் கேட்பதெல்லாம். . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது போனால்கூட கூட்டுறவுப் பண்டகச் சாலைகளில் ஒரு கிலோ பருப்பை ரூ.110–க்கு வாங்கிக்கொள்ளலாம். வேண்டுமென்றால், சென்று வாங்கிக் கொள்ளச் சொல்லுங்கள். ரூ.200/-க்குக் கிடையாது. இப்போது எல்லா இடங்களிலும் உள்ள கூட்டுறவு பண்டகச் சாலைகளில் ரூ.110/–க்குத் தரமான பருப்புகள் கிடைக்கின்றன. மக்கள் வாங்குகிறார்கள். நீங்கள் ஏன் அதற்குள் செல்கிறீர்கள்?

குறிப்பாக, Five Star ஓட்டலில் ஒரு காபியின் விலை ரூ.50, ரூ.100 என்று இருக்கிறது. ஆனால், சாதாரண கடைகளில் ஒரு காபியின் விலை ரூ.20 என்று இருக்கிறது. நீங்கள் ஏன் Five Star ஓட்டலில் உள்ள விலையையே சொல்கிறீர்கள். எங்களுடைய

[திரு. செல்லூர் கா. ராஜு] [2016 பிப்ரவரி 18

கூட்டுறவுப் பண்டகச் சாலைக்கு வாருங்கள், ஒரு கிலோ பருப்பை ரூ.110/–க்கு வாங்கிக்கொள்ளுங்கள். வாருங்கள். உங்களுக்கு எவ்வளவு வேண்டுமென்று சொல்லுங்கள்? நாங்களே வாங்கித் தருகிறோம். இல்லையென்றால், நானேகூட உங்களுடைய அறைக்கே கொண்டுவந்து கொடுக்கிறேன். (சிரிப்பு) அப்படிக்கூட விற்போம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, துவரம் பருப்பு இப்படிப்பட்ட விலைகளில் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அடுத்து, மின்சாரம் சம்பந்தமானது. 26 ஆயிரம் மெகா வாட்; மின்மிகை மாநிலம் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. நானும் அந்தக் கணக்கையெல்லாம் பார்த்தேன். அதில் 8 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் காற்றாலைமூலம் கிடைக்கும் என்றார். அது நிரந்தரம் கிடையாது. பின்னர், 3 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் தனியார் நிறுவனத்திடமிருந்து அரசு வாங்குகிறது. இதையெல்லாம் கூட்டிப் பார்த்தால்கூட, 14 ஆயிரம் மெகா வாட் மின்சாரத்தைத் தாண்ட முடியாது. ஆகவே, மின்சாரம் மாநிலத்திலே மிகையாகப் போய்விட்டது என்று சொல்வது பொருத்தமற்றது. நீங்கள் தேர்தலுக்காகச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் மின்சார நிலைமையைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு ஒரு நல்ல வாக்குறுதியைக் கொடுத்தார்கள். 'தமிழகத்திலே நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப்பின்பு, என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் தமிழகம் எப்படி ஒளிமயமான தமிழகமாக இருந்ததோ, அந்த நிலையை மீண்டும் கொண்டுவருவேன்' என்று வாக்குறுதியை அளித்தார்கள். அந்த வாக்குறுதியை இன்றைக்கு முழுமையாக நிறைவேற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொன்னதைப்போல, மின்சாரத் துறையிலே



2016 பிப்ரவரி 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

மட்டுமல்ல; மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி சாதனை படைத்திருக்கிறார்கள். அனைத்து சாதனைகளும் பாராட்டத்தக்கவை என்று சொன்னாலும், அதிலே, மின்சாரத் துறையிலே நடைபெற்றிருக்கக்கூடிய மிகச் சிறந்த சாதனைகளை, இன்றைக்கு நாட்டு மக்கள் அத்தனை பேரும், நல்லவர்கள் அத்தனை பேரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நல்லவர்கள் அத்தனை பேரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், 'பாராட்டாதவர்கள் அத்தனை பேரும் நல்ல உள்ளங்கள் அல்ல' என்று நான் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, வாக்குறுதி கொடுப்பது எல்லோர்க்கும் எளிது. வள்ளுவர் கூறுகிறார்.

பிற்பகல் 1–50

'சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியஆம்
சொல்லிய வண்ணம் செயல்.'

வானத்தை வில்லாக வளைக்கிறேன், மணலை கயிறாகத் திரிக்கிறேன் என்றெல்லாம் சொல்வார்கள். அதேபோல, '2 ஏக்கர் நிலம் எல்லாம் தருகிறேன்' என்று சொல்லியிருப்பார்கள். ஆனால், 2 சென்ட் இடம்கூடத் தந்திருக்கமாட்டார்கள். இப்படி வாக்குறுதியெல்லாம் நிறைவேற்றாதவர்கள் மத்தியில், சொன்ன அனைத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் சாதித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவற்றைப் பாராட்ட மனம் வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு, நல்லது செய்திருக்கும்போது, அதை எடுத்துக்கொள்ளுங்கள். அதேபோல,

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

என்று வள்ளுவர் சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நல்லதைச் சொல்வதற்கு மனமில்லை. நல்ல கனி இருக்கும்போது, கசக்கிற காயை ஏன் வம்பாய்ப் போய் சாப்பிடுகிறீர்கள். நல்ல விஷயங்களைப் பாராட்ட மனம் வேண்டும். அந்த நல்ல மனம் விரைவில் உங்களுக்கு வரும் என்று நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. நத்தம் ஆர் விசுவநாதன்] [2016 பிப்ரவரி 18

அதேபோல தமிழகத்திலே, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கும் மேலாக, அதைவிட அதிகமாகவே, மின்சாரத் துறையில் நிறுவுதிறனை உருவாக்கியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் விரிவாகச் சொன்னால் நேரமாகும்; சுருக்கமாகவே சொல்கிறேன். இன்றைக்குத் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மொத்தமாக எல்லா வகை மின்சார உற்பத்திக்கும் சேர்த்து 26,806.5 மெகா வாட் அளவிற்கு மின்சாரம் பெறக்கூடிய நிறுவுதிறன் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதிலே மரபு சார்ந்த மின்சாரம் என்ற வகையில் 12,928 மெகா வாட் அளவுக்கு உற்பத்தி செய்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய சொந்த முயற்சியில் நிறுவுதிறன் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுதவிர, 15 ஆண்டுகளுக்குத் தேவையான மின்சாரம் கிடைப்பதற்கு, உறுதி செய்யப்பட்ட மின்சாரம் கிடைப்பதற்கு, கொள்முதல் எல்லாவற்றையும் சேர்த்து 18,002.5 மெகா வாட் அளவிற்கு மின்சாரம் நிரந்தரமாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று காற்றாலை மின்சாரம் நிரந்தரமல்ல. சூரிய ஒளி மின்சாரமும் நிரந்தரமல்ல; ஏனெனில், எல்லா நேரங்களிலும் அவை கிடைப்பதில்லை. தாவரக் கழிவிலிருந்து மின்சாரம் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு; இணை மின் நிலைய உற்பத்தியும் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. ஆக, மின்சாரம் பகுதி நேரமாகக் கிடைப்பதாக இருந்தாலும் சரி, எல்லா நேரங்களிலும் கிடைப்பதாக இருந்தாலும் சரி, எல்லா வகையான மின் உற்பத்தித் திறனையும் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கை. அந்தவகையிலே, 24 மணி நேரமும் கிடைக்கின்ற நிரந்தர மின்சாரத்தையும் பயன்படுத்துகின்றோம். அதற்கு வேண்டிய கட்டமைப்பு வசதிகளையும், நிறுவுதிறனையும் உருவாக்கியிருக்கிறோம். குறிப்பிட்ட நேரங்களிலே மட்டும் கிடைக்கக்கூடிய மின்சாரத்திற்கான நிறுவுதிறனையும் உருவாக்கியிருக்கிறோம். ஆக, எல்லா வகைகளையும் புறக்கணிக்காமல் அனைத்து வகை மின்சார உற்பத்தியும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.



2016 பிப்ரவரி 18] [திரு. நத்தம் ஆர் விசுவநாதன்]

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது மட்டுமல்ல; எப்பொழுதுமே மின் உற்பத்தியில் மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியபடி தமிழகம் மின் மிகை மாநிலம் என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே எந்தத் தவறும் கிடையாது. மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதியை 100 சதவிகிதம் நிறைவேற்றியிருக்கிறார்கள். தமிழகத்தில் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், தேவைக்கும் அதிகமாக உற்பத்தி செய்து, மின் மிகை மாநிலம் என்ற நிலையை மீண்டும் உறுதி செய்திருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, இங்கே கவனியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து ஒரு மணி, நான்கு நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூத்த அமைச்சர் பெருமக்களில் முக்கியமானவர். எனது மரியாதைக்குரிய அமைச்சர் அவர். எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்தவர். ஆகவே, எனக்கு சில மாற்றுக் கருத்துகள் இருந்தாலும், யாருடைய மனதையும் புண்படுத்தக்கூடாது என்பதனால், நான் அவருடைய. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாற்றுக் கருத்துகளை நீங்கள் சொல்ல வேண்டும். அப்படி நீங்கள் சொன்னால்தான், மாற்றுக் கருத்துகளுக்கு எங்களுடைய பதிலைத் தெரிவித்து, உங்களை convince செய்து, உண்மையைப் புரிய வைக்க முடியும். ஆகவே, நீங்கள் குறைகள் இருந்தால் சொல்லுங்கள், நாங்கள் அதற்குரிய பதிலைச் சொல்வதற்கு எந்த நேரமும் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1–55

**செல்வி கே. பாலபாரதி:** எங்களை யார் கேலி செய்தாலும் நாங்கள் பொருட்படுத்தமாட்டோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் வெளியிலே போகும்போது, 'அமைச்சர் அவர்கள் இப்படி பேசிவிட்டார்களே' என்று மக்கள் எங்களிடம் கேட்பார்கள். அப்படிக் கேட்கும்பொழுது, எங்கள் மனது வருத்தப்படும். ஆகவே, நீங்கள் சொல்லக்கூடிய பதிலை நீங்கள் சொல்லுங்கள். அதனால் எங்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அப்படி வருத்தப்படுகிற அளவுக்கு என்ன பேசியிருக்கிறோம் என்று சொல்லுங்கள்? என்ன சொல்லியிருக்கிறேன் என்று சொல்லுங்கள்? நான் அதற்குப் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கை அமல்படுத்துவதில்லை என்பது தெரிந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் பேசத் தொடங்கி ஒரு மணி ஐந்து நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு)

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை, அதற்குள்ளே இனி போக முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** புது சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள். இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும்.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை, அந்தப் பிரச்சினைக்குள்ளே இனி போக முடியாது. மதுவிலக்குக் கொள்கை என்பது அமலாக்கப்படவில்லை. ஆகவே, தமிழகத்திலுள்ள குடிமக்கள்— "குடிமக்கள்" சாதாரண ஏழை எளிய மக்கள் விரக்திக்குப் போய்விட்டார்கள். "குடிகார மக்கள்" மதுவிலக்கை அமல்படுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கைக்குப் போய்விட்டார்கள். இருந்தாலும், தயவு செய்து பெண்களின் உணர்வுகளை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். விதவைப் பெண்கள், இளம் பெண்கள் பாதிப்பு, கலாச்சாரம் மற்றும் சட்டம்–ஒழுங்கு போன்ற விஷயங்களெல்லாம் இதிலே உள்ளடங்கியிருக்கின்றன. அரசுக்கு வருமானமும் அதிலே உள்ளடங்கியிருக்கிறது. ஆகவே, இதில் ஒரு நல்ல முடிவை நீங்கள் எடுக்க வேண்டும். நிச்சயமாக மக்கள் நலக் கூட்டணி ஆட்சிக்கு வருகிறபொழுது, உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, சரியான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும். எங்களுடைய தலைவர்கள் மதுவிலக்கைக் கொண்டு வருவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் நம்பிக்கையோடு இருக்கிறோம். நிச்சயமாக தமிழகத்தை ஒரு புதிய கலாச்சாரத்தை நோக்கி நாங்கள் கொண்டு வருவோம். அந்த முறையிலே, மதுவிலக்கை அமல்படுத்துவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அத்துடன், நன்றி சொல்லி முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** அடுத்தபடியாக, கடந்த காலத்திலே பெண்கள் ஆணையத்திற்கு சட்டரீதியான ஓர் அந்தஸ்து இருந்தது. இன்றைக்கு, **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சரியாகப் பேசினால் நாங்கள் சரியாகக் கேட்டுக் கொண்டிருப்போம். தவறான தகவலை சொல்லிக் கொண்டிருந்தால், நாங்கள் சரியான பதிலைச் சொல்லித்தான் ஆக வேண்டும். மகளிர் ஆணையம் என்பது மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மரியாதைக்குரிய திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் அவர்கள் அந்த ஆணையத்தின் தலைவராக இருக்கிறார்கள். நாள்தோறும் நூறு பேரையாவது தகுந்த முறையில் விசாரித்து வருகிறார்கள். அவரைத் தேடி வரக்கூடிய பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளையெல்லாம் விசாரித்து, காவல் துறை மூலமாக உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய நிவாரணத்தை பெற்றுத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையிலும் கிட்டத்தட்ட 4,200–க்கும் மேற்பட்ட வழக்குகளை விசாரித்து, தீர்வு கண்டிருக்கிறார்கள். மேலும், பிற பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று விசாரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால்கூட, அதையும் விசாரித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ** என்பதைத் தயவு செய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மகளிர் ஆணையம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேற்கண்ட கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர், நன்றி மட்டும் சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** நன்றி. அந்த வார்த்தையை எடுப்பதானால், நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். நானும் அனுமதி கொடுக்கிறேன். அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். மிக்க நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தேடித் தேடி பேசிக் கொண்டிருக்காதீர்கள், உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**செல்வி கே. பாலபாரதி:** 2004 ஆம் ஆண்டில் காமராஜர் மன்றத்திற்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திற்கு அப்போது நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட இப்போது கூடுதல் விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் சம்பந்தப்பட்டது என்கிற முறையிலே, ஏதாவது ஒரு சிறப்பு நிகழ்வாக அந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று காமராஜர் தேசிய காங்கிரஸ் கட்சியிலிருந்து பெரியவர் ஒருவர் மிகுந்த நம்பிக்கையோடு என்னிடம் மனுவை கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுவை நான் உங்களிடம் கொடுத்து விடுகிறேன். அதையும் நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில், 2011, பிப்ரவரி மாதம் அரசு விருப்புரிமையை இரத்து செய்துவிட்டார்கள். இப்பொழுது அந்த அடிப்படையில் யாருக்கும் வீட்டு வசதி வாரிய இடத்தைக் கொடுக்க முடியாது, அதற்கு சட்டத்தில் இடமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். *(குறுக்கீடு)* செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* சரி, உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகின்றேன். மக்கள் நலக் கூட்டணியா அல்லது சிக்கல் நலக் கூட்டணியா என்று நேற்றைக்கு இந்த மன்றத்திலே ஒரு பெரிய விவாதம் நடந்தது. நாங்கள் மக்கள் நலக் கூட்டணிதான். மற்றவர்கள்தான் சிக்கல் நலக் கூட்டணியாக உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மக்கள் நலக் கூட்டணியின் கொள்கை மாற்றுக் கொள்கை; எங்களுடைய முதலமைச்சர் என்பவர் மாற்றுக் கொள்கை உடையவராகத்தான் இருப்பார். எங்களது அரசினுடைய கொள்கையும் மாற்றுக் கொள்கையாகத்தான் இருக்கும். மக்கள்தான் எங்கள் அரசாங்கத்தினுடைய இதயமாக இருப்பார்கள். அவர்களுக்கான சேவையை எங்களது இரு விழிகளாகக் கொண்டு செயல்படுவோம். நன்றி, வணக்கம். இது எனது நிறைவுரை.

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேச அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பல அம்சங்களை வெளியிட்டாலும், இதிலே பேசுவதற்கு என்ன சிக்கல் என்றால், மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் ஒரு முடிவோடு இருக்கிறார்கள் என்பதுபோல் தெரிகிறது. எதையாவது பேசத் தொடங்கினால், மாண்புமிகு அமைச்சர்கள் எல்லோரும் எழுந்து கோரசாக நிறைய விளக்கங்களைச் சொல்லி, நேரத்தை இழுத்துவிடுகிறீர்கள். அதனால்தான் இப்போது எதைப் பேசுவது, எதை விடுவது என்ற ஒரு குழப்பமான நிலையில் நான் நின்று கொண்டிருக்கிறேன். இந்த நிலைதான் நீடிக்கிறது.

வெள்ளச் சேதத்தைப் பற்றிப் பேசினால், அதற்கு ஒரு விளக்கம் கொடுக்கிறீர்கள்; இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பேசினால், அதற்கு ஒரு விளக்கத்தைக் கொடுக்கிறீர்கள். அதற்கு நீண்ட நேரம் போகிறது. ஆனாலும், உண்மைகளை யாரும் உள்ளங்கையால் மறைத்துவிட முடியாது. உண்மைகளை எப்போதுமே வெளிக் கொண்டு வருபவர்கள்தான் இடதுசாரிகள். அதில் இன்றைக்கு நாட்டில் ஒரு முதன்மையான இடத்தை நாங்கள் வகிக்கிறோம். அந்த அடிப்படையில்தான், எனக்கு முன்னர் பேசிய செல்வி கே. பாலபாரதி அவர்கள்கூட பல பிரச்சினைகளை இங்கே தெளிவுபடுத்தினார்கள்.

அந்த அடிப்படையிலே பார்த்தீர்கள் என்றால் இடைக்கால நிதிநிலை அறிக்கையில், வரக்கூடிய ஆண்டில் 2 இலட்சத்து 47 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே மிகப் பெரிய தொகை. நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில், உங்களுடைய பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையிலே 3 சதவிகிதத்திற்குள் அது இருக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஆனால், 2.92 விழுக்காடு அளவிற்கு அது சென்றிருக்கிறது என்று சொன்னால், கிட்டத்தட்ட 3 விழுக்காடு அளவிற்கு வந்திருக்கிறது. அப்போது 3 விழுக்காடு பற்றாக்குறை வந்திருக்கிறது என்று சொன்னால், எதிர்காலத்தில் இந்த நிலை நீடித்தால், (குறுக்கீடு) அதிக நிதிப் பற்றாக்குறைதான். நீங்கள் 3 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால், 2.94 அளவிற்கு



வந்திருக்கிறது என்று சொன்னலே, அது கிட்டத்தட்ட 3 சதவிகிதத்திற்கு வரும் என்றுதான் அர்த்தம். (குறுக்கீடு) இப்போது 3 விழுக்காட்டிற்குள்தான் இருக்கிறது. அது அடுத்த ஆண்டு 3 விழுக்காட்டைத் தாண்டிவிடும். இப்படி இருக்க, இருக்க, பற்றாக்குறையின் விழுக்காடு நீடித்துக்கொண்டே இருக்கிறது. ஏற்கெனவே அது 2.24 விழுக்காடாக இருந்தது; பின்னர் அது 2.92 என்று வந்திருக்கிறது. அந்தக் கணிப்பு இப்போது 2.94 விழுக்காடாக மாறப் போகிறது. அப்போது 3 விழுக்காட்டைத் தாண்டும்போது, எதிர்காலத்தில் தமிழ்நாடு கடன் வாங்குவதற்கே இயலாத ஒரு சூழல் உருவாகக்கூடிய ஒரு நிலை நீடிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் கடன் அளவையும், நிதிப் பற்றாக்குறையையும் ஒன்றோடொன்று போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறார். அதாவது, 14–வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, கடன் அளவை 25 சதவிகித அளவிற்குள் கட்டுப்படுத்த வேண்டும்; நிதிப் பற்றாக்குறையை 3 சதவிகிதத்திற்குள் கட்டுப்படுத்த வேண்டும். இப்படித்தான் 14–வது நிதிக் குழுவில் எல்லா மாநிலங்களுக்கும் பொதுவான ஒரு வரையறையை வகுத்து வைத்துள்ளார்கள். அதற்குள் இருந்தால், ஆரோக்கியமான ஒரு நிதி நிலைமையில், அந்த மாநில அரசு கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்று கொள்கையை வகுத்துத் தந்திருக்கிறது. வகுத்துத் தந்த அந்தக் கொள்கையின்படி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெளிவுபடத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போல ஒவ்வொரு வருடமும் நாம் இந்தப் பற்றாக்குறைக்காக செலுத்த வேண்டிய வட்டி கூடிக்கொண்டே போகிறது. ரூ.17 ஆயிரம் கோடியானது, ரூ.21 ஆயிரம் கோடியாக

இப்போது மாறியிருக்கிறது. இன்னும் வரப் போகின்ற ஆண்டுகளில் இது கூடிக்கொண்டே போகும்போது, அதுவே ஒரு மிகப் பெரிய சுமையாக தமிழக அரசுக்கு மாறக்கூடிய நிலை ஏற்படும். எனவே, கடனை அல்லது வட்டியைக் கட்டுவதற்கு ஒரு வழிவகை என்பது இதுவரையிலும் எந்த நிதிநிலை அறிக்கையிலும் திட்டவட்டமாகச் சொல்லப்படவில்லை. 'உள்கட்டமைப்புக்காகத்தான் நாங்கள் கடன் வாங்கி செலவழிக்கிறோம்; மூலதனமாக மாற்றுகிறோம்' என்று சொல்கிறீர்கள். ஆனால், அந்த உள்கட்டமைப்பிற்கான வரி இல்லாத வருவாய் என்பது, எதிர்பார்த்த அளவிலே வரவில்லை என்பது உங்களுடைய அறிக்கையின்மூலம் தெரிகிறது. ஏற்கெனவே கடந்த ஆண்டு *8,300* கோடி ரூபாய் என்று சொல்கிறீர்கள், இந்த ஆண்டும் அது கிட்டத்தட்ட அதையொட்டித்தான் இருக்கிறது. ஏற்கெனவே தொழிற்பூங்கா போன்ற உள்கட்டமைப்பிற்காகச் செலவிடப்பட்டிருக்கின்ற நிலையில், அவற்றின்மூலம் எந்தவிதமான வருமானமும் இல்லாத காரணத்தால், இன்றைக்கு இப்படிப்பட்ட நிலை நீடித்துக் கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு மின் திட்டங்கள்; தமிழகம் இன்றைக்கு மின்மிகை மாநிலம் என்று மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அதில் மின் உற்பத்தி என்பதைவிட, வெளியிலே கூடுதலான விலைக்கு வாங்கி, அதை ஈடுகட்டுவதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய மிகப் பெரிய பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் *2–05*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நுனிப்புல் மேய்வதைப் போன்று பேசுவதை தயவு செய்து நிறுத்த வேண்டும்; முழுமையான விவரங்களைத் தெரிந்துகொள்ளாமல், தவறான தகவலை, தவறான புள்ளிவிவரங்களை இங்கே பதிவு செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் *206* மெகா வாட் அளவிற்குத்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. அதற்கான விவரங்கள் எங்களிடம் உள்ளன;



அதுகுறித்து பல முறை இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த ஐந்தாண்டுக் கால ஆட்சிக் காலத்தில் மட்டும் *4,455.5* மெகா வாட் அளவிற்கு புதிய மின் நிறுவுதிறன் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களும், தனது சொந்த மின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்ற அதேநேரத்தில், தனியாரிடமிருந்து மின் கொள்முதல் செய்கின்ற பணியையும் செய்து வருகின்றன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் *206* மெகா வாட் மட்டுமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இந்நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு *4,455.5* மெகா வாட் அளவிற்கு புதியதாக மின் உற்பத்தித் திறனை உருவாக்கினார்கள். அதோடுமட்டுமல்லாமல், மரபுசார்ந்த எரிசக்தி, மரபுசாரா எரிசக்தி என அனைத்தையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த மின் நிறுவுதிறன் *26,806.5* மெகா வாட் அளவிற்கு உருவாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து நான் ஏற்கெனவே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

தமிழகத்தின் மின் உற்பத்தியையும், தேவையையும் ஒப்பிடுகையில், மின் மிகை மாநிலம் என்ற நிலை இன்றைக்கு உருவாகியிருக்கின்றது. மின் மிகை மாநிலம் என்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், நமது சொந்த உற்பத்தித் திறனை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, பற்றாக்குறைக்கு மட்டும்தான், Merit order despatch என்று சொல்வார்கள், தேவையான அளவிற்கு, எந்த அளவிற்கு குறைந்த விலையில் மின்சாரம் கொள்முதல் செய்ய முடியுமோ, அந்த விலையில் ஆரம்பித்து, தேவை நிறைவடையும் வரையில் உள்ள விலை வரை மட்டும்தான் மின்சாரம் கொள்முதல் செய்வார்கள். அதற்கு மேல் உள்ள விலையிலே மின்சாரம் கொள்முதல் செய்வதில்லை. ஒரு பாதுகாப்பு அம்சத்திற்காக ஒப்பந்தங்கள் போட்டு, எல்லாம் உறுதி செய்யப்படுகின்றன. ஆக, நமது மின் உற்பத்தித் திறனை முழுமையாகப் பயன்படுத்திவிட்டு, அதற்கடுத்தபடியாக உள்ள பற்றாக்குறைக்கு குறைந்த விலையில் யார் மின்சாரம் கொடுக்கின்றாரோ, அவரிடமிருந்து முதலில் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது. அதிலும், தேவை நிறைவடையவில்லையென்றால், அடுத்தகட்டமாக உள்ள விலையில் மின்சாரம் கொள்முதல் செய்வார்கள்; அப்பொழுதும்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2016 பிப்ரவரி 18

தேவை நிறைவடையவில்லையென்றால், அதற்கடுத்தகட்டமாக உள்ள விலையில் மின்சாரம் கொள்முதல் செய்வார்கள். இவ்வாறு படிப்படியாக சென்று மின்சாரம் கொள்முதல் செய்வார்கள். எந்த இடத்தில் நமது தேவை நிறைவடைகின்றதோ, அந்த இடத்தில் உள்ள விலையோடு மின்சாரம் கொள்முதல் செய்வது நின்றுவிடும். இவையெல்லாம் மத்திய அரசு அனுமதித்திருக்கின்ற நடைமுறைகள்; தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கொடுத்திருக்கின்ற வழிமுறைகள். ஆகவே, மின்சாரக் கொள்முதலை மத்திய அரசின் சட்டப்படியும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படியும்தான் செய்ய முடியும். பொறுப்புணர்ந்த உறுப்பினர்களெல்லாம், ஏதோ பத்திரிகை செய்திகளெல்லாம் படித்துவிட்டு, இவ்வாறு பேசக் கூடாது; அதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது.

குறைந்த விலையில் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கு வாய்ப்பு இருக்கும்போது, அதிக விலையில் மின்சாரம் கொள்முதல் செய்வது சட்டப்படியே குற்றமாகும். அவ்வாறு செய்யவே முடியாது. இப்போது தேவைக்கும் அதிகமாக மின்சாரம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இந்நேரத்தில் உச்சபட்ச விலையில் மின்சாரம் கொள்முதல் செய்யமாட்டார்கள். ஆக, எல்லாவற்றிற்கும் ஒரு நடைமுறை உண்டு; ஒரு வழிமுறை உண்டு; எள்ளளவும்கூட அதில் யாரும் தவறு செய்ய முடியாது; தவறு செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருபோதும் விடவும் மாட்டார்கள்; சட்டமும் வழி கொடுக்காது. ஆகவே, சட்டத்தையும், பிரச்சினையையும் புரிந்துகொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது என்று அபாண்டமாக சில பத்திரிகைகளும், ஊடகங்களும் செய்திகள் வெளியிடுவதை ஆதாரமாகக் கொண்டு பேசக் கூடாது. எல்லா பத்திரிகைகளையும் சொல்லவில்லை; எல்லா ஊடகங்களையும் சொல்லவில்லை; அரசுமீது பழி சுமத்த வேண்டும் என்று நினைக்கின்ற சில ஊடகங்கள், வேண்டுமென்றே வெளியிடுகின்ற செய்திகளையெல்லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு இங்கே பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். உண்மை நிலை அதுவல்ல. தேவை முழுவதையும் பூர்த்தி செய்துவிட்டு, பற்றாக்குறைக்குக் குறைந்த விலையில் கிடைக்கும் மின்சாரத்தைத்தான் கொள்முதல் செய்ய முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2016 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை குறித்து மேலும் சில விளக்கங்களை நான் இங்கே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். நிதிப் பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டும் என்பது 14–வது நிதிக் குழுவின் பரிந்துரை ஆகும். மாநில அரசு தனது திறமையான நிதி மேலாண்மை நடவடிக்கைகளைத் தீவிரமாக தொடர்ந்து கடைப்பிடித்து வருவதால், நம்முடைய நிதிப் பற்றாக்குறை கட்டுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது; அதாவது, 3 சதவிகிதத்திற்குள்ளாகவே வைக்கப்பட்டிருக்கிறது. 2015–2016 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளின்படி, நிதிப் பற்றாக்குறை ரூ.32,360 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2016–2017 ஆம் ஆண்டின் இடைக்கால நிதிநிலை அறிக்கையின்படி, நிதிப் பற்றாக்குறை 36,740 கோடி ரூபாயாகக் கணக்கிடப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறைக்குத் தேவையான நிதியை வெளிச்சந்தைக் கடன்கள் மூலமாகவும், பன்னாட்டு நிதி நிறுவனங்கள், நபார்டு போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும், தேசிய சிறு சேமிப்பு நிதிக் கடன் மூலமாகவும் மாநில அரசு கடனாகப் பெறுகிறது. மூலதனச் செலவுகளும் ஒவ்வோராண்டும் உயர்ந்து கொண்டே வருகின்றன.

பிற்பகல் 2–10

குறிப்பாக, 2012–2013 ஆம் ஆண்டில் 18,279.26 கோடி ரூபாயாக இருந்த மூலதனச் செலவு, 2013–2014 ஆம் ஆண்டில் 18,795.25 கோடி ரூபாயாகவும், 2014–2015 ஆம் ஆண்டில் 20,771 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. 2015–2016 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் மூலதனச் செலவு 22,878 கோடி ரூபாயாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 2016–2017 ஆம் ஆண்டில் இது 27,585 கோடி ரூபாயாக இருக்கும். 2010–2011 ஆம் ஆண்டில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில், நிதிப் பற்றாக்குறை வீதம் 3.21 சதவிகிதமாக இருந்தது. 2010–2011 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, 3.21 சதவிகிதம் இருந்ததை நான் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆனால், மத்திய நிதிக் குழு மற்றும் தமிழ்நாடு அரசு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம், 2003 ஆகியவற்றின் வரையறைக்குள்ளாகவே, மொத்த

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 18

உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை வீதம், கடந்த 4 ஆண்டுகளாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனால்தான், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை, 2014–2015 ஆம் ஆண்டில் 2.88 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், 2015–2016 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை ரூபாய் 32,365 கோடியாக இருந்தபோது, 2.94 சதவிகிதமாக இருந்தது. மீண்டும் 2016–2017 ஆம் ஆண்டில் இடைக்கால நிதிநிலை அறிக்கையில், அதன் அளவு 36,740 கோடி ரூபாயாகக் கூடினாலும், அதாவது நிதிப் பற்றாக்குறைக் கூடினாலும், அதன் சதவிகிதம் 2.92 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. ஆக, நிதிப் பற்றாக்குறை அதிகமாகக் கூடும்போது, சதவிகிதம் கூடுவதாக நீங்கள் போடும் கணக்கு தவறான கணக்கு என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம் நாட்டின் நிதிப் பற்றாக்குறைக் கணக்கினை 2015–2016–வுடன் 2016–2017–ஐ ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கடந்த ஆண்டைவிட நிதிப் பற்றாக்குறையின் அளவு கூடினாலும், சதவிகித அளவில் அது 3 சதவிகிதத்திற்குள்ளாகவே குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மின்சாரத் துறையைக் குறித்துச் சொல்லும்போது, கூடுதல் விலைக்கு வாங்குகிறார்கள் என்ற அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. மின்சாரத்தை விலைக்கு வாங்குகிறார்கள்; உற்பத்தி செய்யவில்லை. இன்னொருவரிடமிருந்து விலைக்கு வாங்குகிறார்கள். அதனால் ஏற்படக்கூடிய (குறுக்கீடு) இல்லை, சொல்லி முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். அது மாநில அரசின் உற்பத்தியின் இலக்காக, மாநில அரசின் வருமானமாக இருக்காது. எனவே, அதன் காரணமாக நமது மாநிலத்திற்கு நிதிப் பிரச்சினை ஏற்படும் என்றுதான் நான் சொன்னேன். பொதுவாக இதனை நான் ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், மத்தியில் இருக்கக்கூடிய அரசு, 1990 ஆம் ஆண்டிலிருந்து எடுத்திருக்கிற பொருளாதாரக் கொள்கையென்பது எவ்வளவு மோசமாக இந்திய நாட்டையும், மாநில அரசுகளையும் பாதித்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு உதாரணம்தான் இது. நமது மாநிலப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதற்கு மூல காரணமே அங்கிருந்துதான் வருகிறது. இந்த அரசா, அந்த அரசா என்பதெல்லாம் இல்லை. குறிப்பாகப் பார்த்தீர்களானால், முன்னேறிய மாநிலங்களுக்கான நிதியை தொடர்ந்து வெட்டும் ஒரு கொள்கையை மத்திய பாரதிய ஜனதா அரசு எடுத்து வருகிறது என்பதை தற்போதைய உங்களுடைய நிதிநிலை அறிக்கையின் மூலமாக அல்லது கவர்னர் அவர்களது உரையின் மூலமாக அறிந்துகொள்ளலாம்.



2016 பிப்ரவரி 18] [திரு. சு. குணசேகரன்]

அதைப்போல், இன்றைக்கு பல திட்டங்கள், நமது தமிழ்நாட்டிலிருக்கும் நதிகளை இணைக்கும் திட்டமாக இருந்தாலும் சரி; அத்திக்கடவு–அவினாசி திட்டமாக இருந்தாலும் சரி; எந்தத் திட்டமாக இருந்தாலும், நிதிப் பற்றாக்குறையின் காரணமாக மத்திய அரசு நமது மாநிலத்திற்குக் கூடுதலான நிதியினை கொடுக்காததன் விளைவாக, அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. நீங்களும் தொடர்ந்து அந்தத் திட்டங்களை வலியுறுத்திக்கொண்டு வருகிறீர்கள். உதாரணத்திற்கு, டீசல், பெட்ரோல் விலை குறைந்தாலும், கலால் வரியை மத்திய அரசு ஏற்றியிருக்கிறது. ஆனால், நாம் ஏற்ற முடியவில்லை. அதனால் இங்கிருந்து வரி போகிறது. அதேபோல், வரி விதிக்கின்ற முறைகளிலும் இதுபோன்ற நிலைமை இருக்கிறது, VAT வரி நமக்குக் குறைவு; ஆனால், சேவை வரி என்று 14 சதவிகிதத்தை எடுத்துக்கொள்கிறார்கள். தற்போது 'தூய்மை இந்தியா'–விற்கு 0.5 சதவிகிதம் என வரி போட்டு, 14½ சதவிகிதத்தை மத்திய அரசு எடுத்துக்கொள்கிறது. ஆகவே, தற்போது மாநிலத்தில் இருக்கக்கூடிய பல்வேறுவிதமான முன்னேற்றங்கள், தொழில்கள் எதுவாக இருந்தாலும், அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தில் அதிகமான அளவு மத்திய அரசு எடுத்துக்கொண்டு, நமது மாநிலத்திற்கு உரிய வருமானத்தினை, உரிய பங்கை அளிப்பதில் இன்றைக்கு ஒரு மோசமான நிதிக் கொள்கையைக் கையாள்கிறது. இன்றைக்கு கார்ப்பரேட் நிறுவனங்களுடைய, உலக நிதி மூலதனத்தின் பொருளாதாரக் கோட்பாட்டின் காரணமாக, மோசமான விளைவுகள் மாநில அரசுகளுக்கு

[திரு. சு. குணசேகரன்] [2016 பிப்ரவரி 18

உருவாகிக்கொண்டிருக்கிறது. மாநில சுயாட்சி என்பதையெல்லாம் மறந்து, மாநிலத்திலிருக்கக்கூடிய நிதி ஆதார உரிமைகளைக்கூட இழக்கக்கூடிய நிலையில் இன்றைக்கு மாநில அரசு நின்றுகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மத்திய பாரதிய ஜனதா அரசாங்கத்தினுடைய மோசமான பொருளாதாரக் கோட்பாடு பின்பற்றப்படுகிறது.

இரயில்வே பட்ஜெட் வருகின்ற 25 ஆம் தேதி தாக்கல் செய்யப்படவிருக்கிறது. இந்த பட்ஜெட்டில்கூட தொடர்ந்து தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுவருகிறது. இதேபோல்தான் எல்லா நிலைகளிலும் புறக்கணிக்கப்படுகிறது. அதையும் தாண்டி, இன்றைக்கு மத்திய அரசு, ஜனநாயகத்திற்கு, கருத்து சுதந்திரத்திற்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய செயல்களையெல்லாம் செய்துகொண்டிருக்கிறது.

*பிற்பகல் 2—15*

குறிப்பாகப் பார்த்தீர்களானால், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்; அது வரலாற்றுச் சிறப்புமிக்கதொரு பல்கலைக்கழகம். அந்தப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் எங்களுடைய அமைப்பைச் சார்ந்த கன்னையா குமார் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர்கள் மரண தண்டனை ஒழிப்பு என்பதைப் பற்றிய ஒரு நிகழ்ச்சியில், சில கருத்துகளை முன்வைத்து சொல்கிறார்கள். அந்தக் கருத்துகளைக்கூட இன்றைக்கு ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு மிகப் பெரிய தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்பதற்காக, மத்திய அரசு இந்த மாநில அரசினுடைய உணர்வுகளைக்கூட மதிக்காமல், மத்தியப் பாதுகாப்புப் படையின்மூலம் பாதுகாப்புப் பணியை நீதிமன்ற வளாகத்திலே மேற்கொண்டிருக்கிறது. ஆனால், டெல்லி தலைநகரத்திலே நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் தாக்கப்படுகிறார்கள்; அங்கே குற்றம் சுமத்தப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குப் போக முடியவில்லை; தொடர்ந்து தாக்குதல் நடைபெறுகிறது என்று சொன்னால், பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இந்த நாடு எங்கே சென்று கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்டு, கருத்து சுதந்திரத்திற்கு இடமில்லாமல், மத சகிப்புத் தன்மையில்லாமல், சகிப்புத் தன்மையற்ற ஒரு நிலையை பொருளாதாரத்திலும், சமூக நீதியிலும்



2016 பிப்ரவரி 18] [திரு. சு. குணசேகரன்]

கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓர் ஆபத்தான நிலையில்தான், இந்தப் பொருளாதாரக் கொள்கை என்பது மிகவும் மோசமாக உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு எடுத்துக்காட்டு, கார்ப்பரேட் நிறுவனங்களுடைய வருகையும், அதற்குக் கொடுக்கக்கூடிய ஆதரவும்தான்.

இப்போது நாம் வெளியிலிருந்து மின்சாரத்தைக் கூடுதல் விலைக்கு வாங்குகிறோம். நமக்கே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. கூடுதல் விலையென்றால், நான் வேறு அர்த்தத்தில் சொல்லவில்லை. நாம் விலை கொடுத்து வாங்குகிறோம். ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.13—க்கு வாங்குகிறோம் என்று சொன்னால்,. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலை கொடுத்து வாங்குகிறோம் என்று சொல்வது வேறு. நாம் கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதே இல்லை. குறைந்த விலையில் மின்சாரம் கிடைக்கும்போது, அதை விட்டுவிட்டு, கூடுதல் விலைக்கு வாங்குகிறோம் என்பதற்கு உங்களிடம் ஆதாரம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் திருத்திக் கொண்டால் சரி. (குறுக்கீடு) நீங்கள் மட்டுமல்ல; இதுபோன்ற தவறான தகவல் பல இடங்களில் பரப்பப்படுகிறது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். அப்படி யாராலும் செய்ய முடியாது; சட்டத்தில் அதற்கு வழியும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மின்சாரத்தை நாம் விலை கொடுத்து வாங்குகிறோம். விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கிவிட்டு, தொழில் வளர்ச்சி என்கிற பெயரில் நீங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களை அழைத்து, அவர்களுக்குக் குறைந்த விலையில் மின்சாரத்தைக் கொடுக்கிறீர்கள். அந்த நஷ்டத்தை யார் ஈடு கட்டுவது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கோ அல்லது வணிக நிறுவனங்களுக்கோ சலுகை விலையில் மின்சாரத்தைக் கொடுப்பதில்லை. இலவச மின்சாரத் திட்டத்தின்கீழ் உள்ள பயனாளிகளுக்குத்தான் மின்சாரத்தை இலவசமாகக் கொடுக்கிறோம். சாதாரணமாக வீட்டு உபயோகத்திற்கு கட்டணச் சலுகை என்ற முறையில் மின்சாரம் கொடுக்கிறோம். அதேபோன்று, விசைத்தறி நெசவாளர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் கொடுக்கப்படுகிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற மக்கள், தங்கள் வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்துகிற மின்சாரத்திற்கு மட்டும்தான் concession–அதாவது, குறைந்த விலையில் மின்சாரம் கொடுக்கப்படுகிறதே தவிர, வணிக நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுவதே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்சாரம் குறித்த இந்தக் கருத்தையும் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** நிலத்தை நாம் கூடுதல் விலைக்கு வாங்குகிறோம். ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சலுகை விலையில் கொடுக்கிறோம். 15 ஆண்டுகள் வரியே இல்லாமல் அவர்கள் தொழில் நடத்துவதற்கான அனுமதியையும் கொடுக்கிறோம். ஆனால், அந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் வரி கட்ட வேண்டிய காலத்தில், தொழிற்சாலைகளை மூடிவிட்டுப் போகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. வரி ஏய்ப்பு என்பது கார்ப்பரேட் நிறுவனங்களிடம் நிறைய இருக்கிறது. தொழில் வளர்ச்சி என்று சொல்கிற நேரத்தில், உள்நாட்டில் இருக்கக்கூடிய தொழில் வளர்ச்சியை அல்லது பொதுத் துறை நிறுவனங்களுடைய தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, வெளிநாட்டு மூலதனங்கள், கார்ப்பரேட் நிறுவனங்களின் வருகையை ஊக்குவித்தாலும், நமது நோக்கம் நிறைவேறவில்லை என்பதுதான் எங்களுடைய அடிப்படையான குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான



தகவலைச் சொல்கின்றார். எந்த இடத்தையும் குறைந்த விலைக்குத் தருவதில்லை. தனியார் நிறுவனங்களுக்கு இடம் எடுத்துக் கொடுக்கின்றபொழுது, அதனுடைய அடக்கவிலையிலிருந்து மேற்கொண்டு 20 சதவிகிதம் நாம் development charge போட்டுத்தான் அவர்களிடத்திலே நிலத்தைக் கொடுக்கின்றோமேயொழிய, எந்தவிதத்திலும் குறைந்த விலையில் அதைக் கொடுப்பதில்லை.

அதேபோல, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரம் பற்றிச் சொல்லிவிட்டார்கள். தொழிற்சாலைகளுக்கு வழங்கும் மின்சாரத்திற்காக நாங்கள் ஒப்பந்தம் போடுகின்றபொழுது, 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம் கொடுப்பதற்கு மட்டும்தான் ஒப்புக்கொள்கிறோமேயொழிய, சலுகை விலையில் அதைக் கொடுப்பதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அதேபோன்று, 15 வருடங்களுக்கு வரிச் சலுகையும் கொடுக்கிறீர்கள். ஒரு தொழில் நிறுவனம் இங்கிருந்துவிட்டு, திரும்பி வந்து தொழிலை விரிவாக்கம் செய்யும்போது, திரும்ப அதற்கு வரிச் சலுகை கொடுக்கிறீர்கள். அப்படி வரிச் சலுகை கொடுக்கும்போது, அந்த கார்ப்பரேட் நிறுவனத்தால் நமக்கு என்ன பயன் இருக்கிறது? பொதுவாக, இப்போது வரக்கூடிய எல்லா கார்ப்பரேட் நிறுவனங்களிலும் நேரடியான வேலைவாய்ப்பு என்பது மிக, மிகக் குறைவு. எல்லாமே இயந்திரமயமாக்கப்பட்ட தொழிலாகத்தான் இருக்கின்றன. கார்ப்பரேட் நிறுவனங்களால் நமக்கு வேலைவாய்ப்புகளோ அல்லது வரி வருவாயோ எதிர்பார்த்த அளவிற்கு இல்லாத காரணத்தால், இப்படிப்பட்ட நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்குப் பதிலாக உள்நாட்டில் இருக்கக்கூடிய நமது வேளாண்மைத் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அதைப்போல உள்நாட்டு தொழிலை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[2016 பிப்ரவரி 18

*பிற்பகல் 2–20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரிச் சலுகை குறித்துச் சொன்னார்கள். இது நாடு முழுவதும் இருக்கின்ற நிலைமைதான்; உலகம் முழுவதும் இருக்கின்ற நிலைமைதான். ஏனென்றால், போட்டி நிறைந்த உலகத்தில் ஒரு தொழிற்சாலையைக் கொண்டுவர வேண்டுமென்றால், வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்றால், இதுபோன்ற சலுகைகளைக் கொடுத்தாக வேண்டிய நிலைமை இருக்கிறது. அதேபோன்று நிலத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அருகில் இருக்கின்ற ஆந்திர மாநிலத்திலுள்ள தடாவிலே என்ன செய்திருக்கிறார்கள் என்றால், ஒரு தனியார் நிறுவனம் சார்பில் 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தைக்கொண்டு, சிப்காட் போன்று ஒரு வளாகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கே ஒரு கம்பெனியை ஏற்படுத்த வேண்டுமென்றால், ‘ஒரு ரூபாய்க்கு நாங்கள் இடம் கொடுக்கிறோம்; வாருங்கள்’ என்று சொல்கின்றார்கள். அப்படியெல்லாம் போட்டி இன்றைக்கு இருக்கின்றது. நாம் வேலைவாய்ப்பையும் உருவாக்க வேண்டும். அதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இவ்வளவு தொழிற்சாலைகளைக் கொண்டு வந்திருக்கிறது. நீங்கள் தொழிற்சாலைகள் வேண்டுமென்று சொல்கிறீர்களா? வேலைவாய்ப்பு வேண்டுமென்று சொல்கிறீர்களா? இவையெல்லாம் வேண்டாமென்று சொல்கிறீர்களா என்பதைத் தயவு செய்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவிக்க வேண்டும்.

ஒன்று; ஏற்கெனவே உங்கள் கட்சி ஆட்சி செய்த மேற்கு வங்கத்திலும் சரி; கேரளாவிலே ஆட்சி செய்து கொண்டிருக்கும்போதும் சரி; உங்களுடைய கட்சித் தலைவர்கள் எல்லாம் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குச் சென்றிருக்கின்றார்கள். அந்த மாநாட்டிலே பேசியபோது, வரிச் சலுகைகளுக்கெல்லாம் ஒப்புதலைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியிருக்கின்றபோது, மாநிலத்திற்கு மாநிலம் உங்களுடைய கட்சியின் கொள்கை வேறுபடுமா?



2016 பிப்ரவரி 18] [திரு. பி. தங்கமணி]

இரண்டாவது; இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டியுள்ளது. எந்தவொரு நிறுவனமும், ஆயிரம் பேர்களுக்கு, 5 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுத்தபிறகுதான், அந்த ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்ததற்குப் பிறகுதான் சலுகைகளைப் பெற ஆரம்பிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மட்டுமல்ல; நான் ஒட்டுமொத்த இந்தியாவில் உள்ள நிலைமையைத்தான் குறிப்பிடுகிறேன். கார்ப்பரேட் நிறுவனங்களுடைய வருகையும், அந்தத் தொழில் கொள்கையுமே மோசம் என்பதுதான் எங்களுடைய அடிப்படைக் கோட்பாடு. அதனால்தான் தமிழ்நாட்டிலே மிகப் பெரிய பாதிப்பு உருவாகிறது. அதனால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பும், வரி வருவாய் இழப்பும் பாதிப்பை உருவாக்குகிறது என்பதைத்தான் இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்குப் பத்திரிகைகளிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. Vodafone நிறுவனம் 14 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் வரி ஏய்ப்பு செய்திருப்பதால், நீதிமன்றத்திலே வழக்கு நடந்து கொண்டிருக்கிறது; இன்னும் வரியைக் கொடுக்கவில்லை. அதேபோன்று, நோக்கியா நிறுவனத்தை மூடிவிட்டுச் சென்றுவிட்டார்கள்; வரியையும் கொடுக்கவில்லை. அப்படியென்றால் இதனால் யாருக்கு என்ன பிரயோஜனம்? எனவே, இதற்குப் பதிலாக பொதுத் துறை நிறுவனங்களைப் பலப்படுத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய அடிப்படையான கோரிக்கை. (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நீங்கள் தவறாகச் சொல்கிறீர்கள். ‘உள்நாட்டு நிறுவனத்திற்குச் சலுகை இல்லை; சலுகை இல்லை’ என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். யார் நிறுவனத்தைத் தொடங்கினாலும், அந்தச் சலுகை உண்டு. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மட்டும்தான் அந்தச் சலுகை; உள்நாட்டு

நிறுவனத்தினருக்கு அந்தச் சலுகை இல்லை என்பதல்ல. சமீபத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடந்தபோது, நம்முடைய நாட்டைச் சார்ந்தவர்கள், கிட்டத்தட்ட ஒரு இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் செய்ய ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்தச் சலுகைகள் இருக்கின்றன. ஆகவே, இது நாடு முழுவதும் நடக்கின்ற ஒன்றுதான்.

அதுமட்டுமல்லாமல், அந்த வரிச் சலுகை *15* வருடங்கள், *20* வருடங்கள் என்று இல்லை. உதாரணத்திற்கு, ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்கிறார்கள் என்றால், *90* சதவிகிதம், *100* சதவிகிதம் கொடுக்கிறோம் என்றால், அந்த ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வந்துவிட்டால், அதற்குமேல் அரசுக்குத்தான் வரி வருகிறது. தொடர்ந்து *15* வருடங்களுக்கு வரிச் சலுகை கொடுப்பது கிடையாது. வரிக்கான Limit என்பது, அவர்கள் என்ன முதலீடு செய்கிறார்களோ, அந்த முதலீட்டுத் தொகை வரையில்தான் வரிச் சலுகை வழங்கப்படுகிறது. அதற்கு மேல் சென்றால், *15* ஆண்டுகள் வரை வரிச் சலுகை என்பது கிடையாது. *5* ஆண்டுக் காலத்திற்குள்ளேயே அவர்கள் முதலீட்டுத் தொகை அளவிற்கு வரிச் சலுகை பெற்றுவிட்டால், அதற்குப்பிறகு அரசுக்கு வரியை செலுத்தவேண்டுமேயொழிய, முழுமையாக *15* ஆண்டுக் காலம் வரை வரிச் சலுகை என்பது தவறானது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். எல்லோரும் கடுமையான பசியில் இருக்கிறார்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அடுத்த சப்ஜெக்ட்டிற்குப் போய்விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட *3* ஆயிரம் பேர், *5* ஆண்டுகளுக்கும் மேலாக பணி நிரந்தரம் செய்யப்படாமல் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, சுமார் *7* ஆயிரத்து சொச்சம் பேர் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, *10* ஆயிரம் பேர் என்ற அளவில் வருகின்றபோது, இப்பொழுது பின்பற்றக்கூடிய



கொள்கையின் அடிப்படையில், காலியிடங்களை நிரப்புவது என்று நீங்கள் முடிவெடுத்தால், இப்பொழுது பணியில் சேர்ந்திருப்பவர்கள் உள்ளிட்டவர்களுக்கெல்லாம் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்றால், கிட்டத்தட்ட ஒவ்வொருவருக்கும் *10* ஆண்டுகளுக்கும் மேலாகிவிடும். எனவேதான், இப்பொழுது பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய அந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள், ஏற்கெனவே ஒரு காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த நேரத்திலே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர், அரசுச் செயலாளர் உள்ளிட்ட அனைவருமே, அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அவர்களுடைய உணர்வுகளை அவர்களும் உணர்ந்திருக்கிறார்கள்; நான் தவறாகச் சொல்லவில்லை. அவர்களும் அதை உணர்ந்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை உணர்ந்துகொண்டு, சில முயற்சிகளை எடுத்தார்கள் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனாலும், அவர்களுடைய உணர்விற்கேற்ப, அவர்கள் சொன்ன அந்த வாக்குறுதிக்கேற்ப நடவடிக்கை இல்லை என்கிற அடிப்படையில், மீண்டும் இன்றைக்கு அந்தக் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை அவர்கள் தன்னிச்சையாக நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 2–25*

எனவே, உடனடியாக ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பணி நிரந்தரம் இல்லாமல் இருக்கக்கூடிய அந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம் என்பது தேவை. அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். பணி நிரந்தரம் கோரி போராடும் அவர்களின் உணர்வுகளை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். "இப்பொழுது நிதி நெருக்கடி இருந்தால்கூட, எங்களுக்கு சம்பளமேகூட வேண்டாம்" என்று சொல்கிறார்கள். "ஒரு வருடம் கழித்துக்கூட நாங்கள் சம்பளம் வாங்கிக் கொள்கிறோம். சம்பள உயர்வு என்பதுகூட எங்களுக்குப் பிரச்சினை இல்லை. சுமார் *8* ஆயிரம் ரூபாய், *10* ஆயிரம் ரூபாய்தான் வாங்குகிறோம் அதைக்கூட நாங்கள் வாங்கிக்கொள்கிறோம். ஆனால், இரண்டாண்டுகளில் அங்கீகாரம் வழங்கப்படும் என்று ஒப்பந்தம் போட்டு, ஐந்தாண்டுகளுக்கு

மேலாகியும் பணி நிரந்தரம் செய்யாமல், ஒரு வருடத்திற்கு 100, 200, 300 பணியாளர்களை மட்டும் அரசு பணி நிரந்தரம் செய்து கொண்டிருந்தால், எத்தனை வருடங்கள் ஆகும்" என்று கேட்கிறார்கள்.

"அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணிபுரியும் மற்ற பணியாளர்கள் அனைவரும் நிரந்தரப் பணியாளர்களாக இருக்கும்போது, செவிலியர்களாகப் பணிபுரியும் நாங்கள் மட்டும் பணி நிரந்தரம் இல்லாமல் இருப்பது எங்களுக்கு ஒரு கௌரவப் பிரச்சினையாக இருக்கிறது; நாங்கள் அவர்களை ஒருங்கிணைக்க முடியவில்லை; பணியாற்ற முடியவில்லை; மன உளைச்சலுக்கு ஆளாக்கப்படுகிறோம்" என்று உணர்வுரீதியாகச் சொல்கிறார்கள். 'ஒரு வருடத்திற்கு சம்பளம் கேட்க மாட்டோம்' என்று எழுதிக் கொடுக்கக்கூடிய நிலைமைகூட அவர்களிடத்தில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்தக் கூட்டத் தொடரின் கடைசியில் அறிவிப்புச் செய்ய வேண்டும்; குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளைக் கடந்த செவிலியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு மிகுந்த கனிவோடும், மிகுந்த பரிவோடும், பாசத்தோடும், அவர்களுக்கு சாதகமான முறையில் பரிசீலனை செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதற்குப் பின்புகூட, உடனடியாக, இருக்கின்ற நிரந்தரப் பணியிடங்களுக்கு செவிலியர்களைத் தேர்ந்தெடுத்து, கலந்தாய்வு மூலமாக 400–க்கும் மேற்பட்ட செவிலியர்களுக்குப் பணி நிரந்தரம் வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மிகவும் கனிவோடு, சாதகமாகப் பரிசீலித்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நல்ல முடிவை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு இதே அவையில், தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபிறகு, ஒவ்வோர் ஆண்டும் அது தொடர்ந்து இருந்து வருகிறது. ஆனால், 2013 ஆம் ஆண்டு வரை தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால், மொழி சிறுபான்மையினர் இருக்கக்கூடிய பகுதிகளில், அவர்கள் இல்லாமல், மாணவர்கள் தமிழ்ப் பாடத்தைப் படிக்க முடியவில்லை. அப்படிப்பட்ட நிலையில், அந்தச் சட்டத்தின் அடிப்படையில், மொழி சிறுபான்மையினர் இந்த ஆண்டு 10 ஆம் வகுப்பில் தமிழ் மொழியில் தேர்வு எழுத வேண்டும். ஆனால், அவ்வாறு தேர்வு எழுத முடியாது என்ற காரணத்தால், அவர்கள் உயர் நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்திலும், அவர்கள் தங்கள் தாய்மொழியிலேயே தேர்வு எழுதலாம் என்று தீர்ப்பு வழங்கியதற்குப் பின்னாலும், அரசு இதுபற்றிய எந்தவொரு அறிவிப்பையும் வெளியிடாமல் இருக்கிறது. இது 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதக்கூடிய மாணவர்களிடத்திலே மிகப் பெரிய பதற்றத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியிருக்கிறது. சுமார் 30,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் வட மாவட்டங்கள் முழுவதிலும் நிரம்பியிருக்கிறார்கள். எனவே, அரசு ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டும். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு, இந்த ஆண்டு மொழி சிறுபான்மையினர் அவர்களுடைய தாய்மொழியில் தேர்வு எழுத அனுமதி அளித்து, அறிவிப்பு வெளியிட்டால்தான், அவர்கள் நிம்மதியாகப் படித்து, தேர்வு எழுத முடியும். உடனடியாக இதை அறிவிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு முழுவதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள் போன்ற அனைத்துப் பணியாளர்களும் தங்கள் உரிமைகளைக் கோரி போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் முன்வைத்திருக்கின்ற கோரிக்கையில் முக்கியமானது, புதிய பென்ஷன் திட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்பது. புதிய பென்ஷன் திட்டம்

*2004* ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படுகின்ற நேரத்தில், இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அந்தத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தது. ஆனால், அங்கு எதிர்த்து வாக்களித்துவிட்டு, கொள்கைரீதியாக இந்தத் திட்டத்தை ஒப்புக்கொண்டு, *2003*–ல் இந்த ஆட்சிதான் தமிழ்நாட்டில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. *2003* ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தினை நிறைவேற்றிவிட்டு, *2004* ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அதை எதிர்த்திருக்கிறீர்கள். தற்பொழுது, இந்தத் திட்டத்தினால் எந்தவித இலாபமும் கிடையாது. அவர்களிடமிருந்து பிடித்தம் செய்த *14,000* கோடி ரூபாய் எங்கு சென்றிருக்கிறது என்பதே தெரியாத ஒரு நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. பங்குச் சந்தை என்பது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் தவறான கருத்தை இங்கே பதிய வைத்துக்கொண்டிருக்கிறார். அவர் கூறியது தவறான கருத்து. பணம் எங்கும் செல்லவில்லை. அரசாங்கத்தினுடைய கஜானாவில் அப்படியே பாதுகாப்பாக, வட்டியோடு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** புதிய பென்ஷன் திட்டத்தின் அடிப்படையில் பிடித்தம் செய்யப்படும் தொகையை பங்குச் சந்தையில் போடுகிறீர்கள். பங்குச் சந்தையில் போடுகின்ற பணத்தைப்பற்றி யாருக்கும் கணக்கு தெரியவில்லை. நீங்கள் அந்தத் தொகை பாதுகாப்பாக, வட்டியுடன் இருக்கிறது என்று சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணத்தை பங்குச் சந்தையில் போடவில்லை. அந்தப் பணம் அரசாங்கத்தின் கஜானாவில் வட்டியோடு இருக்கின்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மிகவும் சந்தோஷம். வட்டியோடு இருந்தால், பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்திக் கொடுத்துவிட்டால், எல்லாப் பிரச்சினைகளுமே தீர்ந்துபோகும். ஏனென்றால், இது தேர்தல் நேரம்; தேர்வு நேரம். (குறுக்கீடு) நன்றி சொல்லியாகிவிட்டதே. ஆகவே, அதை உடனடியாக அமல்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அரசுப் பணியிடங்களில் அதிகமான காலிப் பணியிடங்கள் இருக்கின்றன என்றும், அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஜனநாயக அடிப்படையில் போராடுபவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அவர்கள் பணிக்குத் திரும்புவதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–30*

GAIL நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் தமிழக அரசுக்கு எதிரான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. தமிழக அரசின் சார்பில் மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இதே GAIL நிறுவனம், IOC நிறுவனம் ஆகியவை திருவாரூர் மாவட்டத்தில் பார்த்தீர்களானால், ஏற்கெனவே எண்ணெய்யை எடுத்துவிட்டு, குழாயைப் பதித்திருக்கிறார்கள். அங்கு வேறுவிதமான போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது அங்கே ஏற்கெனவே குழாயைப் பதித்த இடங்களில், ஒரு முறை அதற்கான தொகையைக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அப்படியே காலங்காலமாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் குழாய் பதித்துக் கொண்டு போகிறார்கள்; இலாபம் கிடைக்கிறது. அதனால் ஒவ்வோர் ஆண்டும் குத்தகை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, திருவாரூர் மாவட்டத்தில் குழாய் பதித்த இடங்களில் எல்லாம் குத்தகை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். போன முறை நான் இதைச் சுட்டிக்காட்டினேன்.

அதேபோல், மின்சாரக் கம்பிகள்; எங்கு பார்த்தாலும் பெரிய மின் கோபுரங்கள் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. Grid எல்லாம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதை அமைக்கும்பொழுது, விவசாயிகளின் நிலங்களில் யாரிடமும் அனுமதி கேட்பதில்லை. அவர்களாகவே நட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். காலையில் வந்துபார்த்தால் பெரிய பெரிய டவர் அந்த நிலங்களிலே நிற்கிறது; குழியைத் தோண்டிப் போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். விவசாயிகள் நஷ்ட ஈடு கேட்டால் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். 'நிலம் உங்களுக்குத்தான் சொந்தம்' என்று சொல்கிறார்கள். அதனால் யாருக்கு என்ன பிரயோஜனம் இருக்கிறது? நஷ்ட ஈடு வழங்க வேண்டும் அல்லவா? சாதாரண விவசாயிகள் அந்த நிலங்களை நம்பித்தான் இருக்கிறார்கள். நிலத்திற்குரிய நஷ்ட ஈட்டை அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அதைக் கொடுக்கக்கூடிய நடைமுறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இப்பொழுது கரும்பு விவசாயிகள் சார்பாக தொடர்ந்து அவர்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்; நாங்களும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், தீர்வுதான் ஏற்படவில்லை. தமிழகத்தில் என்ன பிரச்சினை என்றால், 22 தனியார் ஆலைகள் வந்துள்ளன; 19 கூட்டுறவு அரசு பொதுத் துறை ஆலைகள் இருக்கின்றன. ஆனால், ஒரே மாவட்டத்தில், ஒரு பக்கம் இருக்கின்ற விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,850 கிடைக்கிறது. இன்னொரு பகுதியில் பார்த்தீர்கள் என்றால், ரூ.2,850 கொடுக்க மாட்டேன் என்கிறார்கள்; அங்கு 2,200 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது என்ன அநீதி? அதை எப்படி ஏற்றுக்கொள்வது? ஒன்று, நீங்கள் ஒத்து வரவில்லையென்று சொன்னால், வழக்கு முடியும் வரையில் குறைந்தபட்சம் மற்றவர்களுக்கு மானியம் கொடுக்கின்ற மாதிரி, அரசின் நிதியிலிருந்து அந்த விடுபட்டுப்போன தொகையை அரசுதான் கொடுத்தாக வேண்டும். ஒரு பகுதியில் கொடுப்பதுபோன்று மற்றவர்களுக்கும், தனியார் கரும்பு ஆலைகளுக்கும் கொடுங்கள். அப்படி இல்லையென்றால், சட்டத்தின் அடிப்படையில் தனியார் ஆலைகளுக்கு விடக்கூடிய அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்து, அரசு ஆலைகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்படி எந்த நடவடிக்கையும் எடுக்காததால், சென்ற ஆண்டிலும் இதே மாதிரியான பாதிப்பு ஏற்பட்டது; இந்த ஆண்டிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒரே மாநிலத்தில், ஒரே மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள், இரு வேறு விலைகளைப் பெறுவது என்பது எப்படி சாத்தியம் ஆகும் என்பதை அரசு



உணர வேண்டும். எனவே, இந்த அடிப்படையில் உடனடியாக இதற்கு மாற்று ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2,200 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். ரூ.2,200 எங்கும் இல்லை. கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 2,400–லிருந்து ரூ.2,500 வரை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் இருந்த நிலுவைத் தொகையான 1,200 கோடி ரூபாய், 6 மாத காலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக, ரூபாய் 601 கோடியாகக் குறைந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுதுதான், சற்று நேரத்திற்கு முன்னால் பேசுகிறபொழுது, தனியார் கம்பெனிகளுக்கு எல்லாம் அரசு ஆதரவாக வரிச் சலுகையெல்லாம் கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்பொது சர்க்கரை ஆலைகளைப்பற்றிப் பேசுகிறபொழுது, அந்த ஆலைகளுக்கு அரசுதான் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆக, இலாபம் வருகின்றபொழுது, விவசாயிகளுக்கு சேர்த்துக் கொடுக்கிறார்களா அல்லது அரசுக்கு சேர்த்து வரியும் கொடுக்கிறார்களா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில்தான் தமிழகத்தில் தொழில்களைத் தொடங்கியிருக்கிறார்கள்.

கரும்பு விவசாயிகளைப் பொறுத்தவரையில், கடந்த காலங்களிலே நாங்கள் ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தி, 'அரசினுடைய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குப் போதிய கரும்பு இல்லை; நீங்கள் வாருங்கள்' என்று அழைத்தோம். மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் நடத்திய அந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தில், ஒரு விவசாயிகூட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பினை அளிக்க ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களுக்கு இலாபம் என்று வருகிறபொழுது, தனியாருடன் இருக்கிறார்கள்; இப்பொழுது கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு அரசு மானியம் கொடுக்கின்ற காரணத்தால், கூட்டுறவு ஆலைகளுக்கு வருகிறோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் ஏற்கெனவே கருத்து கேட்கின்றபொழுதே வந்திருந்தார்களேயானால், இதுபோன்ற பாதிப்புகள் கரும்பு விவசாயிகளுக்கு இருக்காது என்பதை முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்ததாக, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் நான் பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கின்றேன்; நீங்களும் அதைத்தான் சொல்கின்றீர்கள். கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையைப் பொறுத்தவரையில், 601 கோடி ரூபாய் இன்னும் பாக்கி இருக்கிறது. அதை நிச்சயமாக வாங்கிக் கொடுப்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. கூடிய விரைவில் அதை வாங்கிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** பாக்கியைச் சொல்கிறீர்களா அல்லது விலையைச் சொல்கிறீர்களா என்று தெரியவில்லை. நான் விலையைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கித் தொகையையும், இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற 2,850 ரூபாய் விலையையும் சேர்த்து வாங்கிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அதேபோல் தேங்காய் கொள்முதல் விலை இப்பொழுது மிகவும் குறைவாக உள்ளது; 59 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தகுந்த விலை கிடைக்க வேண்டும் அல்லவா? அதனால் தேங்காய் கொள்முதல் விலையைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 2–35

குறிப்பாக, பாமாயில் இறக்குமதி நமது தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் அதிக அளவில் செய்யப்படுகின்றன. ஆனால், பாமாயில் ** என்று பல ஆய்வுகளில் வெளியில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைவிட தேங்காய் எண்ணெய் நம் உள் நாட்டு தயாரிப்பு. தென்னை மரங்கள், தென்னை உற்பத்தி விவசாயிகளுக்கெல்லாம் பாதுகாப்பாக இருக்கக்கூடியது. எனவே, பாமாயிலைக் குறைத்துவிட்டு, தேங்காய் எண்ணெய்யைப் பயன்படுத்துகிற ஒரு பழக்கத்தை உருவாக்க வேண்டும். விலை கூடுதலாக இருப்பதனால், அதைச் செய்ய முடியவில்லை. அந்த அடிப்படையில் பாமாயில் இறக்குமதியைக் குறைத்து, தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகமாக்கும் விதமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, பாமாயில் ** என்ற கருத்தைச் சொன்னார்கள். அது நிரூபிக்கப்பட்ட கருத்து அல்ல. எனவே, இதுபோன்ற நிரூபிக்கப்படாத கருத்துகளைச் சொல்கின்றபோது— தமிழகத்திலேயே 1 கோடியே 50 இலட்சம் pouches, அதாவது 1 கோடியே 50 இலட்சம் லிட்டர் பாமாயிலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆய்வுகளுக்குப் பின்னர், இது எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் மக்களுக்கு ஏற்றதாக இருக்கிறது என்ற வகையில்தான் அது கொடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, அந்தக் கருத்தைத் திரும்ப பெறுமாறு அல்லது நீங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேங்காய் எண்ணெய் ஆரோக்கியமானதாகும்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேங்காய் எண்ணெய் ஆரோக்கியமானதாகும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், பாமாயில் எண்ணெய்பற்றி கூறிய கருத்து. . .

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தக் கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் போகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாமாயில்பற்றி நீங்கள் குறிப்பிட்டதை.

**திரு. சு. குணசேகரன்:** பாமாயில் என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை. பாமாயில்பற்றி பல கருத்துகள் வந்திருக்கின்றன. விஞ்ஞானபூர்வமாகவும், ஆதாரபூர்வமாகவும் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்பது என்னவென்றால், பாமாயில்பற்றி பல கருத்துகள் வந்திருக்கின்றன. அதனால் தேங்காய் எண்ணெய்யை ஊக்கப்படுத்த வேண்டும் என்று சொல்கிறேன். நமது நாட்டிலுள்ள தென்னை மரங்களை, தேங்காய் எண்ணெய்யை ஊக்கப்படுத்துங்கள், உற்சாகப்படுத்துங்கள் என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், தேங்காய் விலையை ஊக்கப்படுத்த வேண்டும் என்று சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் பொள்ளாச்சி என்பதால் support ஆகச் சொல்கிறேன். நீங்கள் அதைப்போய் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். Same side goal போடாதீர்கள். தேங்காய் கொள்முதல் விலையைக் கூடுதலாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சாலைகள் மேம்பாடு; என் தொகுதியில் உள்ளாட்சி அமைப்பினுடைய சாலைகள் கிட்டத்தட்ட எட்டு சாலைகள் இதுவரைக்கும் பாராமரிக்கப்படாமல் இருக்கின்றன. பேருந்து வந்து செல்கின்ற சாலை. குறிப்பாக, வேலரேந்தலிலிருந்து சூராணம் செல்லக்கூடிய சாலை, பாளையந்தூர் வழியாக செல்கின்ற சாலை; அங்கு பாலம் கட்டப்பட்டு, கிட்டத்தட்ட 3 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், அந்தச் சாலைகள் போடப்படாமல் இருப்பதால், பேருந்தே போகாமல் மக்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. சேத்தூரிலிருந்து மேலசாத்தூர் வழியாகச் செல்லக்கூடிய ஒரு சாலை உள்ளது. இப்போது அந்தச்



சாலையையும் இந்த நிதியாண்டிலேயே நீங்கள் எடுத்து மராமத்து செய்து கொடுத்தால், பிரயோஜனமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதைப்போல, புறவழிச்சாலைகள். Graphite ஆலைபற்றி தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே வந்தேன். ஆனால், கடந்த ஆட்சியிலும் அதை நிறைவேற்றவில்லை; இந்த அரசும் அதைக் கண்டுகொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பொற்கால ஆட்சியில்தான் இன்றைக்குச் சாலைகள் அதிகமான அளவில் போடப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, 62,517 கிலோ மீட்டர் சாலைகளுக்கு 16,536.33 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்கு நிதி ஒதுக்கப்பட்டு அவை போடப்பட்டுள்ளன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 9,733 கோடி ரூபாய் மட்டும்தான் இதற்காக ஒதுக்கப்பட்டது. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் சில சாலைகளைக் குறிப்பிட்டுச் சொன்னார். அந்தச் சாலைகள் போடப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் அதிகமான அளவில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதைப்பற்றி அவர் குறிப்பிடவில்லை. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே மட்டும், இன்றைக்கு நகராட்சி, பேரூராட்சி, ஊரக வளர்ச்சித் துறைகளில் கிட்டத்தட்ட 207.67 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, 11,864 பணிகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலைகளையும் போடுவதற்குக் கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், இனிதே உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது. சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியைத் தாங்கக்கூடிய 'ஜோதி நெல்' என்ற ஒரு வகை நெல் காலங்காலமாகப் பயிர் செய்யப்பட்டு வருகிறது. அது மட்ட ரக அரிசியாகும். அதனால், ஒவ்வோர் ஆண்டும் அதனைக் கொள்முதலுக்கு எடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். இதே அவையில் நான் கடந்த முறை பேசியபோதும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை எடுப்பதாகக் கூறி, உறுதி கொடுத்து, கொள்முதலுக்கு ஏற்பாடு செய்தார்கள். ஆனால், இந்த ஆண்டும் கொள்முதலுக்கு எடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். இது ஒரு பிரச்சினையாக தொடர்ந்து இருக்கிறது. எனவே, உடனடியாக ஜோதி நெல்லை கொள்முதல் செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் *2–40*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த அவையிலே வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையிலேதான் 'ஜோதி நெல்', மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், 'குந்தாலி நெல்', கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கொள்முதல் செய்யப்படாத, டி.கே.எம்.9; இதுபோன்ற இரக நெல்லை எல்லாம் கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். தற்போது ஜோதி நெல் கொள்முதல் செய்யப்படவில்லையென்று சொன்னார்கள். உடனடியாக ஜோதி நெல்லைக் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செய்யும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள் டி.கே.எம்.9. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், அமைச்சர்தான் 'செய்கிறேன்' என்று சொல்கிறாரே, ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள் டி.கே.எம்.9 நெல்லை எடுக்கவில்லையென்று சொல்கிறார். அந்த மட்ட ரக நெல்லைக் கொள்முதல் செய்வதில் என்ன தவறு இருக்கிறது? இட்லிக்கு அதுதான் நன்றாக வரும். இட்லி மற்றும் பலகாரத்திற்கு எல்லாம் அதைத்தான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில்தான் டி.கே.எம்.9 நெல் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், 2011–ல் டி.கே.எம்.9 நெல்லை எடுக்க வேண்டுமென உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது டி.கே.எம்.9 நெல் வருவதற்கான வாய்ப்பில்லை. அது குறுவை. மாண்புமிகு திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அப்படியிருந்தால் அந்த நெல் கொள்முதல் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். சிவகங்கை நகரத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய சிலை நிறுவப்பட்டு, அதை அப்படியே மூடி வைத்திருக்கிறார்கள்.

அந்த சிலையைப் பொறுத்தளவுக்கு, அது புதிய சிலை கிடையாது. அது ஏற்கெனவே renovation செய்த சிலைதான். எனவே, அதற்கு நாங்கள் பலமுறை கோரிக்கை மனு அளித்திருக்கிறோம். உச்ச நீதிமன்றம் 'பொது இடங்களில் புதிய சிலை நிறுவக்கூடாது' என்றுதான் சொல்லியிருக்கிறதேதவிர, ஏற்கெனவே இருந்த சிலையைப் பராமரித்து வைப்பதில், தவறு கிடையாது. ஆனால் என்ன காரணமோ, அதற்கான அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, அந்த காமராஜர் சிலையைத் திறப்பதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வெள்ள நிவாரணம். மாண்புமிகு உறுப்பினர் சகோதரி பாலபாரதி அவர்கள் இங்கே அதைப்பற்றி விரிவான கருத்துகளையெல்லாம் சொன்னார்கள். நீங்கள் அந்த வெள்ள நிவாரணப் பணி முடிவை நேரடியாக நீங்களே எடுத்துக் கொண்டீர்கள். வெள்ளம் வந்து மிகப்பெரிய பாடத்தை நமக்கு உணர்த்தியிருக்கிறது. அது ஒரு சிறு கவிதை சொல்வதுபோல, வீட்டுமனை இல்லையென்றால், மக்கள் அரசாங்கத்திடம் மனு போடுகிறோம். ஆனால், வெள்ளம் எங்கே போகும்? அது தன்னிடத்தைத்தானே எடுத்துக்கொண்டது. ஆக்கிரமிப்புகள் என்பதுதான் மிகப் பெரிய பாதிப்பு. ஆனால், ஆக்கிரமிப்புகள் என்று வருகிற நேரத்தில், எல்லோருடைய பார்வையும் எங்கேயிருக்கிறது என்று சொன்னால், சாதாரண ஏழையெளிய மக்கள், வீட்டுமனை இல்லாதவர்கள், வேறு வழியே இல்லாமல் குடிசை போட்டிருப்பவர்கள் மீதுதான் போகிறதே தவிர, அதற்கு மேலிருக்கிற ஆக்கிரமிப்புகள்பற்றி யாரும் சிந்திப்பதே கிடையாது. செம்பரம்பாக்கம் ஏரி திறக்கப்பட்டது குறித்த சர்ச்சையெல்லாம் இங்கே நீண்டநேரம் விவாதமாக நடந்தது. ஆனால், அடிப்படையில் என்ன செய்திருக்கிறார்கள்? விஞ்ஞானம் வளராத காலத்திலேயே, தமிழ்நாடு ஒன்றாக இல்லாத காலத்திலேயே, தமிழ்நாடு முழுவதும் உள்ள 49,000 ஏரிகளை ஒன்றோடொன்று பிணைத்து, இணைத்து, இவ்வளவு வெள்ளம் வந்தால் எப்படி வடியும் என்பதற்கான ஒரு வடிவமைப்பை மிகவும் அற்புதமாக, அனுபவத்தின் மூலமாக உருவாக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால், நாம் இப்போது என்ன செய்கிறோம் என்றால், நாகரிகம் வளர்ந்து அடைந்திருக்கிற இந்தக் காலத்தில், தொழில்நுட்பம் வளர்ந்திருக்கும் இந்தக் காலத்தில், எல்லாம் தெரிந்தே அதை அதிகமாக



அழிக்கிறோம். வாய்ப்பே இல்லாதவன், வசதியேயில்லாதவன் எங்கேயாவது ஓர் இடத்தில் போய் குடிசை போட்டிருந்தால், அதுதான் கண்ணை உறுத்துகிறது. ஆனால், வசதி படைத்தவர்கள் இன்றைக்கு எல்லா இடங்களிலும் மறித்து கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வெள்ள நிவாரணத்தின்போது எத்தனையோ அற்புதங்கள் நடந்திருக்கின்றன. நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அதாவது மனித இதயம் எவ்வளவு மகத்தானது; மனித உணர்வுகள் எவ்வளவு மகத்தானவை; குறிப்பாக, தமிழர்கள், இந்திய மக்களுடைய உணர்வுகள் எத்தகையவை என்பதையெல்லாம் இந்த வெள்ளம் நமக்குப் பாடங்களாகக் கற்பித்துக் கொடுத்திருக்கிறது. தன்னிச்சையாக, தானாக வந்து உதவி செய்தவர்கள்; பணத்தைப் பற்றியே கவலைப்படாமல் சோறாக்கிப் போட்டவர்கள்; துணிகளைக் கொடுத்தவர்கள்; தமிழ்நாட்டினுடைய மூலைமுடுக்குகளில் இருந்தெல்லாம் இளைஞர்கள் திரண்டு வந்து, நிவாரண உதவிகளைச் செய்தார்கள். அது அரசினுடைய கடமை; இதையெல்லாம் யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால், இந்த அனுபவங்களிலிருந்து நாம் அடுத்த கட்டத்திற்கு எப்படிப் போகப் போகிறோம், இதேபோன்ற மழை அடுத்த வருடம், இன்னும் 5 வருடங்களில் வராது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஆனால், இந்தச் சூழ்நிலையில் 2 அனுபவங்கள். ஒரு குளோபல் மருத்துவமனை, அது மூழ்குகிற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் உள்ளிட்ட எல்லோருமே போய், அங்கிருந்த நோயாளிகளைக் காப்பாற்றிக் கொண்டு வந்தது உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒன்றுதான். அதை நாம் அரசியலாகக்கூட பார்க்க வேண்டியதில்லை; நோயாளிகளைக் கொண்டுவந்து சேர்த்தார்கள்; பாராட்டக்கூடியதுதான்; அதிகாரிகள் எல்லோருமே இருந்தார்கள். வண்டலூர் வன விலங்குப் பூங்கா சுவர் இடிந்தவுடனே, ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் உடனே அங்கு ஓடிச் சென்றார் என்ற செய்திகூட வந்தது. அதெல்லாம் பாராட்டக்கூடியதுதான். யாரும் அவற்றையெல்லாம் மறுக்க முடியாது. ஆனால், அதற்குப் பின்னால் நாம் என்ன செய்கிறோம்? இதைத்தான் இன்றைக்கு இருக்கிற கேள்வியாக, நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்போது பார்த்தீர்கள் என்று சொன்னால், MIOT மருத்துவமனை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். MIOT மருத்துவமனை, அதிலே ஏற்பட்ட இழப்பு என்பது சாதாரண இழப்பா? ஆனால், அந்த இழப்பைப்பற்றி அரசுக்கு என்ன கருத்து இருக்கிறது? அதைப்பற்றி என்ன நடவடிக்கையை நீங்கள் எடுக்கப்போகிறீர்கள்? இப்போது உண்மை என்னவென்றால், நீர் செல்லும் அந்த ஓடையை மறித்து MIOT மருத்துவமனையை நடுவிலே கட்டியது உண்மை. அதையெல்லாம் படம் போட்டு, எல்லா பக்கமும் சொல்லியாகிவிட்டது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆனால், வருவாய்த் துறையும், சுகாதாரத் துறையும், அந்த மருத்துவமனை நீர்நிலையை ஆக்கிரமித்து கட்டப்படவில்லை என்று நீதிமன்றத்தில் போய் support செய்வது எந்தவிதத்தில் நியாயம்? எப்படி அந்த ஆக்கிரமிப்பை நீங்கள் அகற்றப் போகிறீர்கள்? ஏற்கெனவே இருக்கக்கூடிய செம்பரம்பாக்கம் ஏரியாக இருந்தாலும், மற்ற ஏரிகளாக இருந்தாலும், நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் யாராக இருந்தாலும், அந்த ஆக்கிரமிப்புகளை எப்படி நீங்கள் அகற்றப் போகிறீர்கள்?

பிற்பகல் 2–45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கெல்லாம் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் அளந்து, ஆக்கிரமிப்புகள் இருந்தால் அவற்றையெல்லாம் அகற்ற வேண்டுமென்று இன்றைக்கு நல்ல பல அறிவுரைகளைச் சொல்லியிருப்பதன் அடிப்படையில், அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது முதற்கட்டமாக, நம்முடைய கூவம் ஆற்றின் கரையோரப் பகுதிகளில் இருக்கின்ற ஆக்கிரமிப்பு குடிசைப் பகுதிகளில் இருப்பவர்களையெல்லாம் அகற்றி, அவர்களை மறுகுடியமர்வு செய்வதற்காக—கிட்டத்தட்ட 10,000 பேருக்கு புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. இதேபோல, இனிமேல் எந்த



ஆக்கிரமிப்பையும் அனுமதிக்கக்கூடாது என்றும், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருப்பவர்களை உடனடியாக வேறு இடங்களில் குடியமர்த்தவும் மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல பல அறிவுரைகளைச் சொல்லி, அதற்காக இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், நன்றி மட்டும் சொல்லுங்கள். நன்றி மட்டும் சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்திலே, சிவந்திபுரம் என்ற கிராமம் இனாம் ஒழிப்பு சட்டத்தின்கீழ் முழுவதுமாக எடுக்கப்பட்டது. அங்கே குடியிருப்பவர்களுக்கு நத்தம் புறம்போக்கு நிலங்களில் வீட்டு மனைப் பட்டாக்கள், நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கைகளாலேயே 2011 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டு, அப்பணிகள் முடிந்துவிட்டன. மீதமுள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களும், அதற்காக எடுக்கப்பட்டவைதான். அதற்கான எல்லா தயாரிப்புகளும் செய்து, பட்டா வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து, பட்டா எல்லாம் எழுதி முடித்தாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிலத்தை ஆதீனம், சொந்தம் கொண்டாடி, நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி. சீ. வளர்மதி, (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், நீங்கள் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். நிறைய பேர் பேசக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

[2016 பிப்ரவரி 18

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிலங்களுக்கான பட்டா தயார் செய்தாகிவிட்டது. தயார் செய்தபிறகு, காலந்தாழ்த்தி, அதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, நீங்கள் அதனைக் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். நீதிமன்றத்தில் அந்த தடையாணையை உடனடியாக இரத்து செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதைக்கூட கால நீட்டிப்புச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாகச் செய்து, மீண்டும் அவர்களுக்கு எழுதப்பட்ட பட்டாவை வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு போன்ற பல்வேறு பிரச்சினைகள் மிகப் பெரிய கேள்விக்குறியாக மாறியிருக்கின்றன. அதைப்போல, பொருளாதாரம் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. 'கூடா நட்பு; கேடாய் முடியும்' என்று காங்கிரஸ் கட்சியை விமர்சித்த நிலையில், இன்றைக்குத் தமிழ்நாட்டில் அந்தக் கட்சியோடு நட்புறவை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சி நடைபெறுகிறது. அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி; இன்றைக்கு மத்தியில் இருக்கக்கூடிய பாரதிய ஜனதா அரசாக இருந்தாலும் சரி; அதற்குத் துணை போகக்கூடியவர்கள், துணை போக நினைக்கக்கூடியவர்கள், இப்படி பல்வேறு அம்சங்களில் இருக்கக்கூடிய அரசியல் நிலைமையில், தமிழ்நாடு மிகப் பெரிய ஒரு பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. தமிழ்நாட்டினுடைய அனைத்துவிதமான சிக்கல்களையும் தீர்ப்பதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்; அவருக்கு வேண்டுகோள்தான். அவர் பல்வேறு வேண்டுகோள்களை எல்லாம் அரசுக்கு வைத்திருக்கிறார். ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். அங்கே ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது, 'எடுக்காதே, எடுக்காதே'; 'அகற்றாதே, அகற்றாதே'; என்றெல்லாம் கோஷம்போட்டு, மறியல் மட்டும்



2016 பிப்ரவரி 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

செய்துவிடாதீர்கள். எங்கு ஆக்கிரமிப்புகளை அகற்றினாலும், முதலில் அங்கு வந்து எதிர்ப்பு தெரிவிப்பது நீங்கள்தான். நான் தவறாகச் சொல்லவில்லை; ஒத்துழைப்புக் கொடுங்கள். இந்த வேண்டுகோளோடு மட்டும் நின்றுவிடாமல், உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகிற இந்த அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகத்தான் சொன்னேன். ஏழைகளைக் கண்டால்தான் உங்கள் கண்கள் உறுத்துகின்றன. ஆனால், பணக்காரர்களை விட்டுவிடுகிறீர்கள். அதனால்தான் பிரச்சினை. முதலில் பெரிய, பெரிய நிறுவனங்கள் செய்திருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுங்கள். தொழில் நிறுவனங்கள் வைத்திருப்பவர்கள், கல்வி நிறுவனங்கள் வைத்திருப்பவர்கள், ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். இதுதவிர பல்கலைக்கழகங்களும், மருத்துவமனைகளும் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருக்கின்றன. முதலில் அங்கெல்லாம் ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டு, அதன்பிறகு நீங்கள் மற்ற ஆக்கிரமிப்புகளை அகற்றினால், கண்டிப்பாக ஏழைகள் எப்போதும் ஒத்துழைப்புக் கொடுப்பார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற உழைப்பாளி மக்கள் தமிழ்நாட்டினுடைய நலனுக்காக, தமிழக மக்களுக்காக என்றைக்கும் இரக்கம் கொண்டவர்கள்; தங்களைத் தியாகம் செய்து கொண்டவர்கள்தான். ஆனால், வசதி படைத்தவர்கள் அப்படி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லி உரையை முடியுங்கள்.

*பிற்பகல் 2–50*

**திரு. சு. குணசேகரன்:** முடித்து விடுகிறேன். அந்த அடிப்படையில் இன்றைக்கு மத்திய பாரதிய ஜனதா கட்சி, அதைப்போல, கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி; இந்தக் கட்சிகளினுடைய மோசமான பொருளாதாரக் கொள்கைகளால், இன்றைக்குத் தமிழ்நாடு ஜல்லிக்கட்டு போன்ற

பண்பாட்டு விஷயங்களிலும், மொழிப் பிரச்சினையிலும், மிகப் பெரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. அதேபோல, தமிழ்நாட்டினுடைய நிதி ஆதாரம் குறைக்கப்பட்ட நிலையில், பல்வேறு வகைகளில் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சிக்கலான நிலையில்தான் இந்தியாவிற்கே வழிகாட்டுகிற விதமாக, ஒரு நல்ல ஆட்சியை, மக்களுக்கான ஆட்சியை, ஏழை எளிய மக்களுக்கான, விவசாயிகளுக்கான ஆட்சியை உருவாக்க வேண்டும் என்று. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 'MIOT மருத்துவமனை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று வருவாய்த் துறை நீதிமன்றத்தில் சொன்னது' என்று சொன்னார்கள். அது தவறான தகவல். அப்படி ஒரு தகவலை நீதிமன்றத்திலே வருவாய்த் துறை சொல்லவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சு. குணசேகரன்:** அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு ஒரு மாற்றுக் கொள்கையை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில், மக்கள் நலக் கூட்டணியை மகத்தான அளவில் நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். அந்த மக்கள் நலக் கூட்டணி, இதுவரை இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டின் அரசியலில், தொகுதி உடன்பாடு இல்லாமல், கொள்கைக்கான ஒரு கூட்டணியாக உருவாகியுள்ளது. அதுதான் முக்கியம். இதுவரை நாங்கள் அண்ணா தி.மு.க., தி.மு.க. கட்சிகளுடன் கூட்டணி வைத்து தேர்தலில் போட்டியிட்டிருக்கிறோம்; இல்லை என்று சொல்லவில்லை. அது ஒரு seating adjustment; அவ்வளவுதான். 'நாங்கள் இத்தனை தொகுதிகளில் நிற்கிறோம்; நாங்கள் உங்களுக்காக வேலை செய்கிறோம்; நாங்கள் உங்களை ஆதரிக்கிறோம்; நீங்கள் எங்களுக்கு vote போடுங்கள்' என்ற அடிப்படையில் கூட்டணி வைத்தோம். ஆனால், இப்பொழுதுதான் தமிழகத்தினுடைய சரித்திரத்திலேயே முதன்முறையாக குறைந்தபட்ச கொள்கையை முன்வைத்து, விவசாயிகளாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அவர்களுடைய



பிரச்சினைகளை முன்வைத்து, இந்தக் கூட்டணியை உருவாக்கியிருக்கிறோம். எனவே, இன்றைக்குப் பெரிய கட்சிகளாக இருக்கின்ற நீங்களெல்லாம், அந்தக் கொள்கையைப் புரிந்துகொண்டு, எங்களோடு இணைந்து, அந்தக் கொள்கையைக் காப்பாற்றுகின்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டுமேதவிர. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள், போகாத ஊருக்கு வழி தேடிச் சென்றுகொண்டிருக்கின்றார்; பாதை மாறிப் போகும்போது, என்றைக்குமே ஊர் போய்ச் சேர மாட்டீர்கள். நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, நீங்கள்தான் பேசிவிட்டீர்களே?

**செல்வி கே. பாலபாரதி:** எத்தனை வருடமாக இருந்தாலும், இந்தக் குதிரை நகரவே இல்லையே? ஆகவேதான், நாங்கள் ஒரு பாதையைக் கண்டுபிடித்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** எனவேதான், தமிழ்நாட்டினுடைய சரித்திரத்தில் ஒரு புதிய மாற்றத்திற்கான, ஒரு கொள்கைபூர்வமான அரசியல் கூட்டணியை உருவாக்கியிருக்கிறோம். இந்தக் கூட்டணிதான் மத்திய அளவிலும், மாநிலங்கள் அளவிலும் ஒரு மிகப் பெரிய வழிகாட்டுதலாக அமையப் போகிறது. இந்தியாவினுடைய தென் முனையில் தொடங்கி இருக்கிற இந்தக் கொள்கைக் கூட்டணி, இந்தியா முழுவதும் கூடிய விரைவில் ஒரு மகத்தான மாற்றத்தை உருவாக்கப் போகிறது; நம்மை கார்ப்பரேட் நிறுவனங்களும், உலக நிதி மூலதனமும் ஆக்கிரமித்திருக்கிற நிலையில், அந்தச் சுரண்டலை ஒழிக்கப் போகிறது; இந்திய மக்களையும், தமிழ்நாட்டு மக்களையும் மதச்சார்பற்ற தன்மையோடு வாழவைக்கப் போகிறது என்பதை காலம் உங்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் உணர்த்தும் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** உங்கள் கொள்கைக் கூட்டணிக்குத் தலைவர் யார்?

**திரு. சு. குணசேகரன்:** எங்கள் கூட்டணிக்கு ஒருங்கிணைப்பாளராக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் திரு. வைகோ அவர்களை நியமித்திருக்கிறோம். நீங்கள் கேட்டதைப்போல, முதல்வர் வேட்பாளர் என்பது ஜனநாயகத்திலேயே கிடையாது. இப்பொழுது ஒரு தவறான அரசியல் இந்தியாவில் நடந்துகொண்டிருக்கிறது; தமிழ்நாட்டில் நடக்கிறது. பிரதமர் வேட்பாளர் அல்லது முதலமைச்சர் வேட்பாளர் என்பது இப்போது அல்ல; முதலமைச்சர் என்பவரை தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள்தான் தேர்வு செய்ய வேண்டும். அந்த ஜனநாயகத்தை நிலைநாட்டுகிற ஒரு மகத்தான பணியை இன்றைக்கு மக்கள் நலக் கூட்டணி, தைரியமாக எடுத்து முன்வைத்திருக்கிறது. எனவே, இதுவரைக்கும் ஒரு *உண்மைக்கு மாறான புனைதலோடு, *உண்மைக்கு மாறான மேகங்களோடு இருந்த அரசியலில், ஒரு உண்மையான மேகத்தை உருவாக்கிக் காட்டுகிற வல்லமை இந்த அணிக்கு இருக்கிறது; கொள்கை உறுதி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது உண்மைக்கு மாறான என்று மாற்றப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி சீ. வளர்மதி அவர்கள்.

பிற்பகல் 2–55

***திருமதி சீ. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தை வென்று வாழும் கல்வெட்டு ஓவியத்தை வல்லரசும் வாழ்த்துகின்ற வல்லமையின் ஞானியை, தாள் பதிக்கும் இடமெல்லாம் தடம் பதிக்கும் தாயை, (மேசையைத் தட்டும் ஒலி) கருணைக் கடலை, கற்பக விருட்சத்தை, காவேரித் தாயை, காவல் தெய்வத்தை, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த மகராசியை, (மேசையைத் தட்டும் ஒலி) களவாணி கும்பலை விரட்டியடித்த

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கம்பீரத் தலைவியை, வணிகர் நலம் காத்த வல்லமைத் தாயை, மீத்தேன், GAIL, ஜல்லிக்கட்டு துஷ்டர்களைத் துரத்தியடிக்கும் துர்க்கையை, தாய் திட்டம் தந்து, தமிழக மக்களின் உள்ளத்தை மகிழ்விக்கும் உத்தமத் தலைவியை, இந்தியாவிற்கே வழிகாட்டும் வெற்றித் திருமகளை, அம்மா உணவகம், அம்மா திட்டம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம், அம்மா சிமென்ட், அம்மா திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம், Amma Seeds, அம்மா சேவை மையம், அம்மா அமுதம் பல்பொருள் அங்காடி, அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம், அம்மா செல்போன், அம்மா இலக்கிய விருது, அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம், அம்மா ஆரோக்கியா திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், அம்மா அழைப்பு மையம் என அகிலத்தில் அள்ளி வழங்கும் மணிக் கரத்தை, (மேசையைத் தட்டும் ஒலி) வசந்தத்தின் திருவுருவை, வானத்தின் மறுவுருவை, நாடுகின்ற செயல்களிலே நன்மையாகி, நல்லவர்கள் நெஞ்சுக்குள்ளே உண்மையாகி, ஓடுகின்ற வாழ்வுக்குள்ளே உறுதியாகி, உயிர்களுக்கெல்லாம் போற்றுகின்ற இறுதியாகி, எங்கள் இதயத்தில் என்றும் உறுதியாகி நிற்கும் உண்மைப் பொருளை, மனதாலே மெய்யாலே வணங்கி, இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது எனது உரையைத் தொடங்குகின்றேன். தாயே, தவமே, தயாபரியே, இச்சேயின் உரைக்குச் சீரான அருள்புரிவீர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் 60 ஆயிரத்து 610 கோடி ரூபாய் உத்தேசமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் மனித நேயத்தோடு மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக ரூபாய் 391.93 கோடி; சீர்மிகு தமிழகத்தின் திறன்மிகு நகரங்கள் திட்டத்திற்காக ரூபாய் 400 கோடி; குருவிக்கும் கூடு உண்டு என்பது அறிந்து, அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்திற்காக ரூபாய் 689 கோடி; பேரிடர் நிவாரண நிதிக்காக ரூபாய் 713 கோடி; டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு திட்டத்திற்காக ரூபாய் 668 கோடி; மாண்புமிகு முதலமைச்சரின் உயிர் காக்கும் விரிவான காப்பீட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 928 கோடி; போக்குவரத்துத் துறைக்காக ரூபாய் 1,590 கோடி;

சத்துணவுத் திட்டத்திற்காக ரூபாய் 1,645 கோடி; குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக ரூபாய் 1,802 கோடி; ஆதி திராவிடர் நலனுக்காக ரூபாய் 2,702.22 கோடி மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ரூபாய் 261.66 கோடி.

சிறுபான்மையினர் நலன் கருதி, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கான ஆண்டு நிருவாக மானியமாக ரூபாய் 1 கோடி; ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 2,800 கோடி; நீர்வள ஆதாரத் துறைக்காக ரூபாய் 3,673.91 கோடி; சமூகப் பொருளாதார வளர்ச்சியில் உயர் கல்விக்காக ரூபாய் 3,821 கோடி; உணவு மானியத்திற்காக ரூபாய் 5,500 கோடி; வேளாண்மைத் துறைக்காக ரூபாய் 6,938.57 கோடி; நெடுஞ்சாலைத் துறைக்காக ரூபாய் 8,486.26 கோடி; மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக ரூபாய் 9,350.66 கோடி; நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்காக ரூபாய் 12,194.21 கோடி; மின் துறைக்காக ரூபாய் 13,819.03 கோடி; மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக ரூபாய் 7,155 கோடி; ஊரக வளர்ச்சித் துறைக்காக ரூபாய் 18,503.80 கோடி; அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் திட்டத்திற்கு, திட்ட மதிப்பீடாக ரூபாய் 19,841 கோடி; பள்ளிக் கல்வித் துறைக்காக ரூபாய் 24,820 கோடி என உச்சமாய் நிதி ஒதுக்கிய நீள்நிலத் தலைவி, எங்கள் உன்னதத் தலைவி, உயிர் காக்கும் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.

திருமண உதவித் திட்டங்களின்கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில், 7 இலட்சத்து 72 ஆயிரத்து 643 பெண்களுக்கு ரூபாய் 2,537.74 கோடி பண உதவி அளிக்கப்பட்டது. திருமாங்கல்யத்திற்கு ரூபாய் 786.64 கோடி மதிப்பிலான தங்கம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 703 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு கடந்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 34,042.90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த அரசின் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 14,980.74 கோடி ரூபாயைவிட 127 சதவிகிதம் அதிகமாகும்.



பிற்பகல் 3—00

சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் சென்னை—ஓமந்தூரார் அரசினர் தோட்டம் ஆகிய மூன்று இடங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள்; புதுக்கோட்டை மற்றும் கரூரில் இரண்டு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருச்சியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு மருத்துவமனையில் ரூ.100 கோடியில் விபத்து சிகிச்சை மையத்தோடுகூடிய உயர் சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு நாட்டிலேயே அதிக அரசுக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை திகழச் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு 27 மாவட்டங்களிலும், கண்பார்வை பாதிக்கப்பட்டோருக்கு 9 மாவட்டங்களிலும், இக்குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சரிசெய்வதற்கான ஆய்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில், மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக ரூ.1,490.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த மைனாரிட்டி ஆட்சியில் ரூ.177.69 கோடியாக இருந்த மாற்றுத் திறனாளிகளுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடு, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் ரூ.391.93 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் பதின்மூன்றாவது நிதிக் குழுவின் நிதி உதவியைப் பயன்படுத்தி, கடந்த 5 ஆண்டுகளில் 250 பழமையான கோயில்கள் ரூ.90 கோடியில் சீரமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான அன்னதான திட்டத்திற்கு தினந்தோறும் ரூ.10.89 இலட்சம் செலவில் 724 கோயில்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. பழனி மற்றும் ஸ்ரீரங்கத்தில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

12 ஆயிரத்து 504 கோயில்களில் தலா ஒரு இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் ரூ.125.04 கோடி வைப்பீடு செய்யப்பட்டு, ஒரு கால பூஜைக்கு ஏற்பாடு செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ரூ.15.91 கோடி செலவில் 143 கோயில் தேர்களையும், ரூ.3.31 கோடி செலவில் 611 கோயில் குளங்களையும் புதுப்பிப்பதற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இராமேஸ்வரத்தில் உள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கத்தில் உள்ள அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், மலைக்கோட்டையில் அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள அருள்மிகு நாச்சியார் திருக்கோயில் உட்பட 8 ஆயிரத்து 620 கோயில்களுக்கு கும்பாபிஷேகமும் செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பசுமை வீடுகள் திட்டம், விலையில்லா மின் விசிறிகள், மிக்சிகள், கிரைண்டர்கள், விலையில்லா மடிக் கணினிகள், விலையில்லா சைக்கிள்கள் வழங்குதல் போன்ற பல முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருவதைக் கண்டு, பிற மாநிலங்களும் அவற்றைப் பின்தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களை யார் பின்தொடர்ந்தாலும் அவர்களுக்கு என்றும் முன்னேற்றம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். 1996–ல் ஒரு பெரியவர் சொன்னார்; ‘இதுதான் எனக்கு கடைசி தேர்தல்’ என்று, 2001–ல் அதே பெரியவர் சொன்னார்; ‘இதுதான் எனக்கு கடைசி தேர்தல்’ என்று; 2011–ல் மீண்டும் அதே பெரியவர் சொன்னார்; ‘இதுதான் எனக்கு கடைசி தேர்தல்’ என்று. ஆனால், பேராசை பிடித்த அந்தப் பெரியவர் தேர்தலில் நிற்பதைத் தவிர்க்கவே இல்லை. ஏனென்றால், அவர் தேர்தல்மூலம் மக்களை ஏமாற்றுவதையே தனது வாழ்நாள் கடமையாகக் கொண்டுள்ளார். அதேபோல, இந்த முறையும் கண்டிப்பாக தேர்தலில் போட்டியிடுவார், மக்களுக்காக அல்ல; தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக. ஆனால், இந்த முறை ஒட்டுமொத்த தமிழக மக்களும் உறுதியாக உள்ளார்கள். பெரியவருக்கு வரப்போகும் 2016 சட்டமன்றத் தேர்தலில் மக்களே முடிவு கட்டிவிடுவார்கள்.

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இல்லத்து உலைக்கு விலையில்லா அரிசி 20 கிலோ தந்த தாயே! தமிழக உரிமைகளை வென்றெடுத்த வெற்றித் தலைவியே! கறவை மாடும் ஆடும் தந்து, வறியோர் வாழ்விற்கு வழிகாட்டிய கருணைத் தாயே! காவேரி, முல்லைப் பெரியாறு போன்ற ஆறுகளின் உரிமைகளை மீட்டெடுத்து கடமையாற்றும் கம்பீரத் தலைவியே!



*(மேசையைத் தட்டும் ஒலி)* மின்வெட்டை வெட்டி எறிந்து, தமிழகத்தில் ஒளி வெள்ளம் பாய்ச்சிய மின்சாரத் தலைவியே! தாழ்ந்து கிடந்த தமிழகத்தை ஆழ்ந்த அறிவால், அயராத போராட்டங்களால் வாழ்வித்து, வழிகாட்டிவரும் வல்லமை கொண்ட எங்கள் தாயே! இந்தியத் திருநாட்டில் தமிழகத்தை தலைநாடாய் ஆக்கியுள்ள ஆற்றலின் சிகரமே! ஊன், உறக்கம் மறந்து உழைத்துவரும் அயராத தலைவியே! அரசைத் தேடி மக்கள் சென்ற காலத்தை மாற்றி, மக்களைத் தேடி அரசு இயந்திரங்களை வரவழைத்த *(மேசையைத் தட்டும் ஒலி)* பொற்காலம் படைத்த புதுமைத் தலைவியே!

தென்மதுரை தமிழை உலகெங்கும் ஒலித்திட செய்த வளர்தமிழ் அரசியே! தமிழ்மொழிக்காக தன் இன்னுயிரை நீத்த பழவூர் சின்னசாமிக்கு சிலை அமைத்த தமிழ்த் தாயே! பாமரனுக்குப் பசுமை வீடும் தந்து, அவர்கள் வாழ்வதாரம் பெருக பன்னாட்டு, உள்நாட்டு முதலீடுகளைப் பன்மடங்காக்கி ஆலைகளைப் பெருக்கிவரும் ஆற்றலின் திருவுருவே! தன் வாழ்வையே தமிழுக்குத் தந்தவர்களின் தன்னிகரில்லா சிறப்புகளை உயர்த்த, அவர்கட்கு மணிமண்டபம், நினைவுச் சின்னம் என பல அமைத்து தியாகத்தைப் போற்றுகின்ற எங்களின் தியாக திருவுருவே! பெண் குழந்தைகளின் நலனைக் காக்க தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் தந்த மாதரசியே! துறைதோறும், துறைதோறும் விருதுகள் பல வென்றும் தமிழகத்தை தலை நிமிர வைத்துள்ள தன்னிகரில்லா தலைவியே! வண்ணத்துப் பூச்சிகளுக்கும் வாழ்வு தந்த கருணைக் கடலே! தவறு இழைப்பவர்கள் யாராக இருந்தாலும், தயவு பாராமல் கண்டிக்கும் நியாயமே! தங்கத் தாரகையே! தங்கள் ஆட்சி நிலைக்க, தமிழக மக்கள் தவமாய்த் தவமிருக்கிறார்கள். ஆனால், மனசாட்சிக்கு எதிராய், மவுன சாட்சிகளாய் இருந்து, மக்கள் நமக்கு ‘மக்களாட்சி’ தருவார்கள் என்று இங்கே சிலர் மனப்பால் குடிக்கின்றார்கள். சிங்கமெனத் திகழ்பவரை இந்தச் சிறு நரிகள் பிடித்திடுமோ? தங்கமென ஒளிர்பவரைத் இந்தத் தகரங்கள் சிதைத்திடுமோ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மண் இன்றேல் பயிர் ஏது? பயிர் இன்றேல் வாடுகின்ற வயிறெல்லாம் நிறைவதேது? கண் எட்டாக் கடல் இன்றேல், மேகம் ஏது? கார்மேகம் இல்லையெனில், மழையே ஏதாம்? பெண்ணுருவில் உள்ள தெய்வம் அம்மா இன்றேல் தமிழகம் ஏது? தமிழர்கள் ஏது? தமிழ்மொழி

[திருமதி சீ. வளர்மதி] [2016 பிப்ரவரி 18

ஏது?' (மேசையைத் தட்டும் ஒலி) என்றிருக்கும் தமிழகத்து மக்களுக்குத் தங்களை விட்டால் நாட்டில் உரம் தோய்ந்த தலைவி ஏது? தங்கத்தாய் நல்லாட்சி தளராமல் தொடர்வதற்கு, எழுச்சிமிகு எழிலாட்சி எழிலாகத் தொடர்வதற்கு, வருகின்ற தேர்தலை நாம் வளமோடு வரவேற்போம்! பெருவெற்றி படைத்திடுவோம்! தாயின் நல்லாட்சி தரணியில் தொடர்வதற்கு சேய்களாய் நாம் நின்று சபதம் கொள்வோம்; சரித்திரத்தின் தேர்தல் இது என்பதை அழுத்தமாகச் சொல்லி, இடைக்கால நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி எங்கள் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 19–2–2016 வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 3–08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*29. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*30. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*31. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 8(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*



2016 பிப்ரவரி 18]

*32. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 8(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*33. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 12 நல வாரியங்களின் எட்டாவது ஆண்டறிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 8(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*34. 2007–2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 12 நல வாரியங்களின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 8(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*35. 2008–2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 13 நல வாரியங்களின் பத்தாவது ஆண்டறிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 8(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*36. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 8(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

[2016 பிப்ரவரி 18

*37. 2010–2011* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர *15* நல வாரியங்களின் பன்னிரண்டாவது ஆண்டறிக்கை. [*1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *33/1982*) *8(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*38. 2011–2012* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர *15* நல வாரியங்களின் பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [*1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *33/1982*) *8(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*39. 2012–2013* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர *15* நல வாரியங்களின் பதினான்காவது ஆண்டறிக்கை. [*1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *33/1982*) *8(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*40. 2013–2014* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர *15* நல வாரியங்களின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [*1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *33/1982*) *8(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*41. 2014–2015* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர *15* நல வாரியங்களின் பதினாறாவது ஆண்டறிக்கை. [*1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *33/1982*) *8(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



2016 பிப்ரவரி 18]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*65.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று ஐம்பத்தொன்பதாவது அறிக்கை. *(2015–2016)*

*66.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபதாவது அறிக்கை. *(2015–2016)*

*67.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்தொன்றாவது அறிக்கை. *(2015–2016)*

*68.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்திரண்டாவது அறிக்கை. *(2015–2016)*

*69.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்து மூன்றாவது அறிக்கை. *(2015–2016)*

*70.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்து நான்காவது அறிக்கை. *(2015–2016)*

*71.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்தைந்தாவது அறிக்கை. *(2015–2016)*

*72.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்தாறாவது அறிக்கை. *(2015–2016)*

*73.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்தேழாவது அறிக்கை. *(2015–2016)*

*74.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்தெட்டாவது அறிக்கை. *(2015–2016)*

*75.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்தொன்பதாவது அறிக்கை. *(2015–2016)*

*76.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எழுபதாவது அறிக்கை. *(2015–2016)*

*77.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எழுபத்தொன்றாவது அறிக்கை. *(2015–2016)*

*78.* பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எழுபத்திரண்டாவது அறிக்கை. *(2015–2016)*

****